Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 29 திங்கட்கிழமை (13.01.2014) பக்கங்கள் 20 ஓசை - 104

14




இருளில்

18



மேன்முறையீடு

## உழவர் திருநாளை முன்னிட்டு யாழில் முத்திரை வெளியீடு



(யாழ்ப்பாணம்)

உழவர் தினத்தை முன்னிட்டு தைப்பொங்கல் தினத்தையும், உழவர்களின் பெருமையினையும் பிரதிபலிக்கும் வகையில் யாழ்ப்பாணத்தில்

19 ஆம் பக்கம் பார்க்க

## தெரிவுக்குழுவின் மூலமாகவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு

### யாழில் தெரிவித்தார் பிரதமர்



(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தீர்வுக்கு அமையவே இனப்பிரச்சினைகான நிரந்தர தீர்வை ஜனாதிபதி முன்வைப்பார் என பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்தார்.

நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு தபால் திணைக்களத்தால் நேற்றைய தினம் இரு முத்திரைகள் வெளியிடப்பட்டன. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டு மக்களை பிளவுபடுத்தி இளைய சமுதாயத்தை குழப்பி பிரச்சினைகளை உருவாக்க வெளிநாட்டில் சில சக்திகள் முனைவதை அறிவோம். எமது நாடு சிறிய நாடு. மூவின மக்களும் ஒற்றுமையாக வாழும் போது இங்கு பிரிவினையை ஏற்படுத்தினால் எமது சமுதாயங்களின் நிலை என்னவாகும் என எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வெளிநாடுகள் சிலவற்றில் இப்போது இடம்பெறும் பிரிவினைவாதப் போரினால் பலர் பலியாகின்றனர். இவ்வாறு எமது நாட்டிலும் இடம்பெறாதிருக்க வேண்டும். இதற்கு புத்திஜீவிகளான நீங்கள்தான் சிந்தித்து செயலாற்றவேண்டும்.

முப்பது வருட கால யுத்தத்தின்

19 ஆம் பக்கம் பார்க்க

# சென்னையில் மீனவர் சந்திப்பு நடைபெறுவதில் சந்தேகம்

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு



(லண்டன்)

தமிழக - இலங்கை மீனவர்கள் இடையே சென்னையில் எதிர்வரும் 20 ஆம் திகதி பேச்சுவார்த்தை நடக்குமென தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ள போதிலும், அந்தக் கூட்டம் சாத்தியப்படாதென இலங்கை மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்துள்ளார்.

சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் 179 பேரை விடுதலை செய்யவுள்ளதாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

அதேநேரம் இலங்கைச் சிறைகளில் உள்ள இந்திய மீனவர்கள் 275 பேரையும் இலங்கை அரசு ஓரிரு நாட்களில் விடுவிக்கும்" என்றும் அவர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

எனினும், தமிழகத்தில் மட்டுமன்றி ஆந்திராவிலும் இலங்கை மீனவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் ராஜித, எல்லா இலங்கை மீனவர்களும் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களை விடுவிப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் இலங்கை அரசு இன்னும் எடுக்கவில்லை என்றும்

19 ஆம் பக்கம் பார்க்க

## சிறுவர்களின் எலும்புக்கூடுகள் மன்னாரில் மீட்கப்படவில்லை

### ஊடக செய்தியை மறுக்கிறது பொலிஸ்

(கொழும்பு)

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் தோண்டப்படும் மனிதப் புதைகுழியிலிருந்து சிறுவர்கள் எவரது எலும்புக்கூடுகளும் மீட்கப்படவில்லையென பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளில் சிறுவர்களின் எலும்புக்கூடுகளும் உள்ளடங்குவதாக ஊடகங்களில் வெளிவந்த செய்தியையும் அவர் மறுத்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் சுட்டுவீழ்த்திய விமானத்தில் 11 பேர் அடையாளம் காணப்பட்டனர்



(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டு இரணைமடு தீவுக் கடலில் வீழ்ந்த அன்ரனோவ் 24 ரக விமானத்தில் பயணித்து உயிரிழந்தவர்களின் மீட்கப்பட்ட பொருட்கள் மற்றும் ஆடைகளைக் கொண்டு 11 பேரை அவர்களது உறவினர்கள் அடையாளம் கண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விமானத்தில் பயணித்து உயிரிழந்தவர்களை அடையாளம் காணும் நோக்கில் அவ் விமானத்திலிருந்து மீட்கப்பட்ட பொருட்கள் நேற்றைய தினம் இரண்டாவது நாளாக யாழ். சுப்பிரமணியம் சிறுவர் பூங்காவிற்கு முன்பாக உள்ள

19 ஆம் பக்கம் பார்க்க

## சமூகவிரோத கிரிமினல்களை சந்தித்த வடக்கின் முதல்வர்?

(கொழும்பு)

முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரும், வடக்கின் முதலமைச்சருமான சி.வி விக்னேஸ்வரன் நேற்றைய தினம் மகசீன் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளை அல்ல சமூக விரோத கிரிமினல் குற்றச்சாட்டுக்களில் கைதாகி தடுத்து வைக்கப்பட்டு உள்ள கைதிகளையே பார்வையிட்டுள்ளதாக இணையத்தளமொன்று தெரிவித்துள்ளது.

சிறைக் கைதிகளுடனான நேற்றைய சந்திப்பில் மாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான சயந்தன் மற்றும் முதலமைச்சரின் விசேட பிரத்தியேக செயலாளர் மன்மதராசா உள்ளிட்டோர் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் தைப்பொங்கலை அடுத்து தமிழ் சிறைக்கைதிகளை பார்வையிடப் போவதாக சிறைச்சாலை நிர்வாகத்திடம் முதலமைச்சரின் அலுவலகம் அனுமதி கோரி இருக்கிறது. அந்த அனுமதிக் கோரிக்கை கடிதத்தில் இந்துக் கைதிகளை பார்வையிடப் போவதாக முதலமைச்சரின் அலுவலக சிறப்புத் தேர்ச்சி பெற்ற அதிகாரிகள் அனுமதி கோரியிருக்கின்றனர். அந்தக் கோரிக்கைக்கு அமைவாக ஒவ்வாரு சிறைக் கூடத்தில் இருந்தும் இருவர் வீதம் தெரிவுசெய்யப்பட்ட கைதிகளை

19 ஆம் பக்கம் பார்க்க

### மூன்று தேவாலயங்கள் மீது தென்பகுதியில் தாக்குதல்

(கொழும்பு)

தென்பகுதியில் நேற்றுக் காலை மூன்று தேவாலயங்கள் தாக்கப்பட்டதாக கிறிஸ்தவக் குழுக்கள் தெரிவித்துள்ளன.

தாக்குதலில் எவருக்கும் காயம் எதுவும் ஏற்படாவிட்டாலும், தேவாலயம் ஒன்றைச் சேர்ந்த ஒருவருக்கு கொலை மிரட்டல் விடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் தெற்கே ஹிக கடுவை

19 ஆம் பக்கம் பார்க்க

## யுத்தம் நிறைவடைந்த நிலையில் ஜெனிவாவில் தீர்மானங்கள்

### அமைச்சர் பசில் விசனம்


(கொழும்பு)

இலங்கையில் முப்பது ஆண்டுகளாக போர் நடைபெற்ற வேளை, ஜெனிவாவில் எந்தவொரு யோசனைத் திட்டம் கூட முன்வைக்கப்படவில்லை. மாறாக யுத்தம் நிறைவடைந்த நிலையிலேயே தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போர் இடம் பெற்ற காலத்தில் ஜெனிவா பிரதிநிதிகள் எவரும் கவலைப்படவில்லை.

பதுரலிய பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இவ்வாறு

19 ஆம் பக்கம் பார்க்க





தைப்பொங்கல் தினத்தை பிரதிபலிக்கும் முத்திரை வெளியீட்டு விழா நேற்று நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதமர் தி.மு. ஜயரட்ணவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வரவேற்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட குருமாருடன் பிரதமர் மற்றும் அமைச்சர், யாழ். மாநகர முதல்வர், ஆளுநர் நிற்பதனையும், நிகழ்வில் இடம்பெற்ற கலை நிகழ்வையும் காணலாம். படங்கள்: ஆர்.இராஜகுமார்.

# தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி கடமைகளை சிறப்பாக முன்னெடுப்பவர்

## – அமைச்சர் டக்ளஸிற்கு பிரதமர் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

இந்நாட்டின் சமத்துவம் சகோதரத்துவத்திற்கு சிறந்த உதாரண புருஷராக வாழ்ந்துவரும் அதேவேளை, தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி தமக்குரிய கடமைகளை சிறப்பாக முன்னெடுத்து வருபவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என பிரதமரும், புத்த சாசன மற்றும் மத விவகாரங்களுக்கான அமைச்சருமான தி.மு.ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்ற உழவர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு அஞ்சல் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட இருவேறு தபால் முத்திரைகளை வெளியிட்டு வைக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினதும் வேண்டுகோளின் பெயரில் தைப்பொங்கலை முன்னிட்டு இருவேறு தபால் முத்திரைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

ஆயிரக்கணக்கான வருடங்களாக இந்நாட்டில் இந்து மக்கள் தைப்பொங்கல் திருநாளை கொண்டாடி வருகின்றனர் என்பதுடன் இந்து மக்களுக்கு தைப்பொங்கல் போன்று தான் சிங்கள பௌத்த மக்களாகிய நாம் சித்திரைப் புத்தாண்டை கொண்டாடி வருகின்றோம்.

இந்நாட்டில் வாழுகின்ற மக்கள் சமத்துவமும் சகோதரத்துவமும் உள்ளவர்களாக ஒற்றுமையுடன் ஒன்றிணைந்து வாழவேண்டும் என்பதற்காகவே ஜனாதிபதி எவ்வித வேறுபாடுகளுமின்றி மக்களுக்கான பணிகளை முன்னெடுத்து வருகின்றார்.

இவ்வாறு சமத்துவம் சகோதரத்துவத்திற்கு சிறந்த உதாரண புருஷராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வாழ்ந்து வரும் அதேவேளை, மக்களுக்கான சேவைகளையும், தனது கடமைகளையும் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றார். வட பகுதி மட்டுமல்லாது தமிழ் பேசும் மக்களின் நலன்சார்ந்த விடயங்கள். தொடர்பாக அடிக்கடி நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என்றும் சுட்டிக் காட்டினார்.

30 வருடகால யுத்தத்திற்கு பின்னர் வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு அரசு அதிகளவிலான நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளதுடன் பாரிய கட்டமைப்புக்களையும் முன்னெடுத்து வருகின்றது. வடக்கின் அபிவிருத்திக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிறந்த வழிகாட்டியாக செயற்படுகின்றார்.

இவ்வாறான அரசினால் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்திகளின் ஓர் அங்கமாகவே யுத்தத்திற்கு பின்னர் 193 ஆலயங்களுக்கு எமது அமைச்சின் ஊடாக புனரமைப்பிற்கான நிதியினை வழங்கியுள்ளோம். தொடர்ந்தும் இவ்வாறான அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்க அரசு தயாராகவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினதும், ஒத்துழைப்புடன் இங்குள்ள மக்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வினைக் காணும் பொருட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்ற தெரிவுக்குழுவை நியமித்துள்ள நிலையில் வடபகுதி புத்திஜீவிகள், கல்விமான்கள் மற்றும் மக்களது கருத்துக்களையும் அக்குழுவிற்குள் உள்வாங்குவதற்கும் தயாராகவிருக்கின்றார்.

நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சியினரதும், எதிர்க்கட்சியினரதும் நன்மதிப்புக்குரியவரும், பாராட்டுக்குரியவருமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விளங்கி வருகின்றார். என்றார்.

## வருடாந்த பொதுக்கூட்டம்

வடமாகாண புற்றுநோய் - எய்ட்ஸ் தடுப்புச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள நியூ யாழ். வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற உள்ள நிகழ்வில் புதிய ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவும் நடைபெறவுள்ளது.


பாராட்டி வாழ்த்துகிறோம்



10.01.2014 அன்று நிகழ்வுற்ற யாழ்.பல்கலைக்கழகத்தின் 29 ஆவது பட்டமளிப்பு விழாவில் முதுகலைமாணி பட்டம் பெற்றதையிட்டு

ஜெகதீஸ்வரக்குருக்கள் மயூரன் (M.A) அவர்கள்

அன்னை ஜெ.ராஜலட்சுமி அம்மாவின் ஆசியுடன், மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சிறப்புற வாழ்த்துகிறோம்.

வாமதேவசர்மா மதுரா (ஜெர்மனி)
விஜயராஜசர்மா பவித்திரா (கொழும்பு)
ஜெ.செந்தூரா, ஜெ.திவ்யா

நுணாவில் மேற்கு
சாவகச்சேரி

(C/3285)


## உளவளத்துணையாளர்களுடன் இன்று கலந்துரையாடல்

வட மாகாணத்தில் கடமையாற்றும் உளவளத் துணையாளர்களுடனான கலந்துரையாடலொன்று இன்று வட மாகாண கல்வி அமைச்சில் இடம்பெறவுள்ளது.

யுத்தம் காரணமாக பாதிப்படைந்த மாணவர்களின் உள மேம்பாட்டை விருத்தி செய்யும் செயற்பாடுகள், அவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் திட்டங்கள் தொடர்பாக இதன்போது ஆராயப்படவுள்ளன.

வட மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் உளவளத்துணையாளர்களை இதில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2495 திகதி 11-01-2014

ஆங்கில எழுத்து: N

வெற்றி எண்கள்: 12 29 50 62

போனஸ் இல: 31

ஜக்பொட் பரிசு ரூ.10,000,000/-வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 228963 | 20/- | 4,579,260/- |
| 2 இல | 16452 | 100/- | 1,645,200/- |
| 3 இல | 347 | 1,000/- | 347,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9005 | 40/- | 360,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 641 | 1,000/- | 641,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 13 | 10,000/- | 130,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 10,000,000/- | - |
| 1 இல + போனஸ் இல | 10909 | 100/- | 1,090,900/- |
| 2 இல + போனஸ் இல | 513 | 500/- | 256,500/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 430 | 200/- | 86,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 24 | 1,500/- | 36,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 267304 | | 11,672,060/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014 ஜனவரி 15 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 10,625,200/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3266)


# கைதடி மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்

கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகத்தினால் டென்மார்க் நாட்டிலுள்ள கைதடி மக்களின் நிதி அனுசரணையில் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வு நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

கழகத்தின் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் கைதடி தெற்கு சனசமூக நிலைய கலை அரங்கத்தில் நடைபெற உள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக உலக உணவுத் திட்டத்தின் ஓய்வுநிலை அதிகாரி மறவன்புலவு க.சச்சிதானந்தம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக பண்டாரவளை கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவசம்பு மதியழகன், கைதடி முத்துக்குமாரசுவாமி அதிபர் சி. பவளகுமாரன் ஆகியோரும்,

கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களான ஜெ.சிற்சபாநாதன், திருமதி ஜானகி இராசேந்திரம், யாழ்நகர் துசா மூக்குக் கண்ணாடி வியாபார நிலைய உரிமையாளர் து.மகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் கழகத்தின் நிதி தேவைக்காக விற்கப்பட்ட அதிஷ்ட இலாபச் சீட்டு குலுக்கலும் நடைபெறும். (90)

# கரவெட்டி வாழ்வெழுச்சித் திணைக்களத்தின் முதற்கட்ட வாழ்வாதாரச் செயற்பாடு



(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலக வாழ்வெழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுச் சபைக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த வியாழக் கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

நாடுபூராகவுமுள்ள சமுர்த்திவங்கிச் செயற்பாடுகளை வாழ்வெழுச்சித் திணைக்களத்திற்கு மாற்றும் செயற்பாட்டின் கீழ் கரவெட்டி பிரதேச செயலக வாழ்வெழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இத்திணைக்களத்தின் புதிய செயற்பாடுகளை மேற் கொள்ளும் வகையில் இக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் நெல்லியடி ஸ்ரீ நாரதா வித்தியாலயத்தில் கல்வி கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிக்கு துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பொது மக்களுக்கு கரவெட்டி, நெல்லியடி, வாழ்வெழுச்சி த்திணைக்களத்தால் பலதரப்பட்ட நன்மைகள் பெறப்பட்டு வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டில் 12 இலட்சம் ரூபா இலாபம் ஈட்டப்பட்டுள்ளது என பிரதேச செயலர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.கரவெட்டி பிரதேச பொறுப்பாளர் செந்தில் நாதன், சபை உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவருமான சந்திரசேகரன் நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி கங்கார, நெல்லியடி வாழ்வெழுச்சித் திணைக்கள முகாமையாளர் ச.உதயகுமார், திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (18)

## விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிப் பரீட்சை; மாணவரை தயார்படுத்துமாறு அறிவுறுத்து

(அச்சுவேலி)

கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கமைய வழமை போன்று இவ்வருடமும் நடைபெறவுள்ள தேசிய மற்றும் சர்வதேச விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிப் பரீட்சைக்கு 2013ஆம் ஆண்டில் தரம் 6, 7 வகுப்புக்களில் கற்ற மாணவர்களில் இருந்து தெரிவு செய்வதற்கு பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்வோரின் விபரங்களை பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள மாதிரி அட்டவணையைப் பூர்த்தி செய்து தாமதமின்றி விஞ்ஞான உதவிக்கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளரினால் அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 2013ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 174 புள்ளிகளுக்கு மேல் பெற்று தரம் 6 இல் கல்வி கற்றுவரும் மாணவர்கள், மற்றும் 2013இல் தரம் 6, 7இல் விஞ்ஞான பாடத்தில் இறுதித் தவணைப் பரீட்சையில் 80 இற்கும் மேற்பட்ட புள்ளி களைப் பெற்ற 2014 டிசம்பர் 31 இல் 13 வயதின் கீழான மாணவர்களின் விபரங்களே கேட்கப்பட்டுள்ளன.

மேலும் 2013இல் தரம் 6, 7 இல் விஞ்ஞான பாடத்தில் இறுதித் தவணைப் பரீட்சையில் 80 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்களை இப்போட்டிக்கு தெரிவு செய்வதற்கான வலய மட்டப் போட்டிப் பரீட்சை தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்படுவதுடன் இப்பரீட்சை வினாத்தாள் தரம் 6,7,8 பாடத்திட்டத்தை உள்ளடக்கியதாக அமையும் என்பதால் மாணவர்களுக்கு அது தொடர்பான உரிய பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (03)

## பொங்கல் விழா நல்லூரில் கலையரங்கு

(யாழ்.நிருபர்)

தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடாத்தும் பொங்கல் தின சிறப்புக்கலையரங்கு நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு இளங்கலைஞர்மன்ற கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அரியாலை கீதவாஹினி இசைக்கல்லூரி மாணவிகளின் வாய்ப்பாட்டிசையும் கிருஷ்ணப்பிரியா ஆனந்தராசாவின் இசையரங்கும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து கலைவாரிதி செல்வி சி.பேரின்பநாயகியின் வடமராட்சி குருஷேத்திரம் நாட்டியப்பள்ளி வழங்கும் நாட்டிய நாடகமும் இடம்பெறும்.

இந்நிகழ்வுகளை கல்விக்காருண்யன் புரவலர் இ.ச.பே.நாகரத்தினம் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார். (10)



சம்பத்வங்கி திருநெல்வேலிக்கிளை சமூக நோக்குடன் கூடிய சேவையாக அராலிப் பகுதியில் 100 மரக்கன்றுகளை நாட்டியுள்ளது. நிகழ்வில் சங்கானை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் சிவகுமார், சம்பத்வங்கி முகாமையாளர் முரளீதரன், வங்கி ஊழியர்கள் என பலர் கலந்துகொண்டனர். (54)




## நோயிலிருக்கும் வாழ்க்கை...

இந்த ஆண்டு மாரி பொய்த்து விட்டது. 'மனிசரே பொய்யாக இருக்கும்போது மாரி பொய்த்தால் என்ன?' என்று நீங்கள் கேட்பது எனக்கும் கேட்கிறது.

'நல்லார் ஒருவர் பொருட்டுப் பெய்யுமாம் பெருமழை' என்ற காலம் போய்விட்டது. இதைச் சரியாகச் சொன்னால், 'நல்லார் ஒருவரேனும் இருந்த காலமே போயிற்று' என்பேன்.

செய்நன்றி கொன்ற மனிதராகவே நாமெல்லாம் மாறிய பின் மாரிபொழியும் என்று எப்படி எதிர்பார்ப்பது?

'அரசாங்கத்திடமிருந்து எல்லாவற்றையும் வாங்குங்கள். ஆனால், தேர்தல் என்றால் வாக்கை மட்டும் எங்களுக்குப் போடுங்கள்' என்று சில தூயஅரசியல்வாதிகள்....

'வாங்கு மட்டிலும் வாங்கிக் கொள்வோம். தேர்தல் என்று வந்தால் எங்கள் விளையாட்டைக் காட்டுவோம்' என்று இந்த அரசியல்வாதிகளுக்குப்பின்னே நிற்கும் வால்பிடிகளும் அவர்களுடைய தொண்டரடிப்பொடிகளும்.....

சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்றும் இயற்கை பேணுவோம் என்றும் சொல்லிக்கொண்டு இயற்கை வளங்களை அழித்து அழித்தே தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ளும் பிரமுகர்கள்....

தலைக்கு ஒன்று என்ற கணக்கில் வண்டி, வாகனம், கணனி... என எல்லாவற்றையும் தனித்தனியாக பயன்படுத்தும் வேகத்தில் தனிமனிதத்தேவைகளுக்காக இயற்கையை அழிக்கும் அக்கிரமத்தில் வசதி வாய்ப்புகளைக் கொண்டவர்கள்....

காடழிந்தால் நமக்கென்ன? கடல் அழிந்தால் எனக்கென்ன? என்ற எண்ணத்தோடு இயங்கிக்கொண்டிருக்கும் சமூக அக்கறையற்றவர்கள்....

கல்வியையும் மருத்துவத்தையும் இலகுவாக விற்கலாம் என்று தொழிலாற்றும் வினையர்கள்...

இப்படியே எல்லாவழிகளிலும் அறம் பிழைத்தால் அவற்றின் விளைவு இப்படித்தான் மாரி பொய்த்ததாக, காலநிலை மாறியதாக, பருவம் பிழைத்ததாகத்தான் இருக்கும்.

இதில் யாரையும் நொந்து பயனில்லை.

நாம் பிழைத்தால் நமது வாழ்வு பிழைக்கும் என்று முன்னோர் சொன்னார்கள்.

அது அனுபவம் கண்டறிந்த பேரறிவு.

அதனால் அவர்கள் தங்கள் வாழ்வை அறத்தின் பால் நின்று ஒழுகினர்.

இயற்கையோடு அவர்கள் அறநிலைப்பட்டே இணைவு கண்டு வாழ்ந்தனர்.

அவ்வாறே தங்கள் வாழ்க்கைத் தெரிவுகளையும் தேவைகளையும் அரசியல் நிலைப்பாடுகளையும் கோட்பாடுகளையும் உருவாக்கித் தேர்ந்தனர்.

அந்தக் காலங்களிலும் அற வீழ்ச்சியும் அநீதியின் ஆட்சியும் ஏற்பட்டனதான்.

ஆனாலும் மனித அடிப்படைகளைப் பேணவேண்டும் என்ற நோக்கின் வேர்கள் காய்ந்து விடவில்லை.

பொய்யும் புரட்டும் கோலோச்ச முனைந்த போதெல்லாம் அறிவைக் கொண்டியங்குவோர் அதற்கெதிராகக் கலகமிட்டனர்.

'மன்னவனும் நீயோ வளநாடும் உனதோ?' என்று கேட்ட குரல் அப்படியான ஒன்றுதான்.

'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்றதும் அப்படியான குரல்தான்.

ஆனால், இந்தக் குரல்களைப்போல இன்று எந்தக் குரலும் இல்லை.

இனவாதப் போதையேறி, வரலாற்றுக்குருடர்களாகி விட்ட அவலமே இன்று நம்முன்னே விரிந்து கிடக்கிறது.

வாழ்க்கை பற்றிய நோக்கு சிதைந்து சீரழிந்து போகிறது.

அரசியல் விழிப்புணர்வு என்பது நோய்பிடித்த ஒன்றாகி விட்டது.

எஞ்சியிருப்பது அரசியற் குருட்டுத்தனமே. இந்தக் குருட்டுத்தனத்துக்கே தியாகப்பூச்சுகளும் புனித மாலைகளும் சூட்டப்படுகின்றன.

உண்மையைச் சொல்லும் வாய்களில் ஒன்றில் பூட்டுப்போடப்படுகிறது. அல்லது சேறு தீத்தப்படுகிறது.

இதைப் பார்த்து ரசிக்கிறார்கள் பலர். இந்தப் போக்குத்தான் பெரும் பயிராக வளர்கிறது.

இப்படியெல்லாம் இருந்தால் மாரி பொய்க்காமல் மழையா கொட்டித்தீர்க்கும்?

இந்தப் பெரும்போக்கு அலையைக் கணக்கில் கொண்டுதான் 'இந்த எருமைச்சாதியை என்செய்வேன்...?' என்று மனம் வெம்பிப்பாடினார் பாரதி.

'நம்மை மதிக்கமாட்டார்களே, பழிப்பார்களே, எதிர்ப்பு பலமாகிவிடுமே என்கிற உலக அபிமானமும் பயமும் பலக்குறைவும் யாரிடத்தில் இருக்கிறதோ அவர்கள் ஒருகாலமும் உண்மையான சீர்திருத்தத்திற்கு உதவமாட்டார்கள். அக்குணங்களுடன் கூடியவர்களால் நடைபெறும் எவ்வித சீர்திருத்தமும் ஒருக்காலும் பயனளிக்கவே முடியாதது' என்றுரைத்தார் தந்தை பெரியார்.

'என்னைத் துறந்தே இந்தச் சமூகத்தை வளர்ப்பேன்' என்றனர் ஆயிரக்கணக்கான போராளிகள்.

ஆனாலும் என்ன?

யார்தான் இதை உணர்ந்து தம்மைத் திருத்திக்கொள்ளத் தயார்?

மனிதனின் வலிமையை அழிப்பவை மூன்று; அவை அச்சம், தேவையில்லாத பிரயாணம், பாவம் என்பனவாகும். - ஹீப்ரு பழமொழி

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## பழைய குப்பைகளைப் பொசுக்குவோம்!

இன்று மார்கழிக் கடைசிநாள். பழைய குப்பைகளை அழித்து மகிழ்ச்சி பொங்கும் புதிய நாளை வரவேற்கக் கொண்டாடப்படும் பண்டிகை நாள்.

குப்பைகள் ஒன்றுக்கும் உதவாத யாருக்கும் பிரச்சனையில்லாத குப்பைகளாக மட்டுமேயிருந்து குப்பைகளாகவே வாழ்ந்து அப்படியே மக்கி மண்ணோடு மண்ணாகிப்போனால் யாருக்கு பிரச்சினை! ஆனால் அவை நம் உயிருக்கே உலை வைக்கவல்ல எமனாக மாறிவருவது அடுத்த தலைமுறையின் எதிர்காலம் குறித்தும் பயத்தினை உண்டாக்குகிறது.

நம் சந்ததிகளுக்கு இந்த பூமியில் எதை மிச்சம் வைத்துவிட்டுப்போக போகிறோம் குப்பைகளையா சுத்தமான சுற்றுச்சூழலையா என்பதை இப்போதே முடிவு செய்யவில்லையெனில் நாளை அதற்கான வாய்ப்பேயில்லாமல் போகலாம்!

நம்மைச் சுற்றி ஒவ்வொருநாளும் தொன் கணக்கில் குப்பைகள் சேர்கிறது. அதிகரிக்கும் பிளாஸ்டிக் பயன்பாட்டால் கிராமங்களும் குப்பைகளுக்கு பலியாகும் நிலை உண்டாகியிருக்கிறது. நிலங்கள் பாழாகின்றன.. நீர்நிலைகள் அழிகின்றன.. மக்களின் உடல்நலம் உயிருக்கும் ஆபத்து..

இந்தக் குப்பைகளை கொட்டி கொட்டி குவித்து வைப்பதால் நாளடைவில் அது மெதேன் வாயுவை உண்டாக்கும். குப்பை மேடுகளில் எப்போதும் புகை வந்துகொண்டிருப்பதை நாம் பார்க்க முடியும். காரணம் இந்த மெதேன்தான்!

மெதேன் வாயுவை தொடர்ந்து சுவாசிக்கும் மக்களுக்கு சுவாசக்கோளாறுகள் தொடங்கி புற்றுநோய்கூட உண்டாவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அணுக்கதிர்வீச்சால் உண்டாகலாம் என்று நாம் அஞ்சுகிற அனைத்துவிதமான உயிர்க்கொல்லி நோய்களையும் ஏற்படுத்தும் சக்தி குப்பைகளுக்கும் உண்டு!

விஷத்தன்மையுள்ள பொருட்களை குப்பைகளில் எறிந்து விடுகிறோம். அவை நிலத்தடி நீரோடு கலந்து பல நூறு கிலோமீற்றர்களுக்கு பூமிக்கு கீழே பயணிக்கின்றன. எங்கோ மாசுபடுத்தப்பட்ட நிலத்தடி நீரை எங்கோ ஒருவர் உபயோகித்து பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புகளை கண்டறிந்துள்ளனர்.

மக்களாகிய நம்மிடம் முதலில் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். ஒரு பிளாஸ்டிக் பையை வாங்குவதற்கு முன்பாகவும், குப்பைத்தொட்டியில் எல்லா குப்பைகளையும் கலந்து கொட்டும் போதும் ஒரே ஒரு நிமிடம் நம் குழந்தைகளின் எதிர்காலம் குறித்து சிந்திப்போம். நமது மூதாதையர்கள் நமக்காக விட்டுச்சென்ற அழகான பூமியை குப்பைகூளமாக மாற்றிவிட்டோம் என்பதை உணருவோம்.

அந்தக் குப்பைகள் மட்டுமில்லை நம் மனங்களினுள்ளும் ஏராளம் குப்பைகளைச் சேர்த்து வைத்திருக்கிறோம். அவற்றைக் கழிக்காமல் நமக்கு மீட்சியில்லை. நமது இன்றைய நிலைமைகளுக்கும் துன்பங்களுக்கும் நம் மனதிலுள்ள எந்தெந்தக் குப்பைகள் காரணமாக இருக்கின்றன என்று இனங்கண்டு அவற்றை வெளியே எறிந்தாக வேண்டும்.

பழைய குப்பை எண்ணங்களை நமக்குள் வைத்துக்கொண்டு அதனாலுண்டான அவலங்களிலிருந்து மீண்டுவிட முடியாது. அவற்றை அகற்றி புதிய உலகுக்கேற்ற புதிய வாழ்வுக்கேற்ற புதிய எண்ணங்களை ஏற்படுத்திக்கொள்வதே நமக்கான மீட்சி.

சேதனமாக வெளியே குவியும் குப்பைகளின் ஆபத்தை விட, நம் மனங்களினுள் குவிந்திருக்கும் குப்பைகளினால்தான் நம் சீரழிவு அதிகம் என்பதை விளக்கிக் கொண்டிருக்கத் தேவையில்லை. இந்தப் பண்டிகை நாளைச் சாக்கிட்டு இரண்டு குப்பைகளையுமே கொளுத்திவிட முடிந்தால் நமக்கு வெற்றிதான்.

ஒவ்வொருவரும் உள்ளே சேர்த்து வைத்திருக்கும் குப்பைகளை அவரவர்கள் அறிவோம். நம் குழந்தைகளை உத்தேசித்தாவது அவற்றை நீக்கிவிட அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

- ஆசிரியர்.

# வீதிப்புனரமைப்புக்கு முட்டுக்கட்டை தடைகளை நீக்க நடவடிக்கை

## வலி.தென்மேற்கு பிரதேச செயலர் ஏற்பாடு

(வலி.மேற்கு)

வலி.தென்மேற்கில் உள்ள பிரான்பற்று நல்லுண்ணி வீதி புனரமைப்புக்கு ஒரு சில குடும்பம் முட்டுக்கட்டையாக உள்ளது.

இதனால் குறித்த வீதிப் பகுதியில் புனரமைப்பை இடைநிறுத்தியுள்ளனர்.

வலி.தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் "புறநெகும" திட்டத்தின் கீழ் பண்டதரிப்பு பிரான்பற்று நல்லுண்ணி வீதி ஒரு கோடிக்கு மேற்பட்ட செலவில் மீள்புனரமைப்பு பணி இடம்பெற்று வருகின்றது.

ஆனால் பிரான்பற்று நல்லுண்ணி வீதியில் உள்ள 95 வீதமான சகல மக்களும் முன்வந்து தமது சொந்தச் செலவில் வீதிகளை அகலிக்க உதவி வருகின்றனர்.

ஆனால், அப்பிரதேசத்தில் உள்ள இரு குடும்பங்கள் அத்திட்டத்திற்கு எதிராக வீதியை இதுவரை அகலித்து வழங்கவில்லை.

இதனால் "புறநெகும" திட்ட அதிகாரிகள் சபை உறுப்பினர்கள், தவிசாளர் மேற்படி வீதி அகலிப்பு இடம்பெறாத காரணத்தினால் பிரான்பற்று நல்லுண்ணி வீதியில் குறித்த பிரதேச வீதி அபிவிருத்தியை நேற்றுமுன்தினம் இடை நிறுத்தியுள்ளனர்.

இதனால் மக்கள் பூரணமாக ஒத்துழைக்கும் ஏனைய வீதிக்கு இத் திட்டத்தை மாற்றுவது குறித்தும் ஆலோசனை நடாத்தி வருவதுடன் சபையின் உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டுவரவும் மக்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மேற்படி வீதியின் புனரமைப்புக்கு தடையாக உள்ள இரு குடும்பத்தினருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்க சபை தயாராகி வருவதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை வலி. தென்மேற்கு பிரதேச செயலர் நேரடியாக பிரான்பற்று நல்லுண்ணி வீதி மீள்புனரமைப்பு பணி இடம்பெறும் பிரதேசத்தினை பார்வையிடவுள்ளார்.

நல்லூண்ணி வீதியில் மீள்புனரமைப்புக்கு முட்டுக்கட்டையாக உள்ள இரு குடும்பத்தையும் பிரதேச செயலர் சந்தித்து நடவடிக்கை எடுக்கவுள்ளார்.

நல்லுண்ணி வீதி வரலாற்றில் முதன் முதலாக தார் வீதியாக மாற்றும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நேரத்தில் இரு குடும்பம் தடையாக உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம்கள் மீதான அநீதிகள் ஜனாதிபதி ஆணைக்குழு வேண்டும்

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை

(கொழும்பு)

முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றின் மூலம் விசாரணை நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான கடிதமொன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழு ஒன்றை நிறுவுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இறுதிக்கட்ட யுத்தத்தின் போது முஸ்லிம் மக்களுக்கு நேரடியான பாதிப்புக்கள் எதுவும் ஏற்படாத போதிலும், யுத்தம் இடம்பெற்ற காலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன் 20000 முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனவே இந்த சம்பவங்கள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவினால் விசாரணை நடத்தப்பட வேண்டுமென அவர் கோரியுள்ளார். உள்நாட்டு, வெளிநாட்டு சமூகங்கள் யுத்த காலத்தில் பாதிக்கப்பட்ட சிங்கள, தமிழ் மக்கள் பற்றி மட்டுமே கவனம் செலுத்தி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு கூட 2002 ஆம் ஆண்டுக்கு முன்னதாக இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தத் தவறியுள்ளதாக தெரிவித்துள்ளார். இலங்கை வாழ் முஸ்லிம்கள் எதிர்நோக்கிய நெருக்கடிகள் குறித்து சர்வதேச சமூகம் கவனம் செலுத்த வேணடும் என்பதே தமது நோக்கமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

1990 ஆம் ஆண்டில் சில மணித்தியாலங்களில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்களை விடுதலைப் புலிகள் பலவந்தமாக வெளியேற்றியிருந்தனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அழிந்து அருகும் வனவளம் பேணிப் பாதுகாக்க ஏற்பாடு

(கொழும்பு)

நில்கல வனப்பகுதியில் காடுகளின் அழிப்பை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்காக அங்குள்ள ஆயிரம் மரங்களை துணிகளால் மூடும் நடவடிக்கை நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. பிபிலை நில்கல வனப் பகுதியானது இலங்கையில் காணப்படுகின்ற ஒரேஒரு மூலிகை வனம் என்பது குறிப்பிடத்தக்கது.

# தொழிற்பயிற்சி போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு

(யாழ்.நிருபர்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை தொழிற் பயிற்சிப போதனாசிரியர்களை இணைத்துக் கொள்வதற்காக தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் தமிழ், சிங்களம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அரசினால் அங்கீகரிக்கப்பட்ட NVA 4 மட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட தொழிற்துறைத் தகைமை அல்லது உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 3 வருடங்களுக்கு குறையாத தொழிற்பயிற்சி சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது உரியதுறையில் டிப்ளோமா சான்றிதழ் அல்லது உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இளமாணிப்பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களையும் மற்றும் விபரங்களையும் தலைவர் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை "நிபுணததா பியச", 4 ஆம் மாடி 354/2 எல்பிட்டிகல மாவத்தை, நாரஹேன்பிட்டி, கொழும்பு -05 என்ற முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்ப முடிவுத்திகதி 2014 ஜனவரி 30 ஆகும். (10)

# மருந்து இறக்குமதி பூர்த்தி; பற்றாக்குறைக்கு இடமில்லை

2014 ஆம் ஆண்டிற்கு தேவையான சகல மருந்துப் பொருட்களையும் இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக 38 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வாண்டு பங்களாதேஷ் மற்றும் தாய்லாந்தில் இருந்தும் இலங்கைக்குத் தேவையான மருந்துப் பொருட்கள் பெறப்பட்டுள்ளன.

இவ்வாண்டின் முதல் காலாண்டுக்குத் தேவையான மருந்துப் பொருட்கள் அனைத்தும் இம்மாத இறுதிக்குள் பெறப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# மாகாண சபையிலும் வங்குரோத்து அரசியலா?

**இவர்களுடைய இலக்கு எதிரி யார்? ஆளுநரா? முதலமைச்சரா? மாகாண சபையா? ஒன்றும் புரியவில்லை. ஆர்ப்பாட்டம் உண்ணா விரதம், பகிஷ்கரிப்பு, சேர்ட்டைக் கழற்றி எறிதல் என்ற போராட்டங்களுக்கு மட்டுமே பரிச்சயம் ஆனவர்கள் மாகாண சபைக்குப் போட்டியிட்டமை ஏன்? செக்கு மாட்டை வண்டிலில் பூட்டி சந்தைக்குச் சென்றுவந்த விவசாயியின் நிலையில் உள்ளனர் மக்கள், கொஞ்சம் விழிப்பாக இல்லாவிட்டால் சந்தையைத் தான் சுற்றிச்சுற்றிவரும் வண்டில். தட்டிக்கேட்க வேண்டிய காலம் வந்து விட்டது.**

ஸ்ரீபதி

காகம் ஒன்று தினமும் கூடு திரும்பிய பின்னர் "நாளை காசி போகவேணும், கதிர்காமம் போக வேணும், சேது போகவேணும். சிதம்பரம் போகவேணும்" என்று நினைக்குமாம். விடிந்ததும் நேரே போய் மலக்குவியலில் குந்துமாம். வடமாகாண-சபையின் தற்போதைய நிலையும் இது போலத்தான் உள்ளது. முதலமைச்சர் வேட்பாளராக நீதியரசர் சி.வி. விக்கினேஸ்வரன் அறிமுகமான போது மக்கள் மத்தியில் பெரிய எதிர்பார்ப்பு இருந்தது. அவர் வெற்றி பெற்றால் புதிய முறையில் (ராஜதந்திர) தீர்வு காணுவார் என்ற கருத்தாக்கம் உருவாக்கப்பட்டிருந்தது. அவருடைய தென்னிலங்கைத் தொடர்பு, தீர்வு முயற்சிக்கு வளம் சேர்க்கும் என்று நம்பப்பட்டது.

தேர்தல் முடிந்த பின்னர் ஆரம்பம் நன்றாகத்தான் இருந்தது. மாகாணசபை வேறு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (TNA) வேறு என்ற தலைவர் சம்பந்தனின் தெளிவான அறிமுகத்துடன் கிரியைகள் ஆரம்பமாகின. ஆரம்பத்தின் ஆரம்பம் நன்றாகவே இருந்தது. முதலமைச்சர் நல்லிணக்கமான முறையில் ஜனாதிபதியின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுத்து, ஆரம்பித்து வைத்தார். ஆனால் ஆரம்பத்தின் முடிவு வேறு விதமானதாக இருந்தது.

TNA இன் மாகாண-சபை உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் சத்தியப் பிரமாணம் எடுக்க ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. அமைச்சர்கள் நியமனம் தொடர்பான முரண்பாடுகள் சிலவற்றைச் சுட்டிக்காட்டி பல உறுப்பினர்கள் சமூகமளிக்கவில்லை. பின்னர் அவரவர் இஸ்டப்படி வவுனியா, முள்ளிவாய்க்கால் என்று ஆங்காங்கு சத்தியப்பிரமாணங்கள் எடுக்கப்பட்டன. "அழுவார் அழுவார் எல்லாம் தம் கரைச்சல், திருவன் பெண்டிலுக்கு அழுவார் ஒருத்தரில்லை" வடமாகாண மக்கள் தான் பாவம்.

மாகாணசபையின் இரண்டாம் அமர்விற்கு ஆளுநர் வருகை தந்தபோது மூன்று உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்துள்ளனர். இரண்டு தினங்களின் பின்னர் யாழ். பொது நூலகத்தில் முதலமைச்சர் உட்பட கூட்டமைப்பினரை பிரித்தானியாவின் பிரதமர் டேவிட் கமறோன் சந்தித்தபோது, நூலகவாசலில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது. ஆர்ப்பாட்டத்தினர் மத்தியில் அங்கு இம்மூவரும் பிரசனமாயிருந்துள்ளனர். மூன்றாவது அமர்விற்கு ஒரு தொகையினர் சுலோக அட்டைகளுடன் சென்றுள்ளனர். இவர்களுடைய இலக்கு எதிரி யார்? ஆளுநரா? முதலமைச்சரா? மாகாண சபையா? ஒன்றும் புரியவில்லை.

ஆர்ப்பாட்டம், உண்ணா விரதம், பகிஷ்கரிப்பு, சேர்ட்டைக் கழற்றி எறிதல் என்ற போராட்டங்களுக்கு மட்டுமே பரிச்சயம் ஆனவர்கள் மாகாண சபைக்குப் போட்டியிட்டமை ஏன்? செக்கு மாட்டை வண்டிலில் பூட்டி சந்தைக்குச் சென்றுவந்த விவசாயியின் நிலையில் உள்ளனர் மக்கள், கொஞ்சம் விழிப்பாக இல்லாவிட்டால் சந்தையைத் தான் சுற்றிச்சுற்றிவரும் வண்டில். தட்டிக்கேட்க வேண்டிய காலம் வந்து விட்டது.

மாகாணசபை நிர்வாகத்திற்குத் தேவையான நியதிச் சட்டங்கள் ஒழுங்காக உருவாக்கப்படவில்லை. மாகாணசபை ஆளுகைக்குள் வரும் இரணைமடுக் குள அபிவிருத்தி தொடர்பான பிணக்கு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. உள்ளக மட்டத்தில் தீர்த்திருக்க வேண்டிய விடயம் சந்திக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. முன்னாள் ஆசிரியரான பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் பாரிய பிரச்சினையாக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஆசிரியருக்குப் பரிகரங்கமாக வகுப்பு எடுக்க வேண்டிய நிலைக்கு முதலமைச்சர் தள்ளப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை நகரசபையின் பாதீடு ((Budget) அங்கீகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைக்குப் புறம்பான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இன்னும் ஒரு பிரதேசசபையின் பாதீடு சம்பந்தமான கூட்டத்திற்கு ஆளும்கட்சி உறுப்பினருக்கே அழைப்பு அனுப்பப்படவில்லையாம். இந்தச் சீர்கேடுகள் எல்லாம் கூட்டமைப்பு ஆளும் கட்சியாக உள்ள சில உள்ளூராட்சி சபைகளில் தான் நடைபெற்றுள்ளன. தென்னிலங்கையிலும் இதுதான் வழமை என்று நழுவ முடியாது.

வடகிழக்கு மாகாணங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவே மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டது. இந்த முறைமையைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை எமக்கு உண்டு. கடப்பாடும் கூட. கடினமான பணிதான். ஆனால் கட்டாயமானது. நொண்டிச்சாட்டுக்களைக் கூறித் தப்பமுடியாது. அரசாங்கத்தில் மட்டும் தான் இனவாதிகள் உள்ளனர் என்று கூறமுடியாது. அரச இயந்திரத்தில் உள்ள இனவாதம் முடிந்து விட்டது என்று கூறமுடியாது. மாகாண சபையிலுள்ள அதிகாரவர்க்கமும் மக்களமைப்புக்குச் சவாலாகத்தான் இருக்கும்.

கால்நூற்றாண்டு காலமாக அனுபவித்த சொகுசை இலகுவில் விட்டுக்கொடுப்பார்களா? இவர்கள் எல்லோரையும் முகங்கொடுத்துத்தான் பணியாற்ற வேண்டும். முகங்கொடுக்க கூடிய ஆற்றலும் அனுபவமும் உள்ளவரென்றுதானே நீதியரசரரைத் தெரிவு செய்தோம் பின்னர் ஏன் முட்டுக்கட்டை போட வேணும்.

உதிரிகளாக இருந்த கட்சிகள் கூட்டப்பட்டு உருவாக்கப்பட்டது தான் கூட்டமைப்பு (TNA) கூட்டியவர்களாகப் புலிகள் இருந்துள்ளமையால் புலிகளின் கட்டளைக்குப் பணிந்து நடந்தனர். இன்று நிலைமை வேறு. எல்லோரும் தங்களைக் கட்டளையிடும் அதிகாரிகளாக நினைக்கின்றனர். கோவில் நவக்கிரக பீடத்தில் நிற்கும் கிரகங்கள் போல ஒவ்வொரு கோணங்களில் நிற்கின்றனர்.


இப்படித்தான் 1980 களின் நடுப்பகுதியில் ஈழத்தேசிய விடுதலை முன்னணி (ENLF) என்ற கூட்டமைப்பு ஒன்று இருந்தது. அதில் அன்றைய ஈழமக்கள் புரட்சிகர முன்னணி (EPRLF) தமிழீழவிடுதலை இயக்கம் (TELO) தமிழீழ விடுதலைப்புலிகள் (LTTE), ஈழப்புரட்சிகர அமைப்பு (EROS) என்பன அங்கம் வகிக்கித்திருந்தன. 1986இல் 100ஆவது மேதினக் கொண்டாட்டத்திற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. LTTE இனர் திடீரென TELO போராளிகளை தெருக்களிலே நாய்களைப் போலச் சுட்டுத்தள்ளினர். இறுதியில் தலைவர் ஸ்ரீசபாரத்தினம் உரும்பிராய் மரவெள்ளித் தோட்டமொன்றில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார். முள்ளிவாய்க்காலில் வைத்து பிரபாகரன் சுற்றிவளைத்துச் சுடப்பட்டது போன்றதுதான் சபாரட்ணம் கொலை. இன்று TELO இல் இயங்குபவர்கள் இதனை மறந்து விட்டிருக்கலாம். இதயமுள்ள மனிதர்கள் இதனை மறக்கமாட்டார்கள். இதன் முன்னரும் பின்னரும் பல போராளிகள் டுவுவுநு இனரால் அழிக்கப்பட்டுள்ளனர். இதன் விளைவுகளைத்தான் முள்ளிவாய்க்காலில் அனுபவித்தோம். இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லை என்று இனவாதிகள் கூறுமளவிற்கு நிலைமை மோசமாயுள்ளது.

TNA இனது போக்கும் பழைய ENLF இனது போக்கினையே ஞாபகமூட்டுகின்றது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சி, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம், ஈழமக்கள் புரட்சிகர முன்னணி என்பன இணைந்துள்ளன. TNA ஐ ஒரு கட்சியாகப் பதிவு செய்ய வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மாகாண சபைத் தேர்தலின் பின் பதிவு செய்யப்படும் என்ற உத்தரவாதம் வழங்கப்பட்டது. சட்டச்சிக்கல் பிற்போடலுக்கு காரணமாகக் காட்டப்பட்டது.

தேர்தல் முடிந்து மூன்று மாதங்கள் முடிவடைந்த போதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பதிவு வேலைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. இடையில் பல பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சித் தலைவர்கள் வவுனியாவில் ஒன்று கூடி TNA இற்காக முக்கிய தீர்மானங்கள் எடுத்துள்ளனர். "சந்திரசிறியை எதிர்ப்பதற்கு வடக்கு - கிழக்கு இணைவு" என்று உதயன் மகுடம் சூட்டியுள்ளது. குறிப்பிட்ட குழு (Clique) ஒன்று தம்மை மட்டுமே TNA எனப் பிரகடனப்படுத்தும் உள்நோக்கத்துடன் இயங்குகின்றது போலத் தெரிகின்றது. TULF தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை என்று தெரியவருகின்றது. அவர் ஏற்கனவே அன்ரன் பாலசிங்கத்தின் அங்கீகாரம் பெற்றிருக்காமை தான் காரணம் போல உள்ளது. LTTE ஆயுதம் கொண்டு ஏனைய இயக்கங்களை அழித்தது. இந்தக் கும்பல் சதிப்பாணியிலே குட்டி முந்தப்பார்க்கிறது.

இந்தக் கும்பலுக்கு மக்களின் உடனடிப் பிரச்சினை தொடர்பிலும் அக்கறையில்லை. அடிப்படைப் பிரச்சினைகளை அணுகக் கூடிய உறுதியான அமைப்பாக TNA ஐக் கட்டமைக்க வேண்டுமென்ற எண்ணமில்லை. இன்று மக்களுக்குத் தேவையானது மக்களை நேசிக்கும் அமைப்பு ஒன்று.

இது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற இலக்கை அடையும் நோக்கம் உடையதாக இருக்க வேண்டும். இந்த வரலாற்றுக் கடமையைச் செய்ய TNA இனர் தயாராக இல்லாவிட்டால் புதிய ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும். அப்பன் கட்டிய கிணறு என்பதற்காக உப்புத்தண்ணியைக் குடித்துக் கொண்டு இருக்க வேண்டும் என்பது கட்டாயமல்ல.



# அத்தியாவசியப் பொருட்களுக்கு அதிகவரி

## அரசு மீது கணை வீசுகிறார் பொன்சேகா



(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களை அரசு ஆடம்பரப் பொருட்களாக கருதி அவற்றுக்கு அதிக வரியை விதித்துள்ளது.

இந்த நடவடிக்கை பாமர மக்களின் வயிற்றில் அடிக்கும் செயல் என்று அரசு மீது சரத் பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார்.

ஆடம்பர உணவுப்பொருளாக பருப்பு மாற்றமடைந்துள்ளதாக ஜனநாயக கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாட்டில் பருப்பு ஓர் ஆடம்பர உணவுப் பண்டமாக மாற்றமடைந்துள்ளது.

ஆடம்பரப் பொருட்களைப் போன்றே பருப்பிற்கும் வரி அறவீடு செய்யப்படுகின்றது. பிரதான எதிர்க்கட்சிகள் என கூறிக்கொள்ளும் தரப்பினர் தங்களது கடமைகளை செய்யத் தவறியுள்ளனர்.

எதிர்க்கட்சிகள் தங்களது கடமைகளை உரிய முறையில் செய்தால், மக்கள் துன்பங்களை அனுபவிக்க வேண்டியதில்லை.

நாட்டின் அரசியல்வாதிகள் தங்களது சுயலாபத்தை அடிப்படையாகக் கொண்டே செயற்படுகின்றனர் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பட்டபொல பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# நுரைச்சோலைக்கு மங்கு சனி சீர்செய்ய இந்திய உதவி

(கொழும்பு)

நுரைச்சோலை லக்விஜய அனல் மின்சார நிலையம் மீண்டும் செயலிழந்துள்ளது.கடந்த ஐந்து வாரங்களுக்குள் இந்த மின்சார நிலையம் மூன்றாவது முறையாக மூடப்பட்டுள்ளது.

நீர் சூடாகலில் அதிக அழுத்தம் ஏற்பட்டமையை அடுத்து, கடந்த வெள்ளிக்கிழமை இரவு நுரைச்சோலை அனல் மின்சார நிலையம் மூடப்பட்டது.

மின்சார நிலையத்துக்கு கடல் நீரைக் கொண்டு வரும் 16 ஆயிரம் குழாய்களில் ஏற்பட்ட பாதிப்பே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழாய்கள் இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டு ஒரு பிரிவில் 8 ஆயிரம் குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இலங்கை மின்சார சபையின் தகவல்படி ஏற்கனவே இந்த குழாய்களில் 105 குழாய்கள் சேதமடைந்துள்ளன.

குறித்த குழாய்களுக்குள் கடல் மணல் சென்றமை காரணமாகவே அவை சேதமடைந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

ஏற்கனவே இந்தப் பிரச்சினை குறித்து சீனாவின் ஒப்பந்தக்காரர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்தமுறை இந்திய நிபுணர்களின் உதவியை பெற்றுக்கொள்ள தாம் எதிர்பார்ப்பதாக இலங்கை மின்சார சபையின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### கடவுச்சீட்டில் கைவிரல் அடையாளம்

(கொழும்பு)

புதிதாக கடவுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ள விண்ணப்பங்களை சமர்ப்பிப்போரிடம் இருந்து கைவிரல் அடையாளங்கள் பெற்றுக்கொள்ளப் படும் என்று குடிவரவு கட்டுப்பாட்டாளர் அறிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை எதிர் வரும் ஏப்ரலில் இருந்து ஆரம்பிக்கப்படும் என்று குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலாநந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

கடவுச்சீட்டுக்களின் தரத்தை சர்வதேச தரத்தில் பேணும் வகையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# யுத்த அழிவுக் கணக்கெடுப்பு முதற்கட்ட அறிக்கை விரைவில்

(கொழும்பு)

மோதல்களால் உயிர்களுக்கும் சொத்துக்களுக்கும் ஏற்பட்ட சேதம் மற்றும் காணாமற்போனவர்கள் தொடர்பில் தகவல் திரட்டும் கணக்கெடுப்பு முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 14 ஆயிரத்து 22 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் இந்தக் கணக்கெடுப்பு முன்னெடுக்கப்பட்டதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டி.சி.ஏ.குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்தக் கணக்கெடுப்பு தொடர்பான முதற்கட்ட அறிக்கையை ஒரு மாதத்திற்குள் வெளியிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பின்னர் விரிவான தகவல் அடங்கிய அறிக்கையொன்றையும வெளியிடவுள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

1982 ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெற்ற மோதல்களால் உயிர்களுக்கும் சொத்துக்களுக்கும் ஏற்பட்ட சேதங்கள், காணாமற்போனவர்கள் மற்றும் அங்கவீனமடைந்தவர்கள் தொடர்பாக இந்தக் கணக்கெடுப்பு முன்னெடுக்கப்பட்டது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைக்கு அமைய இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# சீன சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை மீது அதிக ஈர்ப்பு

## இதை அதிகரிக்கத் திட்டம்

(கொழும்பு)

சீனாவின் சுற்றுலாப் பயணிகள் மத்தியில் இலங்கை பிரபல்யம் வாய்ந்த நாடாக காணப்படுவதாக அந்த நாட்டின் சுற்றுலாத்துறை பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் சீனாவில் இலங்கையின் சுற்றுலாத் தளங்களை மேலும் பிரபல்யப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக இலங்கை - இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கிடையில் வானூர்தி சேவைகளை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கையில் சுற்றுலாப் பயணிகளுக்கான தங்குமிடமுள்ளிட்ட வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

# ஊழல் - மோசடியில் பாலபட்டபெந்தி போர்க்கொடி தூக்குகிறது ஜே.வி.பி.



(கொழும்பு)

லஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக் குழுவின் ஆணையாளர் ஜகத் பாலபட்டபெந்திக்கு எதிராக குற்றப் பிரேரணை முன்வைக்க ஜே.வி.பி தீர்மானித்துள்ளது,

ஆணையாளர் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாகத் தெரிவித்து லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் கடந்த முதலாம் திகதி ஜே.வி.பி முறைப்பாடு ஒன்றை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த முறைப்பாடு குறித்து அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகள் பூர்த்தியாகும் வரையில் பாலபட்டபெந்தியை பதவியிலிருந்து நீக்க வேண்டுமென ஜே.வி.பி. கோரியுள்ளது.

ஆணையாளருக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டு வர அரசியல் அமைப்பில் சந்தர்ப்பம் இருப்பதாக ஜே.வி.பி. பிரச்சாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பாலபட்டபெந்திக்கு எதிராக நாடாளுமன்றில் குற்றப் பிரேரணை சமர்ப்பித்து மூன்றில் ஒரு உறுப்பினர்களின் ஆதரவினைப் பெற்றுக்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதற்குத் தேவையான சட்ட ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# நல்லிணக்க ஆணைக்குழுவை நிராகரிக்கிறது ஐ.தே. கட்சி



(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் அரசாங்கத்தின் புதிய முயற்சிக்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. தென்னாபிரிக்காவில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவொன்று நிறுவப்பட்டது.

இந்த ஆணைக்குழுவின் ஊடாக பிரச்சினைகளுக்கு வெற்றிகரமாக தீர்வு வழங்கப்பட்டிருந்தது. அதே பாணியிலான ஓர் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினை அமைப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இந்த ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் மீது நம்பிக்கையில்லை என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளின் முக்கியமானவை இன்னமும் அமுல்படுத்தப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஓர் பின்னணியில் ஆளும் கட்சியின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் தீர்வுத் திட்டம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகில் எந்தவொரு நாட்டிலும் ஒரு ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த மற்றுமொரு ஆணைக்குழு நிறுவப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு வெற்றியடைவதற்கு நெல்சன் மண்டேலா போன்ற மன்னிக்கும் மகத்துவக் குணமுடைய தலைவர்களின் அர்ப்பணிப்பே காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய ஆளும் கட்சியில் இவ்வாறான உயரிய பண்புகள் உடைய எவரும் இருக்கின்றார்களா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்தகையோடு ஆளும் கட்சியினர் வீதியில் இறங்கி வெற்றிக் கொண்டாட்டங்களை நடாத்தி பாற்சோறு சமைத்துக்கொண்டாடி மகிழ்ந்தனர் எனவும், உயிரிழந்தவர்கள் இலங்கை மக்கள் என்பதனை அரசாங்கம் நினைத்துப் பார்க்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்த நிறைவின் பின்னர் அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை, 13ம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தல் மற்றும் அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்தல் என வாக்குறுதி அளிக்கப்பட்டபோதிலும் அவை நிறைவேற்றப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாகவே சர்வதேச சமூகம், இலங்கை அரசாங்கத்திடம் கேள்விக் கணைகளை தொடுத்து வருவதாக லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

# மோசடிகளைக் களைந்து எறிய புதிய பொலிஸ் படை அமைப்போம்

## திட்டம் போடுகிறது சிங்கள ராவய

(கொழும்பு)

ஊழல் மோசடிகளுக்கு எதிராக மாற்று பொலிஸ் படை ஒன்றை அமைக்கப்போவதாக சிங்கள ராவய அமைப்பு அறிவித்துள்ளது.

நாட்டில் இடம்பெற்று வரும் குற்றச்செயல்கள் மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என சிங்கள ராவய அமைப்பின் தேசிய அமைப்பாளர் அக்மீமன தயா ரட்னதேரர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள மக்களுக்காக அரசியல்வாதிகள் குரல் கொடுப்பதில்லை என அவர் குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியலில் களமிறங்கும் திட்டங்கள் எதுவும் கிடையாது.

அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மறைமுகமான வகையில் பணம் சம்பாதிக்கின்றனர். ஊழல் மோசடிகளுக்கு எதிர்ப்பை வெளி யிடும் வகையில் கண்டி ஸ்ரீ தலதா மாளிகையிலிருந்து கொழும்பு வரையில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடாத்தப்படவுள்ளது.

அரசாங்கத் தரப்பினரால் மேற்கொள்ளப்படும் ஊழல் மோசடிகளுக்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடாத்தப்படவுள்ளது.

ஊழல் மோசடிகளுக்கு எதிராக எந்தவொரு தரப்பினரும் குரல் கொடுக்க முன்வரவில்லை. எனவே இந்தப் பொறுபபை ஏற்றுக்கொண்டு மக்களுக்காக குரல் கொடுக்கத் தயார். அரசியல்வாதிகள் பதவிப் பிரமாணம் செய்து கொள்வதற்கு முன்னதாக அவர்களின் சொத்துக்களை மதிப்பீடு செய்ய காத்திரமான பொறிமுறைமை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

மிருகவதை, முஸ்லிம் பெண்கள் ஹிஜாப் அணிதல், மத மாற்றம், தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அழித்தல் போன்றவற்றுக்கு எதிராக குரல் கொடுக்கப்படும் என அக்மீமன தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மாறுபட்டபாதையில் செல்கிறது தமிழ் கலாசார பண்பாடு

## யாழ்.பல்கலை வரலாற்று பேராசிரியர் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

எமது தமிழ் கலாசார பண்பாடுசார் விழுமியங்களை கட்டிக்காப்பாற்ற வேண்டிய இளம் சந்ததியினர் தற்காலத்தில் அத்தகைய கலாசார பண்பாடுகளுக்கு மாறுபட்ட பாதையில் சென்று கொண்டிருப்பது கவலைக்குரிய விடயாமக காணப்படுகின்றது என யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் செ.கிருஷ்ணராசா தெரிவித்துள்ளார்.

யாழ்.பிரதேச செயலக கலாசார பேரவையின் கலாசார விழா அண்மையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பேராசிரியர் செ.கிருஷ்ணராசா தொடர்ந்து பேசுகையில், ஒரு பக்கத்தால் எமது பண்பாட்டு மையங்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் மறுபக்கத்தால் இன்னுமொரு பண்பாட்டு ஊடுருவல்கள் நுழைந்து கொண்டிருப்பதைக் கண்டு வருகிறோம்.

எமது இளைஞர்கள் மத்தியில் சாதாரண சிவில் சூழ் நிலையற்ற அடிமட்ட நிலைமை தோன்றிக் கொண்டிருப்பதை கல்வியாளர்கள் கவனிக்க வேண்டி அவசியம் ஏற்பட்டுள்ளது. யாழ்.பல்கலைக்கழகத்தைச் சுற்றி 25 மதுபானசாலைகள் இயங்குகின்றன. இதனால் மாலை வேளைகளில் இளைஞர்களின் நிலைமை சொல்லும் தரமாக இல்லை. யாழ்ப்பாணப் பண்பாட்டைக் காப்பாற்ற சகல மட்டத்திலுமான கூட்டுமுயற்சி மேற்கொள்ளும் அவசியம் தோன்றியுள்ளது.

சமீபத்தைய தொல்பொருள் ஆய்வுகளில் கி.பி.எட்டாம் நூற்றாண்டில் நல்லூர் நகரை ஆரியச்சக்கரவர்த்திகள் கைப்பற்றி ஆள்வதற்கு முன்பாகவே எம்மவர் நிர்வாக, பண்பாட்டு ஆளுமைகளைக் கொண்டிருந்தது கண்டறியப்பட்டுள்ளது.

சமீபகாலத்தில் அத்தகைய அரும்பொருட்களைச் சூறையாடி அழிக்கப்படுவதை அறிய முடிகிறது. அரும்பொருட் காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த கீர்த்திசிங்கன் காலவாள், ஈட்டி, கேடயம், முடி போன்றவை இரகசியமாக அகற்றப்பட்டு உருக்கி அழிக்கப்பட்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது. என்றார்.

தொடர்ந்து மங்கள இசை, நடனம், கர்நாடக இசை மற்றும் பரத நாட்டியம் என்பவற்றுடன் கலை ஞானச் சுடர் விருது வழங்கலும், பிரதேச மட்டத்தில் நடாத்தப்பட்ட இலக்கிய போட்டிப்பரிசு வழங்கலை அடுத்து கலாசார உத்தியோகத்தர். திருமதி கு.ரஜனி நன்றி தெரிவிக்க விழா சிறப்பாக நிறை வேறியது. (68)

## பொங்கல் விழா

(யாழ்.நிருபர்)

காரைநகர் அபிவிருத்திச்சபை நடாத்தும் தைப் பொங்கல்விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காரைநகர் அபிவிருத்திச்சபையின் நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காரை அபிவிருத்திச் சபையின் தலைவர் சிவா.மகேசன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் வே.தர்மரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

காரைநகர் பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி மு.இந்திரமோகன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார். தமிழர் பண்பாட்டுத் திருநாள் என்னும் பொருள்பற்றி யாழ்ற்ரன் கல்லூரி தமிழ்த்துறை ஆசிரியர் அ.மனோகரன் சிறப்புரை யாற்றுவார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (10,50)

## பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்கும் திட்டம்

(யாழ்.நிருபர்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில் 1046000 பாடசாலை மாணவர்களுக்கு ஒரு கிளாஸ் பால் வழங்கும் திட்டம் இம்மாதம் 20ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படவுள்ளதாக கல்விச்சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக 3 இலட்சத்து 20 ஆயிரம் மாணவர்களுக்கு பால் வழங்கப்படவுள்ளது. பிள்ளைகளின் போஷாக்கை அதிகரிக்கும் முகமாகவே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று கல்விச்சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒரு கிளாஸ் பால் வழங்கும் திட்டத்திற்கு வருடம் ஒன்றிற்கு 380 மில்லியன் ரூபா அரசு ஒதுக்கியுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள 160, 000 மாணவர்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் நிதியுதவியுடனும் அரசின் நிதியுதவியுடனும் இத்திட்டம் செய்படுத்தப்படவுள்ளது. (10)




## சிங்கம்

(மகம், பூரம், உத்தரம் 1)



கோசரநிலையில் 11ஆம் வீட்டில் குரு 13.06.2014 வரை நிற்பதினால் வெளியூர் செல்லும் பொன்னான சந்தர்ப்பங்களை நழுவ விடாதீர்கள். மூத்த சகோதரர்களின் உதவி பொறுத்த கட்டத்தில் கைகொடுத்துதவும். மாறாத நோய்கள் குணமடைந்து தேகத்தின் வனப்பு ஜொலிக்கும். மனை, வாகன யோக மேற்படும். நீண்ட நாள் பகைமுற்றுப்பெறும். விவசாய விளைவுகளும் மகிழ்ச்சிதரும். புதிய ஜீவன் உருவாகும். பரீட்சை முடிவுகள் எதிர்கால முன்னேற்றத்தில் பங்களிப்புச் செய்யும்.

13.06.2014 தொடக்கம் ஒரு வருடம் வரை வியாழன் 12ஆம் இடத்தில் நின்று செல்வினையும் அலைச்சலையும் தக்க வைப்பார். கௌரவப்பதவிகள் கிடைக்க பிரமுகர்கள் உறுதுணையாக இருப்பர். மங்கள நிகழ்விற்காக பணச் செலவு ஏற்படும். இளைப்பாற்றுகையின் பின்னரும் மீண்டும் பணிக்குச்சேர அழைப்பு வரும். நீதிமன்ற முடிவுகள் தீர்ப்பினை வழங்காது இழுபடும். பிள்ளைகளின் நடத்தைக் கோலங்கள் வேதனையைத் தரும். பயணம் இடைநடுவில் முறிந்தும் விடலாம். சம்சாரத்துடன் பிணக்குகள் தோன்றும். நோய்கள் குணமடைய சத்திரசிகிச்சை மேற்கொள்வர். சிங்கராவிக்காரர்கள் கொடுத்து வைத்த பிறவிகளாக 16.12.2014 வரை சனீஸ்வரனின் 3ஆம் நிலையினால் நன்மைப்பலன்களை ஈடுபடும் முயற்சிகளில் அனுபவிக்கப்போகின்றார்கள். சகோதரர்களின் உதவியினால் வசந்தம் ஏற்படும். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும். பயணம், திருமணம் என்பன வெற்றி தரும். குழந்தைப்பாக்கியம் சித்திக்கும். நோய்கள் குணமடைந்து தைரியமும் வீரியமும் ஏற்படும். விபத்து ஏற்படினும் அங்கப்பழுதுகள் தோன்றாது தப்பி விடுவீர்கள்.

உங்களுக்கு 21.06.2014 வரை ராகுகேது என்பன முறையே 3ஆம் நிலையில் இருப்பதினால் முன்னேற்றங்கள் பிறர் பாராட்டும் வண்ணம் அமைந்து காணப்படும். பொறுத்தகட்டத்தில் சகோதரர் மற்றும் பிதாவின் உதவிகள் கிட்டி வசந்தகாலம் பிறக்கும். கைவிட்ட வெளியூர் பயணம் மீண்டும் ஆரம்பம். பழைய மனையைப்பாழாக்கிவிட்டு புதிதாக ஆரம்பிப்பர். 21.06.2014 தொடக்கம் 1 1/2 ஆண்டுக்கு இராகு கேது 2ஆம், 8ஆம் கோசரத்தில் அமர்வதால் குடும்பத்தில் மன அமைதிக்குப் பங்கம் ஏற்படலாம். சிலர் பிரிந்து செல்லும் நிலையில் தக்க வைக்கப்படுவர். பிரயாணத்தில் ஆவணங்கள் தவறிப்போகலாம். கடன்பட்டு கலங்க வேண்டியும் நேரிடலாம். விபத்தில் கவனம் நன்று.

ஜோதிடர் வித்யாரத்னா, வி.ஏ.சிவராசா (தொடரும்)

# பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் புண்ணியகிராம வேலைத்திட்டம்

(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் புண்ணிய கிராம செயற்றிட்டம் இந்து கலாசார அமைச்சின் நிதி அனுசரணையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

சோரன்பற்று கிராமத்தில் நெல்லிப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி ஜெயராணி பரமோதயன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து கலாசார திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி கேமலோஜினி குமரன் கலந்து கொண்டார். அத்துடன் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினராக இந்து கலாசார திணைக்களத்தின் கணக்காளர் மா.கோ.காண்டீபன் கலந்து கொண்டார்.

இந்து கலாசாரத்தை வளர்ப்பதுடன் அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளின் திறமைகளை வளர்க்கும் நோக்குடன் இந்த நிகழ்வு இந்து கலாசார திணைக்களத்தினால் நாடெங்கும் நடத்தப்பட்டு வருகின்றது. இந்த நிகழ்வில் வறிய மக்களுக்கு உணவளிக்கும் செயற்பாடுகளும் நடைபெற்று வருகின்றது. (90)

## கால்கோள் விழா

இவ்வாண்டில் தரம் 01 இற்கான அனுமதிபெற்ற அரச பாடசாலைகளில் இணைந்துள்ள மாணவர்களுக்கான கால்கோள் விழா எதிர்வரும் வியாழக் கிழன்று இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அரச பாடசாலைகளில் தரம் 01 மாணவர்களை வரவேற்கும் கால்கோள்விழா தரம் 02 மாணவர்களினால் மேற்கொள்ள யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் நடாத்தப்பட ஏற்பாடாகியுள்ளதாக பாடசாலைகளின் அதிபர்கள் தெரிவித்தனர். (இ)

## முரசின் இன்றைய பலன்



(13.01.2014 திங்கட்கிழமை)

விஜய வருஷம் மார்கழி மாதம் 29 ஆம் திகதி.
பிரதோஷ விரதம். திரயோதசி/அமிர்தம்.
ரோகிணி நட்சத்திரம் மு.ப.06.37 வரை. பின் மிருகசீரிடம்.
இராகுகாலம 08.03 - 09.33 வரை. சுபநேரம 12.33 - 02.03 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | போலி நகைகள் அணிந்து சென்றதால் திருடர் முயற்சி கைகூடாது விடல், வாகனம் நிற்பாட்ட முன்னர் ஓடி ஏற முயன்றதால் விபத்தினின்றும் மயிரிழையில் தப்புதல். |
| ரிஷபம் | விளையாட்டு நிகழ்வினால் பரிசில், பாராட்டு, வெகுமதிகள் கிடைத்தல், ஒழுக்கத்தை உயிரிலும் மேலாக கடைப்பிபடித்தால் துயர் விலகிச்செல்லல். |
| மிதுனம் | மூளை அழற்சி நோயினால் பாதிக்கப்படல், சீனிச் சத்தான, எண்ணெய் சேர்ந்த உணவுப்பொருட்களினால் புண்கள் குணமடையாது வருத்துதல். |
| கடகம் | கடந்த காலத்தில் கிடைத்த நல்லதொரு சந்தர்ப்பத்தைக் கைநழுவ விட்டதில் வருத்தமடைதல், பேச்சுப் பல்லாக்கு தம்பி கால்நடை என வந்தவருக்கு உதவி செய்ய விரும்பாமை. |
| சிம்மம் | எண்ணியசெயல் சுமுகமாக முடிந்ததினால் ஆனந்தமடைதல், அயலவரின் அடாவடியினால் எரிச்சலடைந்தாலும் புத்திமதி மேற்கொண்டதால் பிரச்சினை அற்றுப்போதல். |
| கன்னி | பொருட்களின் காலாவதி திகதியில் மாற்றத்தைச் செய்தமை கண்டுபிடிக்கப்பட்டதால் தண்டம், நம்பிக் கையீனம் காணப்பட்டதினால் பிணை வைக்கப்பின்னடித்தல். |
| துலாம் | எதிர்பாராத செலவீனங்களும், பயணமுயற்சி குறுக்கிட்டாலும் சாமர்த்தியமாகச் சமாளித்தல், நம்பியிருந்த அனுமதி கைவிட்டுச் சென்றதால் புகார் கொடுக்க மேலதிகாரிகளிடம் செல்லல். |
| விருச்சிகம் | சவால்களை ஏற்று, ஏமாற்றங்களைப் பொருட்படுத்தாது கருமமே கண்ணாக விருத்தல், நீண்ட நாள் இழுபட்டுக்கொண்டிருந்த நிலுவை எதிர்பாராது வந்தடைதல். |
| தனுசு | உணர்ச்சி வசப்படாமல் அறிவுக்கு வேலை கொடுத்ததால் காரிய சித்தி ஏற்படல், எண்ணியிருந்த இடமாற்றம் கிடைத்ததால் புளகாங்கிதமடைதல். |
| மகரம் | உத்தியோகப் பணியில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பினால் நிலுவையின்றி வேலைமுடிதல், அவசரப்படாமையினால் பொறுமையைக் கைக்கொண்டு வந்த தொந்தரவை விலக்கிவிடல். |
| கும்பம் | எதிர்பார்த்த உதவிகள் தக்க வேளையில் வந்தடைந்ததால் இடர் விலகிவிடல், தன்னம்பிக்கையுடன் செயற்பட்டதால் தேங்கிய வேலைகள் சுணக்கமின்றிச் செய்துமுடித்தல். |
| மீனம் | பிழையான செயற்பாட்டால் தண்டனைக் குள்ளாதல், சுபகாரியமொன்று எதிர்பாராமல் ஏற்பட்டதால் பணச்செலவுக்கு திக்குமுக்காடல். |

# ஆரோன் பின்ஞ் அதிரடிச் சதம் முதல் வெற்றி அவுஸ். வசம்

(மெல்பேர்ன்)


ஆரோன் பின்ஞ், டேவிட் வோர்னரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் ஆட்டம் நேற்று அவுஸ்ரேலியாவின் மெல்பேர்னில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய இங்கிலாந்து அணி முதல் விக்கெட்டை நான்கு ஓட்டங்களுக்குள் பறிகொடுத்துத் தடுமாறியது. தொடர்ந்தும் ஒரு சீரான இடைவெளியில் இங்கிலாந்தின் விக்கெட்டுக்கள் சரிக்கப்பட்டது. இந்நிலையில் இயன் மோர்கன், அறிமுக வீரர் பேலன்ஸ் இணை மிகவும் நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது. இந்த ஜோடி 83 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. இறுதியில் இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களைஇழந்து 269 ஓட்டங்களைப்பெற்றது. இதில் அறிமுகப் போட்டியில் ஆடிய பேலன்ஸ் 96 பந்துகளை எதிர்கொண்டு ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 79, இயன் மோர்கன் 47 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 50, இயன் பெல் 41, பட்லர் 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மைக்கி மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 270 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது. குறிப்பாக, ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய டேவிட் வோர்னர், ஆரோன் பின்ஞ் இணை இங்கிலாந்துப் பந்து வீச்சாளர்களை புரட்டியெடுத்து ஓட்டங்களைக் குவித்து. இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்காக 163 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய வட்சன் ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தது ஏமாற்றமளித்தார். இந்நிலையில் அவுஸ்ரேலிய அணி சிறு அழுத்தத்தை எதிர்கொண்டது. இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காகஇணைந்தகப்டன் கிளார்க் ஆரோன் பின்ஞ் ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ஆடினார். அதிரடியில் அசத்திய பின்ஞ் தனது இரண்டாவது சதத்தைப் பதிவு செய்தார். தொடர்ந்து அசத்திய இந்த ஜோடி 72 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை (பின்ஞ்) பிரிக்கப்பட்டது. தொடர்ந்து மைக்கல் கிளார்க்கும் வெளி யேற்றப்பட்டார். தொடர்ந்து நிதானமாக ஆடிய ஜோர்ஜ் பெய்லி வெற்றியை இறுதி செய்தார். இறுதியில் அவுஸ்ரேலிய அணி 45.4 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 270 ஓட்டங்களைப் பெற்று வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஆரோன் பின்ஞ் 128 பந்துகளை எதிர்கொண்டு 12 பவுண்டரிகள் அடங்கலாக 121, டேவிட் வோர்னர் 65, மைக்கல் கிளார்க் 44 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஜோர்ஜ் பெய்லி ஆட்டமிழக்காது 17 ஓட்டங்களைப் பெற்றார். போட்டியின் ஆட்டநாயகனாக ஆரோன் பின்ஞ் தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலானஇரண்டாவது ஒரு நாள் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி பிறிஸ்பேனில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மின்னல் மனிதனுக்கு ஆண்டின் சிறந்த விருது



(கிங்ஸ்டன்)

ஜமேக்காவின் சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதை மின்னல் வேக மனிதன உசைன் போல்ட் வென்றார்.

ஜமேக்கா அரசு சார்பில், ஆண்டு தோறும் விளையாட்டு போட்டிகளில் சிறந்து விளங்கும் வீரர், வீராங்கனைகளுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்படும். கடந்த ஆண்டின் சிறந்த வீரருக்கான விருதை மின்னல் வேக மனிதன் உசைன் போல்ட் கைப்பற்றினார். இவர், கடந்த ஆண்டு மொஸ்கோவில் நடந்த உலக தடகள சம்பியன்ஷிப் தொடரில், 100, 200 மற்றும் 4ழ100 மீ., ஓட்டப்பந்தயங்களில் தங்கம் வென்று அசத்தினார். இதன்மூலம் இவருக்கு ஜமேக்காவின் சிறந்த வீரருக்கான விருது ஐந்தாவது முறையாக (2008, 09, 2011, 12, 13) வழங்கப்பட்டது. சமீபத்தில் இவருக்கு, சர்வதேச தடகள கூட்டமைப்பு (ஐ.ஏ.ஏ.எப்.,) சார்பில், கடந்த ஆண்டின் சிறந்த தடகள வீரருக்கான விருது ஐந்தாவது முறையாக (2008, 09, 2011, 12, 13) கிடைத்தது.

இதுகுறித்து உசைன் போல்ட் கூறுகையில், கடந்த ஆண்டு சிறப்பானதாக அமைந்தது. நிறைய ஏற்றத் தாழ்வுகளை சந்தித்த போதும், எனது செயற்பாடு திருப்தி அளித்தது, என்றார்.

சிறந்த வீராங்கனைக்கான விருது, தடகள ராணி ஷெல்லி ஆன் பிரேசர் பிரைசிக்கு வழங்கப்பட்டது. இவர், கடந்த ஆண்டு மொஸ்கோவில் நடந்த உலக தடகள சம்பியன்ஷிப் தொடரில், 100, 200 மற்றும் 4ழ100 மீ., ஓட்டப்பந்தயங்களில் தங்கம் வென்றார். இதன்மூலம் இவருக்கு தொடர்ந்து இரண்டாவது முறையாக (2012, 13) இவ்விருது வழங்கப்பட்டது. சமீபத்தில் இவருக்கு, சர்வதேச தடகள கூட்டமைப்பு (ஐ.ஏ.ஏ.எப்.,) சார்பில், கடந்த ஆண்டின் சிறந்த தடகள வீராங்கனைக்கான விருது முதன்முறையாக (2013) வழங்கப்பட்டது.

இதுகுறித்து பிரேசர் பிரைசி கூறுகையில், கடந்த ஆண்டு கடினமானதாக இருந்தது. இருப்பினும் எனது இலக்கை எட்ட முடிந்தது மகிழ்ச்சி அளிக்கிறது. மற்ற விடயங்களில் கவனம் செலுத்தாமல், இலக்கை மட்டும் நோக்கி கடினமாக போராடியதால் சாதிக்க முடிந்தது, என்றார்.

## நியூசிலாந்துடனான தொடர் உலகக் கிண்ணத்திற்கு சிறந்த பயிற்சிக் களம்

(மும்பை)

நியூசிலாந்து அணியுடன் நடைபெறவுள்ள தொடர், 2015 உலக கோப்பை போட்டிக்குத் தயாராக உதவும் என்று இந்திய அணி கப்டன் டோனி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அடுத்த உலக கோப்பை போட்டி நியூசிலாந்து மற்றும் அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள நிலையில், தற்போது நியூசிலாந்து சென்று விளையாடவுள்ள தொடர் இந்திய அணி வீரர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்த அனுபவம் உலக கோப்பைக்கு தயாராக எங்களுக்கு உதவும் என நம்புகிறேன்.

நான் முதல் முறையாக நியூசிலாந்து சென்று விளையாடியபோது, அங்குள்ள மைதானங்களின் வடிவமைப்பும் அதற்கு ஏற்ப களத்தடுப்பு வியூகம் அமைப்பதும் மிகுந்த குழப்பத்தை ஏற்படுத்தியது. அதற்கு ஏற்ப எங்களை மாற்றிக் கொள்ள அவகாசம் தேவைப்பட்டது. மொத்தத்தில் நியூசிலாந்து தொடர் புதிய அனுபவமாக இருக்கும்.

ஐ.சி.சி. அறிமுகம் செய்துள்ள புதிய விதிகளால், நியூசிலாந்து தொடரில் அதிக ஓட்ட எண்ணிக்கையை எடுக்க முடியும் என நினைக்கிறேன்.



அதே சமயம் ஆடுகளத்தின் தன்மை, மைதானத்தின் அளவு போன்றவை இதில் முக்கிய பங்காற்றும். நியூசிலாந்து அணியில் திறமையான இளம் வீரர்கள் பலர் உள்ளனர். எனவே, இந்த தொடர் மிகவும் விறுவிறுப்பாகவும் சவாலானதாகவும் அமையும் என எதிர்பார்க்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆர்ஜென்ரீன வீரருக்கு சிட்னி ரென்னிஸ் கிண்ணம்



(சிட்னி)

சிட்னி சர்வதேச ரென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஆர்ஜென்ரீனாவின் ஜுவன் மார்டின் டெல்போட்ரோ சம்பியன் பட்டம் வென்றார்.

இறுதிப் போட்டியில் அவுஸ்ரேலியாவின் பெர்னார்ட் டொமிக்குடன் நேற்று முன்தினம் மோதிய டெல்போட்ரோ 6-3, 6-1 என்ற நேர் செட்களில் மிக எளிதாக வென்று கோப்பையைக் கைப்பற்றினார்.

# இலங்கை இலகு வெற்றி


(டுபாய்)

பாகிஸ்தான் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி ஒன்பது விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று டுபாயில் நிறைவடைந்தது.

இதில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஏழு விக்கெட்டுக்களை இழந்து 330 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஐந்தாம் நாள் ஆட்டத்தை பாகிஸ்தான் அணி தொடர்ந்தது. சயிட் அஜ்மல், எஸ். அகமட் இணை எட்டாவது விக்கெட்டுக்காக நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது. இருப்பினும் இந்த ஜோடி 22 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கியவீரர்கள் அடுத்தடுத்து விக்கெட்டைப் பறிகொடுக்க பாகிஸ்தானின் இனிங்ஸ் நிறைவுக்கு வந்தது. இறுதியில் பாகிஸ்தான் அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 359 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எஸ். அகமட் 74, பி. பத்ரி 32, சயிட் அஜ்மல் 21, மிஸ்பா உல் ஹக் 97, யுனிஸ்கான் 77 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லக்மல் நான்கு, பிரதீப், ஹேரத், எரங்க ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 137 ஓட்டங்களைப் பெற்றால வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய இலங்கை அணி, கருணாரட்ன, கௌசல் சில்வா ஆகியோரின் நிதான ஆட்டத்தின் மூலம் இலகுவான வெற்றிபெற்றது. இறுதியில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய இலங்கை அணி ஒரு விக்கெட் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கௌசல் சில்வா 134 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 58 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். மற்றும் கருணாரட்ன 125 பந்துகளை எதிர்கொண்டு எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 62, குமார் சங்கக்கார 20 பந்துகளை எதிர்கொண்டு ஒரு பவுண்டரி அடங்கலாக 9 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். பந்து வீச்சில் சயிட் அஜ்மல் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். இதன் மூலம் இலங்கை அணி ஒன்பது விக்கெட்டுக்களால்அபார வெற்றிபெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக மஹேல ஜெயவர்த்தன தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் இலங்கை அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.



இரு அணிகளுக்குமிடையிலானமூன்றாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 16ஆம் திகதி சார்ஜாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# லோகதீஸ்வர் சிறப்புப் பந்து வீச்சு சென். ஜோண்ஸ் இலகு வெற்றி

(யாழ்ப்பாணம்)


லோகதீஸ்வரின் சிறப்பான பந்து வீச்சின்மூலம் சென்.ஜோண்ஸ் கல்லூரி அணி பத்து விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டுவரும் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக் கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி தற்போது நடை பெற்று வருகின்றன. இதில் தெல்லிப் பளை மகாஜனக் கல்லூரி அணிக் கும், சென். ஜோண்ஸ் கல்லூரி அணிக்குமிடையிலான ஆட்டம் நேற்று முன்தினம் சென். ஜோண்ஸ் கல்லூரி யில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய மகாஜனக் கல்லூரி அணி முதலில் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றது. இந்த ஜோடி 57 ஓட்டங்களை இணைப்பட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டதுதொடர்ந்து ஒரு முனையில் சிறப்பாக பந்து வீசி வந்த லோகதீஸ்வரின் பந்தைஎதிர்கொள் ளத் திணறிய மகாஜனக் கல்லூரி அணி மளமளவென விக்கெட்டுக்களைப் பறி கொடுத்தது. இறுதியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி முதல் இனிங்ஸிற் காக சகல விக்கெட்டுக்களையும்இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லோசன் 47, பிரணவன் 22, பிரசாந் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லோகதீஸ்வரன் 21 ஓவர்கள் பந்து வீசி 35 ஓட்டங்களைக் கொடுத்து எட்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி அனோஜன், துவாரகசீலன், பிரிசங்கர், சிந்துஜன் ஆகியோரின் சிறப்பானதுடுப் பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக ஆறு விக்கெட்டுக்களை இழந்து 289 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுதிக் கொண் டது. இதில் அனோஜன் 61, சிந்துஜன் 67, பிரிசங்கர் 55, துவாரகசீலன் 53 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மயூரன், டிஷோத், பிரசாந் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற் றினர்.

150 ஓட்டங்கள் பின்னிலையில்இரண் டாவது இனிங்ஸிற்காக ஆடிய தெல் லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி முதல் மூன்று விக்கெட்டுக்களையும் மளமளவெனப் பறிகொடுத்தது.இந்நிலை யில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த ஜனதன், மயூரன் இணை பொறுப்புடன் ஆடி இனிங்ஸ் தோல் வியைத் தவிர்த்தனர். இறுதியில் மகா ஜனக் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களை யும் இழந்து 161 ஓட்டங்களைப் பெற் றது. இதில் ஜனதன் 50, மயூரன் 23, பிரணவன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லோகதீஸ்வர் நான்கு,



கானாமிர்தன் இரண்டு விக்கெட்டுக் களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 12 ஓட்டங்களைப் பெற் றால் வெற்றி என்ற நிலையில் இரண் டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி மூன்று ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந் தது. இதில் கபில்ராஜ் எட்டு ஓட்டங் களைப் பெற்றார். இதன் மூலம் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி பத்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதேவேளை, ஏற்கனவே, கனகரத் தினம் மத்திய மகாவித்தியாலய அணி யுடனான போட்டியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி பெரு வெற்றிபெற்றிருந் தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.,48)

# அரையிறுதியில் கொக்குவில் ஏ.பி.

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் இளைஞர் கழக சம் மேளனத்தினால் நடாத்தப்பட்டு வரும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் அரை யிறுதி ஆட்டத்திற்கு கொக்குவில் ஏ.பி. அணி தகுதி பெற்றுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் தைப்பொங்கலை முன்னிட்டு நடாத்தி வரும் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் தொடர் மானிப் பாய் செல்லமுத்து விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

அணிக்கு 6 பேர் கொண்ட ஐந்து ஓவர்களாக நடைபெற்று வரும் இப் போட்டித் தொடரின் காலிறுதி ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கோட்டை லெவின் ஸ்ரார் பி அணியும், கொக்குவில் ஏபி அணியும் மோதின.

நாணயற்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஆனைக்கோட்டை லெவின் ஸ்ரார் பீ அணி 5 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜீந்தன் 15, இளங்கோ 9 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ராஜி இரண்டு, சிலோஜன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 44 ஓட்டங்களைப் பெற் றால் வெற்றி என்ற நிலையில் கள மிறங்கிய கொக்குவில் ஏபி அணி 2.1 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ராகுலன் 36, ஆதி 5 ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டித் தொடரின் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் நாளைய தினம் நடைபெறும் என போட்டி அமைப் பாளர்கள் தெரிவித்துள்ளனர். (48)

# வென்றது யங்ஹென்றிஸ், ரெட்றேஞ்சர்

அராலி மாவத்தை விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப் பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் இளவாலை யங்ஹென்றிஸ், மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் அணிகள் வெற்றிபெற்றன.

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு வலிகாமம் கால் பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி மாவத்தை விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் இக்கால் பந்தாட்டப் போட்டி மாவத்தை விளையாட்டுக்கழக மைதா னத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் அரையிறுதிப்போட் டிக்குத் தகுதி பெற்ற நான்கு அணிகளும் லீக் முனையில் மோதி வருகின்றன. இதில் அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் இரு அணிகளும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறவுள்ளது. இந்நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் போட்டியில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியும், நவாலி சென்.பீற்றர்ஸ் அணியும் மோதின. இரு அணிகளும் 2-2 என்ற கோல் கணக்கில் இருந்த நிலையில் ஆட்டம் நிறைவடைந்தது. பின்னர் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் மானிப்பாய் ரெட்ரேஞ்சர்ஸ் அணி யும், வட்டுக்கோட்டை அண்ணா அணியும் மோதின. இதில் போட்டி நிறைவடையும் வரை இரு அணிகளாலும் கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நிறைவில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (93)

## சென்றலைட்ஸ் புளூஸ் வெற்றி

காங்கேசன்துறை ஐக்கிய அணிக்கெதிரான போட்டியில் யாழ். சென்றலைட்ஸ் புளூஸ் அணி அபார வெற்றிபெற்றது. யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் அதன் அங்கத்துவ அணிகளுக்கிடையில் நடாத்தி வரும் மாபெரும் கூடைப்பந்தாட்டத் தொடர் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் காங்கேசன்துறை ஐக்கியம் அணியும், யாழ். சென்றலைட்ஸ் புளூஸ் அணியும் மோதின. இதில் செனறலைட்ஸ் புளூஸ் அணி 73-41 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. (93)

## நவசக்தி முன்னேற்றம்

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகத்தினால் நடாத் தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு பருத்தித்துறை நவசக்தி அணி முன்னேறியுள்ளது. பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் நண்பர் விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்தாட்டத் தொடர் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் பருத்தித்துறை நவசக்தி அணியும், உடுப்பிட்டி யுத் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய நவசக்தி அணி 4-0 என்ற கோல் கணக் கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றது. (93)

# செலான் வெற்றிக் கிண்ணக் கால்பந்து அரையிறுதிக்கு முன்னேறிய அணிகள்

(பருத்தித்துறை)

செலான் வெற்றிக் கிண்ணக் கால்பந் தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டத்திற்கு சென். சேவியர், நவஜீவன்ஸ், விண்மீன், கலைமதி அணிகள் தகுதிபெற்றுள்ளன.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நெல்லியடி செலான் வங்கியினால் நடாத்தப்பட்டு வரும் செலான் வெற்றிக் கிண்ண கால்தபந்தாட்டத் தொடர் கடந்த 4ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டித் தொடரின் ஏ பிரிவுக்கான காலிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் டைய மன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் டையமன்ஸ் அணியும் சென். சேவியர் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய சென்.சேவியர் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது காலிறுதிப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும், வல்லை அணியும் மோதின. இதில் நவஜீவன்ஸ் அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரை யிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

பி பிரிவுக்கான காலிறுதிப் போட்டிகள் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத் தில் நடைபெற்றது. இதில் முதலாவது காலி றுதிப் போட்டியில் பொலிகண்டி விண்மீன் அணியும், யங்கம்பன்ஸ் அணியும் மோதின. இதில் பொலிகண்டி விண்மீன் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரை யிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது காலிறுதிப் போட்டியில் கலைமதி அணியும், கொலின்ஸ் அணி யும் மோதியது. இதில் இரு அணிகளும் 2:2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருந்தது. பின்னர் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் கலைமதி அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. தொடர்ந்து போட்டிகள் நடைபெற்று வருகின்றன. (48)

# யாழ்ப்பாணத்துச் சமர் கால்பந்து இறுதியில் குருநகர் பாடுமீன்




(உரும்பிராய்)


யாழ்ப்பாணத்துக் கால்பந்துச் சமர் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்திற்கு குருநகர் பாடுமீன் அணி தகுதி பெற்றுள்ளது. யாழ்ப் பாணக் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் உரெழு றோயல் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் யாழ்ப்பாணத்துக் கால்பந்துச் சமர் மாபெரும் கால்பந்துப் போட்டித் தொடர் உரும் பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டித் தொடரின் முதலாவது அரையிறுதி ஆட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும், குருநகர் பாடுமீன் அணியும் மோதின. பரபரப்பாக நடை பெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தங்கள் முழுத் திறமை-களையும் வெளிப்படுத்தி முட்டி மோதிக் கொண்டன. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டி இரு அணிகளும் 3-3 என்ற கோல்கணக்கில் சமநிலை பெற்றிருந்தன. இதன் காரணமாக தண்ட உதைமூலம்வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் குருநகர் பாடுமீன் அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியும், மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதவுள்ளன. இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நாளை மின்னொளியில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# கிழக்கில் கூட்டமைப்பினர் இனவாதத்தை கிளறி குளிர்காய முயலக் கூடாது

**- எழுகதிரோன் கட்டுரையிலிருந்து.**





கிழக்கு மாகாணத்துக்குரிய உள்ளூராட்சி ஆணையாளராக எம்.வை.சலீம் என்பவர் இவ்வாண்டு ஜனவரி 1ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார். இப்பதவியில் முஸ்லிம் இனத்தைச்சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் 11 பேர் கையொப்பமிட்டு தங்களது எதிர்ப்பினை ஆளுநருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர். இந்த எதிர்ப்புக்கு காரணமாக அவர் மீதான தராதரமின்மை, ஊழல் புகார்கள் போன்ற எந்த ஒரு குறிப்பிடும்படியான குற்றச்சாட்டுகளும் இடம்பெறவில்லை. குறித்த பதவிக்கு தமிழர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்பதாகவும் மாறாக முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்படக்கூடாது என்பதாகவும் அபத்தமாக அந்த முறையீடு அமைந்திருக்கின்றது.

1987ஆம் ஆண்டு மாகாண சபைகள் உருவாக்கப்பட்டதிலிருந்து இந்த மாகாண ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டு வந்திருக்கின்றனர். கடந்த காலங்களில் பரமேஸ்வரன் சடாச்சர சண்முகதாஸ், சுந்தரம் திவகலாலா போன்றவர்கள் இப்பதவிகளில் இருந்திருக்கின்றார்கள். கிழக்கு மாகாண சபை 2008இல் உருவாக்கப்பட்டதிலிருந்து முதலமைச்சர் சந்திரகாந்தனின் ஆட்சிக்காலத்தில் தயாபரன், மற்றும் உதயகுமார் போன்ற மட்டக்களப்பை சேர்ந்தவர்களுக்கு இப்பதவி கிட்டியது. இப்போதைய நிலையில் ஒரு முஸ்லிம் முதலமைச்சர் கிழக்கு மாகாணசபையை ஆளுகின்ற தறுவாயில் தமது இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு முன்னுரிமை வழங்குவது இயல்பானதேயாகும். அதுவும் மத்திய அரசாங்கத்தின் உள்ளூராட்சி அமைச்சராகவும் முஸ்லிம் ஒருவரே பதவி வகிக்கின்ற நிலையில் இது மேலும் வாய்ப்பானது ஆகும்.

சில வேளை குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்டவர் அப்பதவிநிலைக்கு வரவேண்டியவர் கொண்டிருக்கவேண்டிய எஸ்.எல்.ஏ.எஸ் தரம் ஒன்றினை கொண்டிருக்காவிடின் அது பற்றி ஆட்சேபிக்க முடியும். மாறாக அவர் முஸ்லிம் என்பதால் மட்டும் இந்நியமனத்தை எதிர்ப்பது தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் வடிகட்டிய இனவாத சிந்தனையே தவிர வேறொன்றில்லை.

அதே வேளை இந்நியமனம் வழங்கப் படுவதற்கான முடிவுகள் எடுக்கப்பட முன்பே கிழக்கு மாகாண சபையில் முதலமைச்சர் மட்டுமல்ல எந்தவொரு தமிழ் அமைச்சர்களும் இல்லாத நிலைமையை கவனத்தில் கொண்டு மாகாணத்துக்குரிய உள்ளூராட்சி ஆணையாளராக தமிழர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என்று முன்னாள் முதல்வர் கவர்னரை நாடியுள்ளார். அவரது கோரிக்கைக்கு கவர்னர் மட்டத்தில் சாதகமாக பதிலிறுக்கப்பட்டிருக்கின்றது. அதன்படி மேற்படி பதவிக்குரிய இரு தமிழ் நிர்வாக அதிகாரிகள் அணுகப்பட்டபோது மட்டக்களப்பைச் சேர்ந்த அவர்கள் திருகோணமையில் இருந்து கடமையாற்ற தயக்கம் காட்டியிருக்கின்றனர். அதன் பின்னரே எம்.வை.சலீம் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

மூன்று மாதங்களுக்கு முன்பே இந்த நியமனத்துக்கான ஏற்பாடுகள் நடந்தபோது வாளாவிருந்தவர்கள் இந்த கூட்டமைப்பினர். தமிழர் ஒருவரை கொண்டு வர வேண்டும் என்று கிஞ்சித்தேனும் இவர்கள் கவலைப்படவில்லை. நியமன செய்தி வெளிவந்தவுடன் மட்டும் தமிழரா? முஸ்லிமா? என்று தமிழ் மக்களின் கவனத்தை பெறுவதற்காக ஆடும் நாடகம் இதுவாகும்.


தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் மேற்படி செயல்பாட்டை அவர்களுடன் வடமாகாணசபையில் இணைந்து செயற்படும் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கமும் கண்டித்துள்ளமை முக்கியமானதொன்றாகும். அதில் “இனவாதத்தை பிரதிபலிக்கும் வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண உறுப்பினர்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கை எமக்கு மிகுந்த ஏமாற்றத்தையும் கவலையையும் அளிக்கின்றது. சமூகங்களுக்கு மத்தியில் இனவாதத்தை ஊக்குவிக்கும் இது போன்ற நடவடிக்கைகளை எமது இயக்கம் வன்மையாகக் கண்டிப்பதோடு எதிர்காலத்தில் இவ்வாறான அணுகுமுறைகளை சகலரும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றது.” (பார்க்க காத்தான்குடி இணையத்தளம்) என அதில் கூறப்பட்டுள்ளது.

இதில் வேடிக்கை என்னவென்றால் கிழக்குமாகாணத்தில் கூட்டாட்சி அமைக்க முஸ்லிம் காங்கிரசுக்கு முதலமைச்சர் பதவியையும் விட்டுத்தருகிறோம் என்றவர்கள் இவ்வாணையாளர் நியமனத்துக்கு ஒரு முஸ்லிம் நியமிக்கப்படுவதை எதிர்ப்பது தான். இது பற்றி அறிக்கை வெளியிட்டிருக்கும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்பிலி பாருக் “கிழக்கில் ஆட்சியமைக்க முஸ்லிம் காங்கிரசுக்கு முதலமைச்சர் பதவியை விட்டுத்தருகிறோம் என்று பேசிய தமிழ் தேசிய கூட்டமைப்பு எத்தகைய கபட நாடகத்தை ஆடியிருக்கிறது என்பது இப்போது தெளிவாகிறது” என்கிறார். (பார்க்க மீள்பார்வை இணையத்தளம்).

மேற்படி நியமனம் குறித்து தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் என்ன நிலைப்பாடு கொண்டிருக்கின்றார்கள் என்பதை அறிய கட்சியின் செயலாளர் பிரசாந்தனை தொடர்புகொண்ட போது அவர் கூறினார் “நாங்கள் எங்கள் மக்களின் தேவைகளுக்கமைய ஒரு தமிழரை கொண்டு வர முயன்றோம் எமது அதிகாரிகளின் அசமந்த போக்கால் அது சாத்தியமாகவில்லை. ஆனால் குறித்த பதவிக்கு சலீம் அவர்கள் நியமிக்கப்பட்டிருப்பதை நாங்கள் எதிர்க்கவில்லை. தமிழரா முஸ்லிமா என்பதைவிட அவர் சிறந்த நிர்வாகியா? மக்கள் சேவையாளனா? என்பதே முக்கியம் அந்த வகையில் சலீமின் நியமனம் சர்ச்சைக்குரியதல்ல” என்றார். இந்த பக்குவமும் சகிப்புத்தன்மையும் மட்டுமே இன்று அவசியமானது.

பல்லின மக்கள் இணைந்து வாழும் கிழக்கு மாகாணத்தில் விட்டுக்கொடுப்பும் இணைந்து வாழ்தலும் ஒன்றும் புதியதல்ல. மட்டகளப்பில் வை.அகமட் போன்றவர்கள் உதவி அரசாங்க அதிபராக பதவி வகித்திருக்கிறார்கள். 1992 டிசம்பர் 26 ஆம் திகதி கல்வியியலாளரும் சமூக ஆர்வலருமான வை.அஹமட் புலிகளின் கண்ணிவெடிக்கு இலக்காகி உயிரிழந்தார். 1980களில் சமீம் அவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வி அதிகாரியாக பணியாற்றியுள்ளார். இன்று மாகாணத்தின் 30 வீதமானவர்கள் முஸ்லிம்களாக வாழும் நிலையில் இது போன்ற நியமனங்கள் இயல்பானவையே.

மாறாக ஏன் தமிழர்கள் இத்தகைய அதிகாரங்களை கையகப்படுத்திக்கொள்ள முடியவில்லை? எஸ்.எல்.ஏ.எஸ் தரம் கொண்ட அதிகாரிகள் ஏன் தமிழர்களிடத்தில் இல்லாது போயினர்? என்கின்ற கேள்விக்கு பகிஸ்கரிப்பு என்றும் நிராகரிப்பு என்றும் தூபமிட்டு போர்முரசு கொட்டி கொலைகளை மட்டுமே தமிழர்களுக்கு பரிசாக வழங்கிய தமிழரசு கட்சியினரே பதில் சொல்ல வேண்டும். மாறாக தமது மக்களுக்கு சரியான பாதை காட்ட தவறிய கூட்டமைப்பினர் தாம் செய்த பாவத்தை மறைக்க இனவாதத்தை கிளறி குளிர்காய முயல கூடாது.



## மிகச்சிறிய வெளவால்கள்

தாய்லாந்தில் காஞ்சனபுரி எனும் இடத்தில் மிகச்சிறிய வெளவால்கள் காணப்படுகின்றன. இவற்றின் இறக்கைகள் விரியும் போதே வெறும் 160 மில்லி மீற்றர்தானிருக்கும்.

பெரும்பாலான வெளவால்களுக்குக் கூர்மையான பார்வைத் திறன் கிடையாது என்றாலும் வழியில் ஒரு மனிதமுடி தொங்கிக் கொண்டிருந்தாலும் அதன் மீது மோதாமல் .விலகிச் செல்லும் சக்தி இதற்குண்டு.

உலகிலேயே மிகப் பெரியப் பழம்தின்னி வெளவாலின் பெயர் “சுலோஸ்” என்பதாகும். இதன் நீளம் 16 அங்குலம். இதன் இறக்கைகளின் நீளம் 59 அங்குலம் ஆகும்.

## ஆன்ம செவிட்டுத் தன்மை!

காது கேளாதவன், உலகத்தைப் பார்க்கிறான் ஆனால், எதையும் கேட்க முடியவில்லை. திடீரென்று காது கேட்கிறது. “இதுவரை, இத்தனை சத்தம் எங்கிருந்தது... நான் கேட்கவில்லையே...” என்று ஆச்சரியப்படுகிறான்.

அதேபோல், உலகத்தில் உலவும் நல்ல எண்ணங்களையும், தீய எண்ணங்களையும் அறியக் கூடிய, சக்தியில்லாதபடி, ஆன்ம செவிட்டுத் தன்மை நமக்கு உள்ளது.

இந்த ஆன்ம செவிட்டுத் தன்மையை, அகற்றி விட முடியுமானால், உலகமெங்கும் பரவி நிற்கும் எண்ணங்களை எல்லாம், அறியும் சக்தியை பெற்று விடுவோம். அப்போது, “உலகில் இவ்வளவு தீமைகள் இருப்பதை அறியாமல் இருந்து விட்டோமே, இதை தடுக்க என்ன செய்யலாம்...” என்று யோசிப்போம்.

பகல் முழுவதும், மனதில் துக்கம் நிறைந்திருந்தாலும், இரவில், அனைத்தையும் மறந்து தூங்குகிறோம். இதனால், உறக்கத்தை, ஒரு வரப்பிரசாதமாகவே எண்ணுகிறோம்.

அதுபோல் தான், உலகில் தீய எண்ணங்கள் நிறைந்திருந்தாலும், அவற்றை அறியாமலிருந்து, மன சமாதானத்துடன் வாழ்வதற்காகவே, இந்த ஆன்ம செவிட்டுத் தன்மை நமக்கு அருளப்பட்டிருக்கிறது.



**‘ராஜாஜி சொன்ன உவமைகள்’ நூலிலிருந்து...**

## நெப்போலியனின் காதல் கடிதம்



அன்பே!

நேற்று போர்க்களத்தில் கடுமையான வேலை. கொஞ்சம்கூட ஓய்வில்லை.

உணவோ உறக்கமோ இன்றி ஒரு வாரமாக இருந்தும், நான் சுறுசுறுப்பாக வேலை செய்வது கண்டு எங்கள் குழுவினர் அனைவருமே ஆச்சரியப்பட்டனர். அது என்னால் எப்படிச் சாத்தியப்படுகிறது என்று எல்லோரும் திகைத்தனர்.

என்ன...? உனக்கு ஏதாவது புரிகிறதா?

நீ எழுதும் காதல் கடிதங்கள் என் சட்டைப் பையிலேயே இருப்பது வழக்கம். சோர்வு ஏற்படும்போது நான் அந்தக் கடிதங்களை எடுத்து ஒரு தடவை வாசிப்பேன். அவ்வளவுதான்! சோர்வு பறந்து விடும். புத்துணர்ச்சி உடல் எல்லாம் பரவும். அப்புறம் பசியாவது தாகமாவது...

ஒரு விஷயம் என் துயரங்களைக் கண்டு நீ மனத்தை அலட்டிக் கொள்ளக் கூடாது. துன்பம் என் நண்பன். அதை நான் வெறுக்க மாட்டேன். உலகத்தில் அபாரச் சாதனைகளைச் சாதிப்பதற்காகவே பிறந்த எனக்குத் துன்பம்தான் அரிய நண்பன். இன்பம் விரோதி. அது என்னைச் சோம்பேறி ஆக்கி விடும். கோழையாக மாற்றி விடும். அதை நான் வெறுக்கிறேன். இரவில் அதிக நேரம் கண் விழிக்காதே. உடம்பை ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்...

(ஆர். ஷண்முகம் எழுதிய ‘உலக உண்மைகள்’ நூலில்)

# இலக்கியப் பொங்கல்!

- என்.சந்தோஷ் -

இலக்கியத்தையும், இலக்கிய வாதிகளையும் கிண்டல் பண்ணுவது இப்போ ஃபாஷனாகி விட்டது. அது ரொம்ப ஈசியும் கூட. இலக்கியம் என்றாலே அது ஏதோ முப்பது பேர் எழுதி இருபது பேர் படிக்கிறது என்கிற நிலைமை ஒரு காலத்தில் இருந்தது. இன்றைக்கு அது சில ஆயிரம் பேர் படிக்கிறார்கள் என்றால் அதற்கு நம் இலக்கிய வாதிகள் சிந்திய ரத்தம் கொஞ்சம் நஞ்சமல்ல.

நேற்றுப் பெய்த முகநூல் மழையில் முளைத்த ஃபேக் ஐடி காளான்களெல்லாம் இலக்கியவாதிகளை இளக்காரம் பண்ணித் திரிவதை பார்த்தால் "வயலுக்கு வந்தாயா" என்கிற கட்டப்பொம்மன் வசனத்தை தான் வாய் முணுமுணுக்குது.

கனமாக ஒரு புத்தகம் எழுதினால், தலைக்கு வைச்சு தூங்கவா இல்லை தலையில் போட்டுக் கொல்லவா என்று தாறுமாறா ஸ்டேட்டஸ் போட்டு, கமெண்ட் எவ்வளவு லைக் எவ்வளவு என்று கணக்குப் பார்க்கிறார்கள்.

உட்கார்ந்து வாசிக்கிறதுக்கே பொறுமை கிடையாது, உருப்படியாக எதாவது எழுத முடியுமா என்றால் அதுவும் முடியாது, ஆனால் உயிரைக் கொடுத்து ஒருத்தன் ஓயாமல் எழுதிக்கொண்டிருப்பான், தமிழனின் வாசிப்புப் பழக்கத்தை ஒரு படி மேலே உயர்த்துவதற்கு தன் உடல் பொருள் ஆவியை கொடுத்து ஒருத்தன் உரையாடிக்கொண்டிருப்பான் அவனையும் அவன் எழுத்தையும் மதிக்காமல்




இவர்கள் பாட்டிற்கு குதர்க்கமாப் பேசி கும்மியடிப்பார்கள். கேரளாவிலும் எனக்கு சில நண்பர்கள் உண்டு. அவர்கள் எம்.டி.வாசுதேவன் முதல் இன்று எழுதிக்கொண்டிருக்கும் சந்தோஷ் எச்சிக்கானம் வரை இலக்கிய வாதிகளிடம் பெருமதிப்பும் பேரன்பும் கொண்டிருக்கிறார்கள். முரண்பாடுகள் இருக்கலாம், விமர்சனங்கள் இருக்கலாம் ஆனால் அதையும் தங்கள் வாசக அன்பிலிருந்தே விமர்சிக்கிறார்கள். நம்மவர்களைப் போல நாலு லைக்குக்காக தங்களுக்கு மொழியின் புட்டிப்பால் ஊட்டிய பேராசான்களையே எட்டி உதைக்கும் நிலைக்கு இறங்கிப்போவதில்லை.


நாற்பது ஐம்பது வருடப்போராட்டங்களுக்கு பிறகு இன்று தான் சில ஆயிரம் பேராவது சீரியசாக படிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அதையும் எள்ளி நகையாடி கொள்ளி வைத்து விடாதீர்கள் நண்பர்களே. இலக்கியமும், வாதிகளும் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல ஆனால் அதை விரிவாக எழுதி நிறுவுங்கள். அலுவலக வேலைகளுக்கு இடையில் கிடைக்கும் ஓசி இன்டர்நெட் கனெக்ஷனில் ஈசியாக நாலு வரி எழுதி விட்டு ஓடாதீர்கள்.

இன்றைக்கும் நானூறு பிரதிகளுக்கு மேலே எந்த நல்ல புத்தகமும் விற்பதில்லை என்று எழுத்தாளனையே கதறடிக்க வைக்கும் சமூகத்தில் தான் நாமிருக்கிறோம் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். நமது எழுத்தாளர்களை இன்னும் ராயல்டியை நம்பி ஒரு சிங்கிள்டீ கூட வாங்கமுடியாத சோகத்தில் தான் நாம் வைத்திருக்கிறோம் என்கிற நிதர்சனத்தை உணருங்கள்.

இன்றைக்குத் தான் நிலைமை கொஞ்சம் கொஞ்சமாக மாறிக்கொண்டிருக்கிறது. வாராவாரம் வலைப்பூவில் "பேருந்து சீட்" கிறுக்கல்கள் போல எதையாவது எழுதிக்கொண்டு, வாழ்க்கையே எழுத்துக்காக அர்ப்பணித்தவர்களின் தியாகத்தின் மீது திருவிளையாடல்கள் நடத்தாதீர்கள் நண்பர்களே.

நம்மை மொழி என்னும் ஏர் கொண்டு உழுது பக்குவப்படுத்தும் உழவர்கள் நம் எழுத்தாளர்கள். அவர்களை கொண்டாடுவோம், அவர்களின் எழுத்துகளை வாங்கி படிப்போம். அவர்களின் தேடலுக்கும், உழைப்புக்கும் மரியாதை செய்வோம் என்று வரும் பொங்கல் நன்னாளில் உறுதி ஏற்போம்.!

## நுளம்புக்குப் பல் இல்லை!



நுளம்புக்கடி தாங்க முடியவில்லை என்கிறோம். ஆனால் நுளம்புக்குப் பல் இல்லை. பல்லில்லாமல் எப்படி கடிக்க முடியும்? நுளம்பின் தலைப் பகுதியில் ஊசி போன்ற குழல் ஒன்று உள்ளது. அதை வைத்து ஒரு குத்துக் குத்தி "சர்"ரென்று இரத்தத்தை உறிஞ்சும் போது நமக்கு வலிக்கிறது. நுளம்பு கடித்துவிட்டதாக நாம் சொல்கிறோம்.

நுளம்பு கடித்த இடத்தில் லேசாக அரிக்கும். இதற்குக் காரணம், நுளம்பு நமது இரத்தத்தை உறிஞ்சும் போது, இரத்தம் உறையாதிருப்பதற்காக ஒரு திரவத்தை நைசாக நம் மீது உமிழ்ந்துவிடுகிறது. அந்தத் திரவம் நம் தோலில் படுவதால்தான் அரிப்பு.

அப்பாவி ஆண் நுளம்புகளுக்கு மனிதர்களைக் கடிப்பது, நோயைப் பரப்புவது எல்லாம் தெரியவே தெரியாது. எல்லாம் இந்த பெண் நுளம்புகள் செய்கிற அட்டூழியம்!

# போருக்குப் பின்னான தமிழ்த் திரைப்படங்கள் 5

- ரதன் -

## With You, With out you

அடகுக் கடை வைத்திருக்கும் ஒரு சிங்களவருக்கு அக் கடைக்கு அடிக்கடி வரும் ஒரு தமிழ்ப் பெண் மீது ஒரு ஈர்ப்பு ஏற்படுகின்றது. அப் பெண்ணிற்கு அப் பெண்ணின் உறவினர்கள் வயது முதிர்ந்தவரை திருமணம் செய்து வைக்கப்போகின்றார்கள் என அறிந்து இவர் அப் பெண்ணை திருமணம் செய்து கொள்கின்றார். இவர்களின் திருமணத்தின் பின்னர் ஒரு நாள் அடகுக் கடைக்காரரின் நண்பர் இவர்களது வீட்டில் வந்து தங்குகின்றார். நண்பர் மூலம் அடகுக் கடைக்காரரின் முன்னாள் வாழ்வு - அவர் முன்னர் இராணுவத்தில் வேலை பார்த்தவர் என்பது தெரியவருகின்றது. இது அவரது தமிழ் மனைவிற்கு அதிர்ச்சியளிக்கின்றது. இத் தமிழ்ப் பெண்ணின் குடும்பம் இராணுவத்தால் சிதைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது இப் பெண்ணிற்கு உளச்சிக்கல். தனது குடும்பத்தைக் கொன்றவருடன் எப்படி வாழ்வது என்பது அவளின் கேள்வி. தனது அடகுக் கடையை ஒரு முஸ்லீம் வர்த்தகரிடம் விற்று விட்டு மனைவியின் விருப்பமான இந்தியாவிற்கு செல்வதை நிறைவேற்ற முயற்சிக்கின்றார். பணத்துடன் வருபவருக்கு அதிர்ச்சியான செய்தி ஒன்று காத்திருக்கின்றது. இவரது மனைவி தற்கொலை செய்து கொள்கின்றார்.

"A Gentle Creature" by Fyodor Dostoyevsky சிறுகதையை மையமாகக் கொண்டே இப் படத்தை பிரசன்ன உருவாக்கியுள்ளார். இப் படத்தில் தமிழ்ப் பெண்ணாக மராத்திய நாடகரான அஞ்சலி பட்டீல் மிகவும் சிறப்பாக நடித்திருந்தார். இவர் சில ஹிந்தி படங்களிலும் நடித்துள்ளார். முன்னாள் இராணுவ வீரனாக இயல்பாக நடித்துள்ள சியாம் பெர்னாண்டோவும் ஒரு நாடகராவார்.




இப் படத்தை ரொறண்ரோவில் திரையிடலுக்குப் பின்னர் பிரசன்னவுடனான கலந்துரையாடலும் இடம் பெற்றிருந்தது. எனது சிங்கள இனத்தின் கொடுமைகளுக்கு எதிராக எனது மனச்சாட்சியை பதிவு செய்துள்ளேன் என பிரசன்ன கலந்துரையாடலில் தெரிவித்தார். இறுதியில் தமிழ் மனைவி தற்கொலை செய்வது சிங்கள அரசு தமிழ் மக்களையும் அவர்களது உரிமைகளையும் கொலை செய்து விட்டது என்பதையே காட்டுகின்றது. தமிழ் மக்களுக்கு சம உரிமைகள் வழங்கப்படவேண்டும். இல்லேயேல் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ்வது சாத்தியமில்லை என்பதையும் இப்படம் தெளிவாக குறிப்பிடுகின்றது. படத்தின் இறுதியில் இவரது அடகுக் கடையை ஒரு முஸ்லீம் வர்த்தகர் வாங்குகின்றார். இன்று இலங்கையில் முஸ்லீம்கள் தொடர்ச்சியாக வர்த்தகரீதியில் பலமானவர்களாக மாறுகின்றனர். படத்தில் காட்டப்படும் சம்பவம் சாதாரண-மானதாகவும் இயல்பானதாகவும் இருக்கலாம். ஆனால் அடுத்த கட்டத்துக்கான எச்சரிக்கை ஒன்றையும் இங்கு பிரசன்ன பதிவு செய்ய தவறவில்லை. பிரசன்ன தனது "ஆவணி வெய்யில்" படத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்டதை விமர்சிக்கின்றார். இவர் ஒரு நேர்மையான படைப்பாளியாகவே செயல்பட்டுவருகின்றார்.



பொதுவாகவே பிரசன்னவின் படங்களில் போர்க் காட்சிகள் இடம் பெறாது. ஆனால் போர்ச் சூழலின் கோர முகங்கள் இப் படங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கும். இவரது அனைத்துப் படங்களிலும் குற்ற உணர்வு ஒரு பாத்திரமாக மையமாக இருக்கும். இவரது ஒவ்வொரு படத்திலும் நிறம் மாறுபட்டிருக்கும். ஆவணி வெய்யிலில் படம் முழுவதும் மதிய நேரம் கடும் வெயில் அனல் கொதிப்பது தெரியும். போரின் அகோரத்தை வெளிப்படுத்துகின்றது இந் நிறம் மற்றும் சூழல். இப் படம் ஒரு சில காட்சிகளை தவிர அனைத்துக் காட்சிகளும் இருளான பொழுதிலேயே படமாக்கப்பட்டுள்ளது. இது போர் முடிந்தும் இன்னமும் விடிவு பிறக்கவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றது. இருள் சூழ்ந்த மனத்துடனேயே தமிழ் மக்கள் உள்ளார்கள் என்பதைக் குறிக்கின்றது. இயற்கை ஒளியின் ஊடாகவே சூழல் அனர்த்தங்களையும் மனோநிலையையும் வெளிப்படுத்துகின்றார்.

முன்னால் இராணுவ வீரன் தேர்ந்து எடுக்கும் தொழில் மனச்சாட்சியற்ற அடகு வைக்கும் கடை. கடின மனம் கொண்டவர்களாலேயே இத் தொழில் செய்ய முடியும். இது பிரசன்ன இராணுவ வீரர்கள் மீது தொடர்ச்சியாக வைக்கும் விமர்சனமாகும்.

பிரசன்ன தமிழ் மக்களுக்கு உரிய முறையான தீர்வு வழங்கப்பட்ட பின்னரே சேர்ந்து வாழ்தல் சாத்தியம் என்கின்றார். அசோக ஹங்கம முரண் நிலையில் தமிழ் மக்கள் சிங்கள மக்களை சார்ந்திருத்தல் அவசியம் என்கின்றார். இங்கு அசோக ஹங்கம பக்க சார்பு நிலையிலேயே தனது பதிவை முன்வைக்கின்றார். இதனை ஒரு மேலாதிக்க பார்வை என்று கூட கூறலாம். பிரசன்ன போர்ச் சூழலில் இருந்து சற்று விலகி உள்ள பிரதேசத்தில் தனது படத்தை உருவாக்கி போரின் கோரங்களை வெளிப்படுத்துகின்றார். அசோக ஹங்கம இராணுவம் 24மணி நேரமும் பிரதேசம் முழுவதும் பரவியிருக்கும் பிரதேசத்தில் தனது படத்தினை படமாக்கியுள்ளார். களமும் அங்கு தான் உள்ளது. ஆனால் மருந்துக்குக் கூட ஒரு இராணுவத்தையும் காணவில்லை. அதன் அழுத்தங்களையும் முகங்களையும் கூட படத்தினூடாக பெறமுடியவில்லை.

போருக்குப் பின்னான படைப்புக்கள் போர் ஏற்படுத்தியுள்ள உள்மனச் சிக்கல்களையும், மனக் காயங்களையும் குற்ற உணர்வையும் கருப்பொருட்களாக பதிவு செய்கின்றன. இந்த மெய்யுணர்வு விளக்கத்தை சில படைப்பாளிகள் சிறப்பாக வெளிப்படுத்த தவறிவிடுகின்றார்கள். பிரசன்ன விதானகே, லெனின் சிவம், சதா பிரணவன் போன்றோர் இதனை சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளனர். போரினை கட்டுடைக்கும் இப் படைப்புக்கள் சமூக சக்திகளையும், ஆக்கிரமிப்புச் சக்திகளையும் இனம் காட்டத் தவறவில்லை. இவ்வாறான ஆழமான படைப்புகளின் தொடர்ச்சி போரின் கோரத்தையும் பன்முகத்தன்மையும் உலகிற்கு நினைவூட்டிய வண்ணமே இருக்கும்.






# நிகழ்வுகளின் பதிவுகள்....


நுணாவில் அமெரிக்கன் மிஷன் திருச்சபையின் நல்லாயன் அரங்கத்திறப்பு விழாவும் நத்தார் ஆராதனையும் அண்மையில் இடம்பெற்றது. இதன் பதிவுகள்... (11)





வடக்கு மாகாண கல்வித்திணைக்களமும், ஜீ.ரி. இசற் பாடசாலை அபிவிருத்தி பிரிவும் இணைந்து நடாத்திய பரிசளிப்பு விழாவில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், வடக்கு கல்வி அமைச்சின் பிரதிக்கல்விப்பணிப்பாளர் எஸ். இராதாகிருஷ்ணன் மாணவிக்கு பரிசில் வழங்குவதைக் காணலாம். (01)






சம்பத் வங்கியின் சமூகப் பொறுப்பு நிதியத்தின் ஊடாக மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. நூல்களை கையளிக்கும் நிகழ்வில் விருந்தினர்கள் நிற்பதையும் மாணவர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (48)





கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் வைரவிழாவும் மலர்வெளியீடும் அண்மையில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், மாணவர்களின் கலை நிகழ்வையும் காணலாம். (51)



திருநெல்வேலி சம்பத் வங்கி கிளையினால் கடந்த புத்தாண்டு தினத்தன்று சிறுவர் சேமிப்புக்கணக்கினை ஆரம்பித்த மாணவனுக்கு வங்கி முகாமையாளர் அ.முரளிதரன் பரிசு வழங்குவதைக் காணலாம். (54)





காரைநகர் அமெரிக்கன் மிஷன் திருச்சபையின் ஒளிவிழா அண்மையில் நடைபெற்றது. இதன் பதிவுகள். (50)

# விஞ்ஞான அடைவை மேம்படுத்த வலயத்தினால் விசேட செயற்றிட்டம்

(அச்சுவேலி)

மாணவர்களின் விஞ்ஞான பாட அறிவினை மேம்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் அவர்களின் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளை அதிகரிப்பதற்காக பல்வேறு செயற்றிட்டங்கள் இவ் வருடத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் என யாழ்பாணக் கல்வி வலயத்தின் விஞ்ஞானப் பிரிவின் உதவிக்கல்விப்பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட யாழ்பாணம், நல்லூர், கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் விஞ்ஞான பாடத்தினைக் கற்பித்து வரும் ஆசிரியர்களுடனான தரவட்டக் கலந்துரையாடலின் போது, இத்தகவலினை வெளியிட்ட விஞ்ஞானபாட உதவிக்கல்விப் பணிப்பாளர் ரி.கதிர்காமநாதன் இவ்வாண்டின் ஆரம்பத்திலிருந்து தரம் 6 முதல் 11 வரையான வகுப்புகளில் பயின்று வரும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்தும் வகையில் வகுப்பு ரீதியான செயன்முறைச் செயற்பாடுகளை வினைதிறனாக்குதல், ஒவ்வொரு மாதமும் தனித்தனியான மதிப்பீடுகளை நடாத்துதல், போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடனும், விருப்புடனும் செயலாற்ற வேண்டும் எனவும், இதற்காக அனைத்து ஆசிரியர்களினதும் ஒத்துழைப்பினையும் எதிர் பார்ப்பதாகவும் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை ஏற்கனவே வலய மட்டத்தில் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை திட்டமிட்டவாறு நடைமுறைப்படுத்துமாறும், இதுவரை ஆய்வுகூட பற்றாக்குறை பட்டியலினை சமர்ப்பிக்காதவர்களை உடனடியாக அப்பட்டியலை சமர்ப்பிப்பதன் மூலம் ஆய்வுகூடப் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைக் கேட்டுள்ளார். (03)

# மக்கள் பயன்பெற்ற நடமாடும் சேவை



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் மெத்தா பவுண்டேசன் ஊனமுற்றோருக்கு செயற்கைக்கால் பொருததல், திருத்துதல் நிகழ்ச்சித் திட்டத்தை கடந்த வியாழக் கிழமை கருணை நிலையத்தில் நடாத்தியது.

இந்த நிகழ்வில் கரைச்சி , கண்டாவளை, பச்சிலைப் பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 50 பேர் செயற்கை கால்களை பொருத்துதல், திருத்துதல் ஆகியவற்றை செய்து கொண்டனர்.

முற்றிலும் இலவசமாக இந்தச் சேவை நடத்தப்பட்டது. இந் நிகழ்வு வெற்றிகரமாக நடப்பதற்கு மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள் ஆகியவை தமது பங்களிப்பை நல்கி இருந்தன. (90)

## புகைத்தல் எதிர்ப்புதினம் இன்று பிரகடனம்

(யாழ். நிருபர்)

புகைப்பிடித்தலுக்கு எதிரான தினமாக இன்று 13ஆம் திகதியை சுகாதார அமைச்சு பிரகடனப்படுத்தியுள்ளது.

சிகரட், பீடி, சுருட்டு ஆகியவற்றை வியாபாரநிலையங்களில் இன்று விற்பனை செய்ய வேண்டாமென சகல வியாபார நிலையங்களிடமும் சுகாதார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொழும்பு தாமரைத்தடாக முன்றலில் இருந்து இன்று காலை 7.45 மணிக்கு புகைப் பிடித்தலுக்கு எதிரான பாதயாத்திரை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (10)

# சிறப்புற நடைபெற்ற வாழ்வகத்தின் பரிசளிப்பு விழா



(யாழ்ப்பாணம்)

வாழ்வகத்தின் ஸ்தாபகரான அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் உதயநாளும் பரிசுத் தினமும் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு மருதனார்மடம் வாழ்வகத்தின தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வழிபாடு இடம் பெற்றதைத் தொடர்ந்து வாழ்வகக் கொடியை தலைவர் ஏற்றி வைத்தார்.

விருந்தினர்களினால் மங்கள விளக்கு ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து நிலைய மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. தொடர்ந்து வரவேற்புரையை நிறுவனத்தின் பொருளாளர் த.வாமதேவன் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் உதவிச்செயலாளர் திருமதி செலின் சுகந்தி செபஸ்தியான், சிறப்பு அதிதிகளாக சமூக சேவை அமைச்சின் அங்கவீனமுற்றவர்களுக்கான தேசிய சபையின் உறுப்பினர் வெ.சுப்பிரமணியம் ஹற்றன் நஷனல் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் க.இந்திரவாசன் யாழ்ப்பாணம் பிரதேச செயலக சமூக சேவை அலுவலர் வ.சுரேஷ்குமார்,தொழில் உரிமையாளர் ஜே.எஸ்.அலெக்ஸ் நிக்ஷன் கௌரவ விருந்தினராக செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் ஆகியோர் கலந்து கொண்டனர். (90)

# வேலை வாய்ப்புச் செய்திகள்

இலங்கையில் சாரிகள் வேக் பண்ணும் இடத்திற்கு சாரி வேக் டிசைன் அனுபவம் உள்ளவர்களும் இல்லாதவர்களும் தேவை. நல்ல நாள் சம்பளம் வழங்கப்படும் தொடர்புக்கு 0776646846.

---

உடல்நலத்துடன் இருக்கும் வயதான தம்பதியினருக்கு சமைத்துக் கொடுக்க தமிழ் பணிப் பெண் ஒருவரை உடன் எதிர்பார்க்கிறோம் நல்ல சம்பளம் தரப்படும் சகல வசதிகளும் செய்து தரப்படும் தொடர்புக்கு 072 9533679.

---

கொழும்பில் பிரபல குளிரூட்டப்பட்ட சலூன் ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை. தொடர்புக்கு 0714622332.

---

நிறுவனமொன்றில் வேலைவாய்ப்பு, கணக்காளர், கிளாக், உதவியாளர், பொதியிடல் உதவியாளர் 18-50 வயது வரை ஆண், பெண்கள் தேவை. உணவு, தங்குமிடம் உண்டு வருகை தரும் நாளிலேயே வேலைக்குச் செல்ல முடியும் குழுக்களாகவும் இணைத்துக் கொள்ளப்படுவர் எல்லாப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கும் முன்னுரிமை தொடர்புக்கு 0775964299.

---

பிரபல விற்பனை நிறுவனத்திற்கு கணனித் துறையில் தேர்ச்சி பெற்ற Tally Course முறையாக கணக்குகளை பேணக் கூடிய திறமை வாய்ந்த 45 வயதுக்கு குறைந்த பெண்கள் தேவை. சம்பளம் திறமை அனுபவம் என்பவற்றுடன் பேசித் தீர்மானிக்கப்படும் தொடர்புக்கு 0714727427.

---

இலங்கையில் அனைத்துப் பிரதேசத்திலும் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.ஆண், பெண் இருபாலாருக்கும் உடனடி வேலைவாய்ப்புக்கள் பிரபல தொழிற்சாலைகளான ஜேம், சொக்லேட், ஆடை, பால்மா, தேயிலை, Pvc குழாய், பிளாஸ்டிக் போன்ற தயாரிப்புக்களுக்கு உற்பத்தி லேபல் பொதியிடல் பிரிவுக்கு தேவை. உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில் ( நண்பர்கள், குழுக்கள், தம்பதியர் ஒரே தொழிற்சாலைகளிலும்) மற்றும் அனைத்து பிரதேசங்களிலும் எமது காரியாலயங்கள் தொடர்புக்கு 0775561883.

---

type Setter தேவை. மும்மொழிகளும் நன்கு தெரிந்த ரைப் செட்டர் தேவை. சகல விபரங்களுடன் தொடர்புக்கு 0773354643.

---

புதிய நகைக் கடை விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள விற்பனையாளர்கள் தேவை. தங்குமிட வசதி உண்டு. நல்ல சம்பளம் வியாபாரத்திற்கு கொமிஷன் தொடர்புக்கு 0773019537, 0771164209.

---

சாரதி தேவை. வீடு அலுவலகம் வேலைக்கு சாரதி தேவை. 50 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். சம்பளம் '18000 ரூபா தொடர்புக்கு 0777893191.

---

வெள்ளவத்தையில் இயங்கும் Ladirs Salon இற்கு வேலை தெரிந்தவர்களும் உதவியாட்களும் தேவை. தொடர்புக்கு 0777745972.

---

கொழும்பில் வீடொன்றில் தங்கியிருந்து சாரதி வேலை செய்வதற்கு சாரதி ஒருவர் தேவை. குடிப்பழக்கமற்ற நற்பண்புள்ள 45 வயதுக்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது.

---

நீர்கொழும்பில் பிரபல ஆயுள் காப்புறுதி நிறுவ்னத்தில் தொழில் வாய்ப்பு ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் தொடர்புக்கு 0775237778.

---

கொழும்பிலுள்ள நிறுவனமொன்றிற்கு Helper வேலைக்கு ஆட்கள் தேவை. தங்குமிட வசதிகள் வழங்கப்படும் கவர்ச்சிகரமான சம்பளம் உண்டு உடன் தொடர்புக்கு 0773600556.

---

கொழும்பிலுள்ள கடதாசி பொதி செய்யும் தொழிற்சாலை ஒன்றுக்கு ஆண்களும், பெண்களும் வேலைக்குத்தேவை. சம்பளம் 14,000முதல் 18,000வரை இலவச மதிய உணவு மற்றும் தங்குமிடவசதிகள் உடன் தொடர்பு கொள்ளவும் 0773435389.

# பிரச்சினைகளுக்கு தீர்வுகளை எட்ட மக்கள் போராட வேண்டும்

## மாகாணசபை எதிர்க்கட்சி உறுப்பினர் வை.தவநாதன்



வடக்கில் 37 துறைகள் மகாணசபையிடமுள்ளன. அதில் பல முக்கிய துறைகளும் அடங்குகின்றன அதுசார்ந்த துறைகளில் மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் ஆகக்கூடியளவு போராடவேண்டும். என வடக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி செல்வாநகரில் நேற்று முன்தினம் முன்பள்ளிக்கட்டடத்திற்கு அடிக்கல்லினை நாட்டிவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்.

நாடாளுமன்றஉறுப்பினர் மு.சந்திரகுமாரின் வருகையின் போதெல்லாம் செல்வாநகர் பிரதேச மக்கள் முன்வைத்த கோரிக்கைகளில் அநேகமானவை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மாவட்டத்திற்கு மின்னிணைப்புப் பணிகள் விஸ்தரிக்கப்பட்ட காலப்பகுதியில் விசேட மின் வழங்கல் திட்டத்திற்காக கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு கிராமத்தைத் தெரிவு செய்து தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அன்றைய மின்வலு எரிசக்தி அமைச்சர் கேட்டுக்கொண்டபோது நாடாளுமன்ற உறுப்பினரால் செல்வாநகர் கிராமமே தெரிவுசெய்யப்பட்டிருந்தது.

அத்தோடு இவ்வீதி மார்க்கமாகவே உயர் அழுத்த மின்சாரமும் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதில் அவர் அதிக அக்கறைகொண்டு செயற்பட்டிருந்தார். மேலும் இங்கு கொங்கிறீட் பாதையினை அமைப்பதற்கும் நாடாளுமன்றஉறுப்பினரே மூலகாரணமாக செயற்பட்டிருந்தார்.

அதேவேளை அவர் நாடாளுமன்ற தேர்தல் பிரசாரத்தின்போது இப்பகுதியில் வைத்து உறுதியளித்ததற்கு அமைவாக அவரது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து நிதியினை ஒதுக்கீடு செய்துமுன்பள்ளி ஒன்றினையும் அமைத்துள்ளார். இது போன்ற பல வேலைத்திட்டங்கள் இங்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

ஆனால் இவை மட்டும் இப்பகுதி மக்களின் முன்னேற்றத்திற்குபோதுமானதல்ல எனக் குறிப்பிட்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், தொடர்சசியாக நாம் மக்கள் நலன் சார்ந்த கொள்கைத் திட்டங்களை வகுத்து அதற்கமைவாக செயற்பட்டு வருகின்ற போதும் தேர்தல் காலத்தில் மக்கள் வெறும் வாய்பேச்சுக்களுக்கு வசப்பட்டு செயற்றிறனற்றவர்களுக்கு வாக்குகளை வழங்கி விடுகின்றார்கள். எனவும் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்திலே மாகாண சபைக்கு 37 துறைகளில் அதிகாரங்கள் இருக்கின்றன. மத்திய அரசாங்கத்திற்கு 35 துறைகளில் அதிகாரங்கள் இருக்கின்றன. அதிலும் மிக முக்கிய துறைகள் எல்லாம் மாகாண சபைக்குள்ளேயே அடங்குகின்றன.

எனவே, மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுத் தருமாறு மாகாண சபையிடம் கேட்கும் உரிமை மக்களுக்குண்டு. மக்கள் நியாயப்படி தமக்குக் கிடைக்க வேண்டிய வாய்ப்புக்களையும் உரிமைகளையும் தடைசெய்யமுனைபவர்களை கேட்கும் அதிகாரத்தை கையில் எடுக்க வேண்டும். அதற்காக மாகாண சபையின் ஆளும் கட்சியினரை சந்தித்து பேசவும் மகஜர்களை வழங்குவதற்கும் தேவையேற்படின் போராட்டங்களை நடாத்துவதற்கும் மக்கள் முனைய வேண்டும்.

பொதுமண்டபங்கள் ஒவ்வொன்றும் சுமார் 26 இலட்சம் ரூபா வரையான நிதியொதுக்கீட்டுடனும் முன்பள்ளிகள் ஒவ்வொன்றும் சுமார் 19 இலட்சம் ரூபா பெறுமதியான நிதியொதுக்கீட்டுடனும் அமைக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைவாக இன்று மட்டும் வட்டக்கச்சி கட்சன் வீதியில் சூரிமுன்பள்ளி. செல்வாநகரில் செல்வா முன்பள்ளி ஆகியவற்றை அமைப்பதற்கும், கிளிநொச்சி பன்னங்கண்டியில் பொதுநோக்கு மண்டபத்தினையும். மற்றும் கணேசபுரம் பொதுநோக்கு மண்டபத்தினையும் அமைபபதற்கான பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இவற்றுக்கு வடக்கு மாகாண சபை உறுபபினர் வை.தவநாதன் அடிக்கற்களை நாட்டி ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வுகளில் கரைச்சி பிரதேச சபைஉறுப்பினர் கிருஸ்ணசாமி, கரைச்சிப் பிரதேச செயலர் நாகேஸ்வரன், கரைச்சி பிரதேச செயலக பிரதித் திட்டப் பணிப்பாளர் அமல்ராஜ், பிரதேச செயலக அபி விருத்தி உத்தியோகத்தர் பிரகலாதன், கரைச்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழு அலுவலர் கருணாகரன் மற்றும் பிரதேசங்களின் அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர்கள், மாதர்கிராம அபிவிருத்திச்சங்கங்களின் பிரதிநிதிகள் முதியோர்சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# தமிழர் திருநாளான பொங்கல் தினத்தை மகிமைப்படுத்துகிறது அஞ்சல் திணைக்களம்




தமிழர்களின் அதிமுக்கிய திருநாளாம் தைப்பொங்கல் தினத்தினையொட்டி நேற்று இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் முத்திரைகள் பணியகம் ரூபா 5.00 ரூபா 25.00 எனப் பெறுமதிகொண்ட இரண்டு அஞ்சல் முத்திரைகளையும் ஞாபகார்த்த மலர்த்தாள் ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனைசெய்வோம் என்கிற பாரதியாரின் வாக்குக்கிணங்க சிறந்த அறுவடைக்கு உறுதுணையாக அமைந்த இயற்கைக்கும், சூரியனுக்கும் சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும் நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் நாள் தைப்பொங்கல் திருநாளாகும். உலகெங்கும் வாழும் தமிழர்களால் சமய வேறுபாடின்றி இத் தைத்திருநாள் கொண்டாடப்படும்.

உழவன் உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் நாள் தைப் பொங்கல் திருநாளாகும். தனது முதற்பயனை இறைவனுக்குக் கொடுத்து அதன்பின் இறைவன் அடியார்களுக்கும், சுற்றத்தவர்களுக்கும் கொடுப்பது தொன்றுதொட்டு வந்த தமிழர் பண்பாடு ஆகும்.

### சோதிடவியலில் பொங்கல்

மகரராசியில் சூரியன் புகும் காலம் மகரரவி எனப்படும். அதுவே உத்தராயண புண்ணிய காலம். உத்தர அயனம் என்றால் வடக்குப் புறமான வழி என்றுபொருள். சூரியன் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் காலமாகிய உத்தராயண காலத்தின் தொடக்க நாள் தை மாதத்தின் முதல் நாள் ஆகும்.

சூரியன் தனு ராசியிலிருந்து மகர ராசிக்குச் செல்லும் நாள் என சோதிடவியல் கூறும்.

### கொண்டாடப்படும் முறை

பொங்கல் தினத்திற்கு முதல் நாள் மார்கழி மாதத்தின் இறுதி நாள் போகிநாளாகும். தமிழ் மக்கள் தம் இல்லங்களைத் துப்புரவு செய்து, வெள்ளை அடித்து, வர்ணம் பூசி ஒளிபெறச் செய்வா.

பொங்கலுக்குத் தேவையான புதுப் பானை முதல் அனைத்துப் பொருட்களையும் வாங்கி ஆயத்தங்கள் மேற்கொள்வர்.

பொங்கல் தினத்தன்று அதிகாலையில் எழுந்து நீராடி, புத்தாடை அணிந்து, புதிய பானைகளில் புதிய நெல்லைக் குற்றி எடுத்த அரிசியை புதிய அடுப்பு மூட்டி முற்றத்தில் வைத்துப் பொங்குவார்கள். புதிய பாவைகளுக்குப் புதிய மஞ்சளைப் புதிய நூலிற் காப்பாக அணிவார்கள்.

புதிய மஞ்சள் கொத்தையும், கரும்பையும், வள்ளிக் கிழங்கையும், பூசணிக்காயையும் பொங்குமிடத்தில் வைத்து அலங்கரிப்பர். கோலமிட்டு செம் மண் தீட்டியதும் இல்லத்தின் வாசலில் மஞ்சளினால் பிள்ளையார் பிடித்து வைத்து, விளக்கேற்றி, சூரியனை வழிபட்டு பொங்கலிடத் தொடங்குவர். பொங்கிவரும் பொழுது உழவர்கள் மனைவி மக்களுடன் பொங்கலோ பொங்கல் என ஆரவாரித்து மகிழ்வார்கள்.

சக்கரைப் பொங்கலை சூரியனுக்கு நிவேதனம் செய்து கூரை மீது எறிவர். பின்னர் குடும்பத்தனருக்கும், சுற்றத்தாருக்கும் பகிர்ந்து கொடுத்து தாமும் உண்டு மகிழ்வர். இது தமிழர்களின் பண்பாடாக தொன்றுதொட்டு இருந்து வருகின்றது.

இந்த தைத்திருநாளை முன்னிட்டு அஞ்சல் திணைக்களம் வெளியிட்டிருக்கும் தபால் தலைகளின் தொழில்நுட்ப விடயங்களும் வெளியாகியுள்ளன.

**தொழில்நுட்ப விபரங்கள்**

| | |
|---|---|
| வெளியிடும் திகதி | :- ஜனவரி 2014 - 12 ஆம் திகதி. |
| இனப்பெறுமதி | - ரூபா 5.00, ரூபா 25.00 |
| வடிவமைப்பாளர் | :- புலஸ்தி எதிரிவீர |
| வடிவம் | :- கிடையானது |
| முத்திரை அளவு | :- 41 மி.மீ X 30 மி. மீ |
| அச்சீட்டு செயல்முறை | :- எதிர்ப்படி கல்வீச்சுமுறை |
| தாளமைப்பு | :- நாளொன்றுக்கு 20 முத்திரைகள் |
| துளையீடு | :- 13 1/2 x 14 |
| அச்சாளர்கள் | :- அரசாங்க அச்சுத் திணைக்களம், இலங்கை. |
| பாவிக்கப்பட்ட நிறங்கள | :- 4 நிறங்கள் |
| தாள் | :- 102 ஜி.எஸ்.எம்.பாதுகாப்பான முத்திரைத்தாள் |
| பசை | :- பிவிஏ |
| அச்சடித்த தொகை | :- முத்திரை ரூ.5.00 - 500,000<br>முத்திரை 25.00 - 300.000 |
| ஞாபகார்த்த மலர் | :- ரூபா 30.00 - 15,000 |
| கடைசித் திகதி | :- 2015- 01.11 |

(இ)

# அணில் பாய்ந்ததால் இருள்சூழ்ந்தது துரித நடவடிக்கையால் ஒளி பிறந்தது

## மின்சார சபைக்கு மக்கள் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

மின் ஒழுக்கு காரணமாக நேற்று முன்தினம் இருளில் மூழ்கிய யாழ். நகரின் கச்சேரிப் பகுதியை அண்டிய மக்களின் அவஸ்தையை மின்சார சபையினர் மூன்று மணி நேரத்திற்குள் சீர் செய்து மக்களின் பாராட்டைப் பெற்றுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

யாழ். கச்சேரிப் பகுதியின் பழைய பு,ங்கா வீதியில் அமைந்துளள மின்கம்ப இரு கம்பிகளுக்கிடையே நேற்று முன்தினம் மாலை 5.45 மணியளவில் அணில் சிக்கியமையால் மின் ஒழுக்கு ஏற்பட்டது.

இதனை அவதானித்த வழிப்போக்கர்களால் மின்சார சபைக்கு தொலைபேசி ஊடாகத் தெரியப்படுத்தப்பட்டது. ஸ்தலத்திற்கு உடனடியாக விரைந்த மின்சார சபையினர் குறித்த பகுதிக்கான மின் விநியோகத்தை உடனடியாக நிறுத்தியதுடன் மின் ஒழுக்கை சீர்செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

மூன்று மணித்தியாலய போராட்டத்திற்குப் பின்னர் மின் ஒழுக்கு சீர்செய்யப்பட்டு மீண்டும் மின் விநியோகம் வழங்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து அறியாத இப்பகுதி மக்கள், முன் அறிவித்தலின்றி மின் விநியோகத்தை மின்சார சபை நிறுத்திவிட்டது என்று கடிந்து கொண்டனர். பின்னர் குறித்த சம்பவத்தை கேள்விப்பட்டதுடன் மின்சார சபையின் துரித நடவடிக்கையைப் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# இந்திய பிரஜை கிழக்கில் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இலங்கையில் தங்கியிருந்த இந்தியப் பிரஜை ஒருவர் பொத்துவில், துண்டுமடுவ பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொத்துவில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலைத் தொடர்ந்து மேற்கொண்ட தேடுதலின்போது இந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுற்றுலா வீசாவில் வந்த நபர் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டதன் காரணமாக கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நபரிடமிருந்து இந்திய சேலைகள் 56 பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர் பொத்துவில் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை - 2013

# கல்வி முரசு

வங்கிக் கணக்கிணக்கக்கூற்று

பகுதி - I - II

2 மணி

ஆசிரியர்:-
எஸ்.சசீகரன்

1. முருகன் என்ற வியாபாரியின் 2011 ஜனவரி மாதத்திற்கான காசேட்டின் படி வங்கி மீதி ரூபா 15,000.00 வரவு மீதி ஒன்றினைக் காட்டியது. ஆனால் வங்கிக் கூற்று மீதி ரூபா 17,250.00 ஐக் காட்டியது.

வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-

- ➢ பின்வரும் நடவடிக்கைகள் காசேட்டு வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.
  - ❖ வங்கி வசூலித்த பங்குலாபம் ரூபா 2,100.00
  - ❖ வங்கி வசூலித்த வட்டி ரூபா 1,200.00
  - ❖ வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணம் ரூபா 350.00
  - ❖ காசோலைப் புத்தகக் கட்டணம் ரூபா 200.00
  - ❖ நேரடி மாற்றல் ரூபா 1,500.00
- ➢ வசூலிக்கப்படாத காசோலை ரூபா 10,000.00
- ➢ மாற்றப்படாத காசோலை ரூபா 8,000.00

**வேண்டப்படுவது:-**
2011 ஜனவரி மாதத்திற்கான
திருத்திய காசேடு
வங்கி இணக்கக் கூற்று

2. முருகன் என்ற வியாபாரியின் 2011 ஜனவரி மாதத்திற்கான காசேட்டின் படி வங்கி மீதி ரூபா 15,000.00 செலவு மீதி ஒன்றினைக் காட்டியது. ஆனால் வங்கிக் கூற்று மீதி வேறு ஓர் மீதியினைக் காட்டியது.
வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-

- ➢ வசூலிக்கப்படாத காசோலை ரூபா 6,000.00
- ➢ மாற்றப்படாத காசோலை ரூபா 4,000.00
- ➢ வைப்புச் செய்யப்பட்ட ரூபா 2,500.00 பெறுமதியான காசோலை காசேட்டு வங்கிக் கணக்கில் ரூபா 250.00 எனப் பதியப்பட்டது.
- ➢ வரையப்பட்ட ரூபா 200.00 பெறுமதியான காசோலை வங்கியால் ரூபா 2,000.00 எனப் பதியப்பட்டது.
- ➢ பின்வரும் நடவடிக்கைகள் காசேட்டு வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.
  - ❖ வங்கி அறவிட்ட வட்டி ரூபா 3,500.00
  - ❖ வங்கி வசூலித்த பங்குலாபம் ரூபா 1,500.00
  - ❖ நிலையான கட்டளைக் கொடுப்பனவு ரூபா 2,500.00
  - ❖ நேரடி மாற்றல் ரூபா 1,200.00

**வேண்டப்படுவது:-**
2011 ஜனவரி மாதத்திற்கான
திருத்திய காசேடு
வங்கி இணக்கக் கூற்று

3. 2011 ஜனவரி மாதத்திற்கு முருகன் என்பவரின் காசேட்டின் படி வங்கி மீதி ரூபா 20,000.00 காட்டியது. ஆனால் வங்கிக் கூற்று வேறு ஓர் மீதியினைக் காட்டியது.
வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-

- ➢ ஜனவரி 28 இல் வைப்பில் இட்டதும் பெப்ரவரி 05 இல் வசூலிக்கப்பட்டதுமான காசோலை ரூபா 5,000.00
- ➢ ஜனவரி 26 இல் வரைந்து கொடுக்கப்பட்டதும் பெப்ரவரி 03 இல் மாற்றப்பட்டதுமான காசோலை ரூபா 3,500.00
- ➢ பின்வருவன பற்றிய பதிவு காசேட்டில் காணப்படவில்லை.
- ❖ காசோலைப் புத்தகக் கட்டணம் ரூபா 225.00
- ❖ வங்கி வசூலித்த பங்குலாபம் ரூபா 1,300.00
- ❖ காப்புறுதி ரூபா 500.00
- ❖ நேரடி வைப்பு ரூபா 2,100.00
- ➢ வைப்பில் இடப்பட்டு வங்கியில் போதிய பணமில்லாததால் மறுத்தனுப்பப்பட்ட காசோலை ரூபா 800.00

**வேண்டப்படுவது:-**
2011 ஜனவரி மாதத்திற்கான
திருத்திய காசேடு
வங்கி இணக்கக் கூற்று

4. பின்வரும் தகவல்களில் இருந்து 31.01.2011 இல் இருந்தவாறான முருகன் நிறுவனத்தின் சீராக்கிய காசேட்டினையும், வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினையும் தயாரிக்க.

- ➢ 31.01.2011 இல் இருந்தவாறான காசேட்டின் படி வங்கி மீதி ரூபா 28,000.00
- ➢ டிசம்பர் 2010 இல் பெறப்பட்டதும் ஜனவரி 2011 இல் வங்கியில் இடப்பட்டதுமான ரூபா 3,400.00 பெறுமதியான காசோலை வங்கியால் வசூலிக்கப்படவில்லை.
- ➢ வங்கிக் கட்டணம் ரூபா 100.00, வங்கியால் வசூலிக்கப்பட்ட பங்குலாபம் ரூபா 1,500.00 காசேட்டில் இடம்பெறவில்லை.
- ➢ முருகன் நிறுவனத்தின் சார்பில் வஙீகியால் சேகரிக்கப்பட்ட ரூபா 25,000.00 முதலீட்டு வருமானம் காசேட்டில் இடம்பெறவில்லை.
- ➢ மாற்றப்படாத காசோலை ரூபா 7,250.00

5. பின்வரும் தகவல்களில் இருந்து 31.01.2011 இல் இருந்தவாறான சீராக்கிய காசேட்டினையும், வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினையும் தயார் செய்க.

- ➢ 31.01.2011 இல் இருந்தவாறான காசேட்டின் படி வங்கி மீதி ரூபா 23,000.00
- ➢ ஜனவரி மாதம் ரூபா 12,000.00 இற்கு பெறப்பட்ட காசோலை ஒன்று வங்கியில் வைப்பில் இட்ட போதும் அது வசூலிக்கப்படவில்லை.
- ➢ ஜனவரி மாத இறுதிப் பகுதியில் கடன்கொடுத்தோருக்கு வரைந்து கொடுக்கப்பட்ட ரூபா 5,500.00,ரூபா 3,200.00,ரூபா 2,400.00 எனும் தொகைகளுக்கான 03 காசோலைகள் வங்கிக் கூற்றில் இடம்பெறவில்லை.
- ➢ வங்கிக் கூலி ரூபா 240.00, வங்கியால் வசூலிக்கப்பட்ட முதலீட்டு வருமானம் ரூபா 1,350.00 காசேட்டில் இடம்பெறவில்லை.
- ➢ நிறுவனத்தின் சார்பில் வங்கியால் சேகரிக்கப்பட்ட பங்குலாபம் ரூபா 14,300.00 காசேட்டில் இடம்பெறவில்லை.
- ➢ ஜனவரி 25 இல் இடப்பட்டு வங்கிக் கூற்றில் தோன்றுகின்ற ரூபா 1,250.00 பெறுமதியான காசோலை காசேட்டில் இடம்பெறவில்லை.

6. தனி வியாபாரியான முருகன் என்பவர் 31.01.2011 இல் இருந்த காசேட்டு வங்கி நிரல் ரூபா 13,500.00 பாதகமான மீதியைக் காட்டியது. அத் திகதியில் வங்கிக் கூற்று வேறு ஒரு மீதியினைக் காட்டியது.
வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-

- ➢ கடன்பட்டோரிடம் பெற்று வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 4,000.00 பெறுமதியான காசோலை வங்கியால் வசூலிக்கப்படவில்லை.
- ➢ கடன்கொடுத்தோருக்கு வரைந்து கொடுக்கப்பட்ட ரூபா 5,000.00 பெறுமதியான காசோலை வங்கியில் கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.
- ➢ நிலையான கட்டளையின் பெயரில் வங்கி வசூலித்த பங்குலாபம் ரூபா 1,485.00, செலுத்திய காப்புறுதிக் கட்டணம் ரூபா 615.00 என்பன காசேட்டில் இடம்பெறவில்லை.
- ➢ வாடிக்கையாளரான வேலனின் நேரடி வைப்பு ரூபா 2,000.00
- ➢ காசேட்டு வங்கி நிரலின் செலவுப் பக்கம் ரூபா 600.00 இனால் மிகைப்படுத்தப்பட்டிருந்தது.
- ➢ வங்கி அறவிட்ட வங்கிக் கூலி ரூபா 250.00

**வேண்டப்படுவது:-**
2011 ஜனவரி மாதத்திற்கான
திருத்திய காசேடு
வங்கி இணக்கக் கூற்று

7. முருகன் என்ற வியாபாரியின் காசேட்டு வங்கி மீதி 31.01.2011 இல் ரூபா 19,000.00 செலவு மீதியினைக் காட்டியது. ஆனால் அத் திகதியில் வங்கிக் கூற்று வேறு ஓர் மீதியினைக் காட்டியது.
வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:-

- ➢ மாற்றப்படாத காசோலை ரூபா 3,250.00
- ➢ தேறாத காசோலை ரூபா 1,250.00
- ➢ ரூபா 300.00 இற்கு வரையப்பட்ட காசோலை ஒன்று தவறுதலாக காசேட்டு வங்கி நிரலில் வரவு வைக்கப்பட்டுள்ளது.
- ➢ வேலனின் நேரடி வைப்பு ரூபா 15,000.00
- ➢ வங்கி அறவிட்ட காசோலைப் புத்தகக் கட்டணம் ரூபா 345.00

**வேண்டப்படுவது:-**
2011 ஜனவரி மாதத்திற்கான
திருத்திய காசேடு
வங்கி இணக்கக் கூற்று

8. 31.01.2011 இல் முடிவுற்ற மாதத்திற்கான முருகன் என்ற வியாபாரியின் காசேட்டு பொழிப்பு பின்வருமாறு:-

**காசேட்டு வங்கி நிரல்**

| திகதி | விபரம் | வங்கி | திகதி | விபரம் | வங்கி |
|---|---|---|---|---|---|
| 01.01.2011 | மீதி.வ | 5,000.00<br>232,000.00 | 31.01.2011 | கொடுப்பனவுகள்<br>மீதி.செ | 217,000.00<br>20,000.00 |
| | பெறு.கள் | 237,000.00 | | | 237,000.00 |
| 01.02.2011 | மீதி.வ | 20,000.00 | | | |

காசேட்டினதும் பொருத்தமான ஆவணங்களினதும் பரிசீலனையின் போது பின்வரும் தவறுகளும் வேறுபாடுகளும் கண்டறியப்பட்டன.

- ➢ வங்கிக் கூற்றில் காணப்பட்ட வங்கிக் கட்டணம் ரூபா 155.00 காசேட்டில் இடம்பெறவில்லை.
- ➢ ரூபா 1,345.00 இற்கு வரையப்பட்ட ஒரு காசோலை ரூபா 3,145.00 ஆக காசேட்டில் பதியப்பட்டிருந்தது.
- ➢ கடன்பட்டோர் ஒருவரால் வங்கிக்கு செய்யப்பட்ட ரூபா 845.00 ஆன நேரடி வைப்பு காசேட்டில் பதியப்படவில்லை.
- ➢ வைப்புச் செய்யப்பட்ட ரூபா 4,350.00 பெறுமதியான காசோலை "வரையுனரை நாடுக" எனும் குறிப்புடன் வங்கியினால் திருப்பி அனுப்பப்பட்டது. இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டமைக்கான பதிவு காசேட்டில் இடம்பெறவில்லை.
- ➢ நிலையான கட்டளை மீது வங்கியினால் பின்வரும் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்டது.

# வரலாறு

**01)**

i) புராதன காலத்தில் இங்கு குடியேற்றங்களை அமைத்த மக்கள் குடியேற்றங்களை அமைக்கும்போது கவனத்தில் கொண்ட மூன்று விடயங்களை எழுதுக.

ii) புராதன காலத்தில் இலங்கைக்கு வந்த ஆரியக் குழுவினர் நால்வரைப் பெயரிடுக.

iii) புராதன ஆரியக்குடியேற்றங்களில் காணப்பட்ட நிர்வாக முறைகள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக.

iv) பண்டுகாபயனின் ஆட்சியில் ஏற்பட்ட கலாசார மாற்றங்கள் மூன்றினை விளக்குக.

**02)**

i) புராதன காலத்தில் இலங்கைக்கு வெளிநாட்டுத் தொடர்புகள் ஏற்பட்டமைக்கான காரணங்கள் மூன்றினை எழுதுக.

ii) அனுராதபுர காலத்தில் ஏற்பட்ட தென்னிந்திய ஆக்கிரமிப்புகள் நான்கினை எழுதுக.

iii) அனுராதபுர காலத்தில் இலங்கை தென்னிந்தியாவுடன் கொண்டிருந்த இராஜதந்திர தொடர்புகள் மூன்றினை உதாரணங்களுடன் விளக்குக.

iv) தென்னிந்திய இராச்சியங்களின் தொடர்புகள் காரணமாக ஏற்பட்ட கலாசார மாற்றங்கள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக.

**03)**

i) பொலனறுவை இராசதானியின் வீழ்ச்சிக்குப் பின்னர் உருவான இராசதானிகளுள் முதல் மூன்றின் பெயர்களை எழுதுக.

ii) 2 ஆம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் ஏற்பட்ட கலாசார விளைவுகள் நான்கினை எழுதுக.

iii) தென்மேற்கு இராசதானிகள் காலத்திற்குக் காலம் மாற்றம் பெற்றமைக்கான காரணங்கள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

iv) கோட்டை இராசதானி காலத்தில் உயர் இலக்கியப் படைப்புகள் எழுந்தமைக்கான காரணங்கள் மூன்றினை உதாரணங்களுடன் விளக்குக.

**04)**

i) போர்த்துக்கேயர் முதன் முதலில் இலங்கைக்கு வருகை தந்தபோது இங்கு காணப்பட்ட மூன்று இராச்சியங்களின் ஆட்சியாளர்களைக் குறிப்பிடுக.

ii) மதப் போதகர்களாக கோட்டை இராசதானிக்குள் நுழைந்த போர்த்துக் கேயர் கோட்டை இராச்சியத்தின் ஆட்சியாளர்களாக மாறியமைக்கு வழிவகுத்த காரணங்கள் இரண்டினைச் சுருக்கமாக எழுதுக.

iii) இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக.

iv) போர்த்துக்கேயர் ஆட்சியின் தாக்கங்களாக இன்று எமது சமூகத்தில் காணக்கூடிய இலட்சணங்கள் இரண்டினை விளக்குக.

**05)**

i) இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஆட்சி செய்த முதல் பிரித்தானிய ஆளுநர்கள் மூவரை ஒழுங்கு முறையாகப் பெயரிடுக.

ii) A. கி.பி 1815 மலையக ஒப்பந்தம் என்றால் என்ன?
B. அவ்வொப்பந்தத்தின் முக்கிய விடயங்கள் மூன்றினை எழுதுக.

iii) கி.பி 1818 இல் மலையகப் பிரதேசத்தில் ஏற்பட்ட கிளர்ச்சிக்கான காரணங்கள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

iv) அக்கிளர்ச்சி தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் மூன்றினை விளக்குக.

**06)**

i) மௌரியர் காலத்தில் இந்தியாவை ஆட்சிசெய்த மூன்று ஆட்சியாளர்களைப் பெயரிடுக.

ii) மௌரிய ஆட்சியாளர்கள் பௌத்தமத வளர்ச்சிக்காக ஆற்றிய சேவைகள் நான்கினை எழுதுக.

iii) மௌரிய கால கலைகள் கட்டடங்கள் என்பவற்றில் காணக்கூடிய விசேட இலட்சணங்கள் இரண்டினை உதாரணங்களுடன் விளக்குக.

iv) மௌரியப் பேரரசு வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் இரண்டினை விளக்குக.

**07)**

i) மத்தியகால ஐரோப்பாவில் சமய மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டவர்கள் மூவரைப் பெயரிடுக.

ii) ஐரோப்பாவின் சமய மறுமலர்ச்சிக்கு வழிவகுத்த காரணங்கள் நான்கினை எழுதுக.

iii) சமய மறுமலர்ச்சியினால் ஏற்பட்ட விளைவுகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

iv) சமய மறுமலர்ச்சியின் பின்னர் ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றினை விளக்குக.

**08)**

i) பிரான்சியப் புரட்சிக்கு வழிவகுக்கும் வகையிலான எண்ணங்களை உருவாக்கியவர்கள் மூவரைப் பெயரிடுக.

ii) பிரான்சியப் புரட்சிக்கு முன்னர் அச்சமூகத்தில் காணக்கூடியதாயிருந்த நான்கு இலட்சணங்களை எழுதுக.

iii) பிரான்சியப் புரட்சிக்கு காரணமாய் அமைந்த அடிப்படை அம்சங்கள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.

iv) மேற்கூறிய புரட்சிக்குப் பின்னர் கிடைத்த அடிப்படை உரிமைகள் பற்றிய மூன்று ஒப்பந்தங்களை விளக்குக.

**09)**

i) முதலாம் உலக யுத்தத்தில் மத்திமமான பலம் பெற்று விளங்கிய நாடுகள் மூன்றினைப் பெயரிடுக.

ii) முதலாம் உலக யுத்தத்தின்போது ABCD எனத் தரப்பட்டுள்ள நாடுகளின் ஆட்சியாளர்களின் பெயர்களைத் தருக.
A. ஐக்கிய அமெரிக்கக் குடியரசு
B. பெரிய பிரித்தானியா
C. ஜேர்மனி
D. இத்தாலி

iii) முதலாம் உலக யுத்தத்திற்கு வழிவகுத்த காரணங்கள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.

iv) முதலாம் உலக யுத்தத்தின் விளைவுகள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக.

## தெரிந்து கொள்ளுங்கள்

- இலங்கையின் நீளம் - 432 km
- இலங்கையின் அகலம் - 224 km
- இலங்கையின் மொத்த நிலப்பரப்பு - 62705 km
- இலங்கையின் மொத்த காட்டுப்பரப்பு - 1951472 ஹெக்டேயர்
- தெங்கு உற்பத்திகை அதிகரிக்க 2011 இல் மேற்கொள்ளப்பட்ட திட்டம் - கப்புறுக புறவற
- 2012 இல் பொருளாதார வளர்ச்சி வீதம் 7.2 % மாக இருக்குமென மத்திய வங்கி எதிர்வு கூறுகின்றது.
- இலங்கையின் தலைக்குரிய மின்வலுப் பாவனை - 91% - 480.3
- இலங்கையின் அறிவு விகிதம் (2010) எவ்வளவுவு? - 91.9%
- இலங்கையில் ஒருவர் நாளாந்தம் உட்கொள்ளும் கலோரி அளவு எவ்வளவு? - 2094
- இலங்கையின் 2011 ஆண்டு சனத்தொகை - 20, 869,000
- இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் திறக்கப்பட்ட வங்கி தொழில் நிலையங்களின் எண்ணிக்கை - 34 - 38

# சங்கானை மீன் சந்தை விவகாரம் ஆளும் கட்சிக்குள் கயிறுழுப்பு

## கைநழுவிப்போகுமா "புறநெகும" நிதி?

(வலி.மேற்கு)

சங்கானையில் "புறநெகும" திட்டத்தின் கீழ் நவீன மீன் சந்தை அமைப்பதற்கு பிராந்திய உள்ளூராட்சி உதவியாணையாளரினால் விதித்த காலக்கேடு முடிவடைந்ததுடன் திட்டம் நடைமுறைப்பத்தப்படுமா என்ற கேள்விக்குறி நிலைக்கு இந்தச் சந்தை விடயம் உருமாறியுள்ளது.

யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சொ.ஜக்சீல் கடந்த 10ஆம் திகதிக்கு முதல் முக்கிய ஆவணங்கள் 5 உட்பட்ட 7 ஆவணங்களை சமர்ப்பிக்குமாறும் இவ் ஆவணங்கள் கிடைப்பதை உறுதி செய்யுமாறும் தலைவர் செயலாளரை கோரியுள்ளார்.

வலி.மேற்கு பிரதேச சபையினன் புறநெகும திட்டத்தின் கீழ் மக்களால் முன்னுரிமை தெரிவின் கீழ் தெரியப்பட்ட திட்டம் சங்கானை மீன் சந்தை அபிவிருத்தி என்பதாகும். ஆனால் பழைய மீன்சந்தையிலேயே புதிய உட்கட்டுமானமும் அமைய வேண்டும் என ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவரும், புதிதாக நன்கொடையாக வழங்கப்பட்ட காணியில் (7 பரப்பு) புதிய மீன் சந்தை 32 மில்லியன் ரூபா செலவில் அமைய வேண்டும் என பிரதேசசபையின் தலைவர், செயலாளர் தலைமையிலான ஆளும் கட்சியை சேர்ந்த சிலரும், சுழிபுரம் சத்திய காட்டுச்சந்தையில் புதிய மீன் சந்தை அமைய வேண்டும் என உபதவிசாளர் தலைமையிலான நான்குபேரும் மறைமுகமாக உழைத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தவிசாளர் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மாகாண அமைச்சர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி ஆணையாளரின் உதவிகளையும் கொழும்பு பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி வருகின்றார்.

இதேவேளை கமநல சேவைகள் திணைக்களத்தின் அனுமதி கிடைக்கும் பட்சத்தில் இத்திட்டம் நிறைவுறும் என பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இத்திட்டம் இலவசமான காணி வழங்கப்பட்ட நிலையில் வேறு இடத்திற்கு கைமாறும் பட்சத்தில் பாரிய நெருக்கடிகளை கொடுக்கவும் சங்கானை பட்டின அபிவிருத்தி சபை தயாராகி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கிறது.

இதேவேளை சங்கானை மீன்சந்தை உட்கட்டுமான அபிவிருத்தியை முன்னெடுக்க திட்டமிட்டுள்ள புதிய காணியை உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிபுணர் கு.பிரேமச்சந்திரன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் பார்வையிட்டுள்ளனர்.

மேலும் வலி.மேற்கு பிரதேச சபை ஆளும் கட்சி உபதவிசாளர் இத்திட்டத்தை எப்படியாவது மறுதலித்து இத்திட்டத்தை சத்திய காட்டுச் சந்தைக்கு கொண்டு சென்றிட வேண்டும் என்ற உண்ணதத்தில் பலரிடமும் தொடர்பு கொண்டு வருவதாக உள்ளூராட்சித்திணைக்கள செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் மக்களின் முன்னுரிமை தெரிவில் இத்திட்டம் உள்வாங்கப்பட்டதால் எவ்வாறு இதனை மாற்றலாம் என உள்ளூராட்சி திணைக்களத்திடம் ஆலோசனை நடாத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி திட்டம் புதிய காணியில் அமைய சங்கானை பட்டின அபிவிருத்தி சபை தமது முழுப் பலத்தினையும் பிரயோகித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை புதிய காணியில் இத்திட்டம் நிறைவேறவேண்டும் என பிரதேச செயலர், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் கிராம அலுவலர்கள் சபைத் தவிசாளருக்காக உழைத்து வருவதாகவும் உபதவிசாளர் பல நிலைப்பாடுகளை முன் வைத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## திருக்குறள் மனனப்போட்டி

(யாழ்.நிருபர்)

புண்ணிய நாச்சியம்மையார் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை பாடசாலை மாணவர்களுக்கிடையே பண்ணிசை மற்றும் திருக்குறள் மனனப்போட்டிகளை நடத்தவுள்ளது.

கீழ்ப்பிரிவு (தரம் 3,4,5), மத்திய பிரிவு (தரம் 6,7,8), மேற்பிரிவு (தரம் 9,10,11) என மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ள இப்போட்டிகளில் ஒரு பாடசாலையில் இருந்து ஒரு பிரிவுக்கு ஒருவர்மட்டுமே தோற்றலாம். ஒருவர் இரண்டு போட்டிகளிலும் பங்குபற்ற முடியாது.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர் பெயர் பிரிவு விபரங்களை இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டுமென செயலாளர் இரா.செல்வவடிவேல் சகல பாடசாலை அதிபர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (10)

# எல்லைதாண்டும் மீனவர் விவகாரம் நாளை மறுதினம் டில்லியில் ஆராய்வு

(கொழும்பு)

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பான முக்கிய பேச்சுவார்த்தை நாளை மறுதினம் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நடைபெறவுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைக்காக தமது தலைமையிலான குழு இந்தியா செல்லவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் ராஜித்த சேனாரத்ன தெரிவித்துள்ளார்.


இந்தியாவின் மத்திய கடற்றொழில் மற்றும் விவசாய அமைச்சரின் அழைப்பை ஏற்று இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கடற்றொழில் அமைச்சு, சட்ட மாஅதிபர் திணைக்களம், கடற்படை ஆகியவற்றின் பிரதிநிதிகளும் அமைச்சர் ராஜித்த சேனாரத்னவுடன் இந்தியா செல்லவுள்ளனர்.

யாழ், மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களை பிரதிநிதித்துவப்படுத்தி கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளும் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்கவுள்ளனர்.

இதேவேளை, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் மற்றும் தமிழக அதிகாரிகளையும் சந்தித்து மீனவர் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாக அமைச்சர் ராஜித்த சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

## பரமர் சங்கமம்



'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பதை ஐதீகமாக தொன்று தொட்டு தமிழ் மக்கள் கருதி அதனை முதன்மைப்படுத்தியும் வருகின்றனர். தைத் திங்கள் முதல் நாள் நாளை [14.01.2014] செவ்வாய்க்கிழமை, தைப் பொங்கல் திருநாளாகக் கொண்டாடவும் ஏற்பாடுகள் மேற்கொண்டும் உள்ளனர்.

தைப்பொங்கல் திருநாளைத்தமிழர் திருநாளென குறிப்பிடப்படுவதுமுண்டு. தமிழர்களில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் எனப் பிரிவுகள் இருந்தாலும் பேசுகின்ற மொழி, பேணப்படும் சமூகக்கலாசாரம், பண்பாடு என்பவற்றில் மற்றெல்லா மொழிபேசும் மக்களில் இருந்தும் ஒரு ஒருமைப்பாட்டைக் காணலாம்.

எந்தத் தொழிலை மேற்கொள்பவர்களாக காணப்பட்டாலும், நாளாந்தம் ஒவ்வொரு வீடுகளிலும் உலை ஏத்தி அரிசி இட்டுப் பொங்கிச் சாப்பிடுவதைத்தான் சகலரும் செய்து வருகின்றனர். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்வாரே என்று இதனையே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்பாகவே திருவள்ளுவர் சொல்லி வைத்தார்.

உணவுக்கு அத்தியாவசிமான அரிசியைப்பெற களனிகளில் ஏர்கொண்டு உழுது பண்படுத்தும் நிலங்களில் நெல்தூவி பயிரை விளைவிக்க மழையையும், சூரியனையும் நம்பியே விவசாயி ஈடுபடுகிறான். அதற்கு முதன்மையான மழை இவ்வருடம் [2013] பொய்த்து விட்டதால் பெரும்பாலான வடபகுதி விவசாயிகள் துக்கத்தில் மூழ்கி உள்ளனர்.

வருடா வருடம் பயிரை விளைவிக்கும் விவசாயி சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவே வீட்டு முற்றததில் மூன்று கற்களை வைத்து பொங்கி கிழக்கு நோக்கிச்சரிக்க வேணுமென்று எதிர்பார்க்கிறான். அதுபோல் பொங்கலுக்காக முற்றத்தில் வாழை, தோறணம் கட்டிய அலங்கார பந்தலுள் பொங்கலை தலைவாழை இலையில் கிழக்குப் பார்க்கப்படைத்து மகிழ்கிறான்.

ஒரு காலத்தில் வடபகுதி எங்கும் காணப்பட்ட களணி நிலங்களான வயல்களை காணமுடியாமல் இக்காலத்தில் அக்காணிகளில் மக்கள் குடியிருப்புக்கள் காணப்படுகின்றன. இருந்த விவசாய நிலங்களில் மூன்றி இரண்டு மடங்கு குடியிருப்புகளாகப் போக மீதி உள்ள ஒரு மடங்கில் ஒருசில வயல்களைத் தவிர ஏனையவை கட்டாந்தரைகளாக காட்சி அளிக்கின்றன.

ஆயினும் இன்றைக்கும் தமிழர் இல்லங்களில் 'பொங்கலோ பொங்கல்' என்னும் பொங்கலைப் பொங்கி மகிழ்வதைக் காண்கிறோம். அதாவது தொழுதுண்டு பின் செல்கிறோம் இறக்குமதி செய்யப்படும் அரிசியை அதிகப்படி விலை கொடுத்து வாங்கி பொங்கி மகிழ்கிறோம். ஒவ்வொருநாளும் இன்னமும் ஒருவேளையாகிலும் வீடுகளில் பொங்கிச் சாப்பிட்டால் எங்களுக்குப் பத்தியப்படாதெல்லோ என்ன நான் சொல்லுறே...

## பௌத்த விகாரைகளுடன் இணைந்து பணி செய்ய ஐ.தே.க. முடிவு

(கொழும்பு)

அனைத்து தொகுதி அமைப்பாளர்களும் தங்களின் பிரதேசங்களிலுள்ள பௌத்த விகாரைகளுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று, எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

சிறிகொத்த கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற தேசிய பிக்குகள் முன்னணி மற்றும் ஐக்கிய பிக்குகள் முன்னணி ஆகியவற்றின் மாநாட்டில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொகுதி அமைப்பாளர்களின் ஒத்துழைப்பு போதுமானதாக அமையவில்லை என்று இதன் போது தேசிய பிக்குகள் முன்னணி குற்றஞ் சுமத்தி இருந்தது.

எனினும் விகாரைகளுடன் இணைந்து செயற்படுவதன் ஊடாக பல்வேறு சிக்கல்களை தவிர்த்துக் கொள்ள முடியும் என்று ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.







## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................................

முகவரி :- ..............................................

பிறந்த ஆண்டு :- ..............................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# அடுத்த இந்திய பிரதமர் யார்?
# ஏட்டிக்குப் போட்டியான பிரசாரம்
## பெண்களின் வாக்குகளை சூறையாட திட்டம்



(புதுடெல்லி)

பாராளுமன்றத்துக்கு மே மாதத்துக்குள் தேர்தல் நடத்தப்பட இருப்பதால் அரசியல் கட்சிகள் தேர்தலை சந்திக்க தீவிரமாகி வருகின்றன. பாரதீய ஜனதாக் கட்சி பிரதமர் வேட்பாளர் நரேந்திரமோடி நாடு முழுவதும் பிரசார கூட்டங்களில் பேசி வருகிறார். இதே போல் காங்கிரசும் பிரதமர் வேட்பாளராக ராகுல் காந்தியை அறிவிக்கத திட்டமிட்டுள்ளது.

சமீபத்தில் நடந்த டில்லி சட்டசபை தேர்தலில் புதிதாக உதயமான ஆம் ஆத்மி கட்சி இமாலய வளர்ச்சி அடைந்து ஆட்சியைப் பிடித்தது. அந்தக் கட்சிக்கு இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் மத்தியில் ஆதரவு பெருகி வருகிறது. இது காங்கிரசுக்கும், பாரதீய ஜனதாவுக்கும் பெரிய சவாலாக உருவெடுத்துள்ளது. ஆம் ஆத்மியில் சேர நடுநிலையாளர்கள் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

மேலும் ஆம் ஆத்மி பக்கம் இளைஞர்கள், இளம் பெண்கள் சேராமல் இருக்க அவர்களை கவரும் வகையில் பாரதீய ஜனதா புதிய வியூகம் வகுத்து வருகிறது.

அலுவலகங்களில் பணி புரிவோருக்கு வருமானவரி உள்ளிட்ட பல்வேறு வரி விதிப்புகளால் சுமை ஏற்படுகிறது. இவற்றை இரத்துச் செய்து விட்டு ஒரே சீரான முறையில் வரி விதிப்புகள் இருக்கும் வகையில் மாற்றம் கொண்டு வரப்படும் என்று நரேந்திர மோடி அறிவித்துள்ளார். இந்தத்திட்டத்தின் மூலம் அலுவலகங்களில் பணி புரியும் நடுத்தர வர்க்கத்தினரை கவரலாம் என்று பாரதீய ஜனதா திட்டமிட்டுள்ளது.

இதே போல் பெண்களை கவரும் வகையில் அவர்களுக்கான சிறப்பு திட்டங்களை செயல்படுத்தவும் பாரதீய ஜனதா ஆலோசித்து வருகிறது. சமீபத்தில் சர்வதேச அமைப்பு ஒன்று இந்தியாவில் 12 சதவீத பெண்களே 'சானிட்டரி நாப்கின்' பயன்படுத்து கிறார்கள். மற்றவர்களிடம் விழிப்புணர்வு இல்லை என்று தெரிவித்தது. பாரதீய ஜனதா இதை கவனத்தில் எடுத்துக் கொண்டு வருகிற 2025 ஆம் ஆண்டுக்குள் நாடு முழுவதும் 50 சதவீதம் பெண்கள் 'சானிட்டரி நாப்கின்' பயன்படுத்தும் திட்டத்தை கொண்டுவர யோசித்து வருகிறது.

இதேபோல் பெண்களுக்கான வேலை வாய்ப்பு திட்டங்களை ஊக்கப்படுத்தவும் முடிவு செய்துள்ளது. பெண்கள் பயன்படுத்த ஒவ்வொரு 3 கி.மீ. தூரத்துக்கும் ஒரு கழிவறை, 10ஆம் வகுப்பிலேயே வாகனம் ஓட்டுவது பற்றிய பாடம் கொண்டுவருவது, பெண்களுக்கு மருத்துவ காப்பீட்டு திட்டம் போன்றவையும் கொண்டுவரப் படுகிறது.

இவைகள் பாரதீய ஜனதாவின் தேர்தல் அறிக்கையில் இடம்பெறும். இது பெண்களை கவரும் வகையில் இருக்கும் என்று பாரதீய ஜனதாத் தலைவர் ஒருவர் கூறினார். எனவே காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் இளைஞர்களை வரும் வகையில் புதுமையான அதிரடித திட்டங்கள் இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

# அமெரிக்காவை உலுக்குகிறது விடாது தொடரும் பனிப்புயல்



அமெரிக்காவில் டிசம்பர் மாதம் தொடங்கியது முதலே கடும் குளிர் நிலவி வந்தது. இந்நிலையில் புத்தாண்டு முடிந்து சில நாட்களிலேயே குளிர் மேலும் அதிகரித்து பனிப்புயல் வீசத் தொடங்கியது. வெப்பநிலை படிப்படியாக குறைந்து உறை பனியை தொட்டது. பூஜ்யத்திற்கும் கீழே சரிந்த வெப்பநிலை அடுத்த ஓரிரு நாட்களிலேயே துருவ பிரதேசங்களான ஆர்டிக் பிரதேசங்களில் காணப்படுவதைப்போல மைனஸ் 45 டிகிரி வரை இறங்கியது. இதனால் அமெரிக்காவின் வடகிழக்கு மாகாணங்கள், கனடாவின் ஒரு பகுதி என அனைத்தும் கடுமையாக உறை பனிக்கு பாதிக்க தொடங்கின. ஆயிரத்துக்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

மக்கள் அனைவரும் வீடுகளிலேயே இருக்கும்படி எச்சரிக்கை விடப்பட்டது. அத்தியாவசிய தேவைகளுக்காக மட்டும் வாகனங்களில் செல்லவும், அவ்வாறு செல்லும் வாகன ஓட்டிகள் தகுந்த பாதுகாப்புடன் பயணங்களை மேற்கொள்ளும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.நகரங்களின் முக்கிய சாலைகள், விமான நிலையங்களின் ஓடு தளங்கள் ஆகியவற்றில் தேங்கியிருக்கும் உறைபனி இரவு பகலாக அகற்றும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த உறைபனி காரணமாக வாகன விபத்துகளிலும், குளிரில் சிக்கியும் அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய பகுதிகளில் இதுவ[illegible] 21 பேர் பலியாகியுள்ளனர்

# ஆம் ஆத்மி அரசியல் கட்சியா? கேள்வி கேட்கிறார் மத்திய அமைச்சர்

(புதுடில்லி)

ஆம் ஆத்மி ஒரு அரசியல் கட்சியே அல்ல என்றும் அது ஒரு படைபாதை என மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார். இவரே கடந்த 2 நாட்களுக்கு முன்னர், ஆம் ஆத்மி கட்சி வளர்ந்து வரும் மிகப்பெரிய சக்தி என்றும் மற்ற எல்லா கட்சிகளும் அதனை சாதாரணமாக நினைக்க வேண்டாம் என்று கூறியிருந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் டில்லியில் பத்திரிகையாளர்களிடம் பேசிய போது அன்று பேசியவற்றில் இருந்து மாறாக மாற்றி பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் மேலும் கூறுகையில், ஆம் ஆத்மி கட்சி என்பது போராட்டம் மட்டுமே.அதனால் அது அரசியல் கட்சி கிடையாது. ஆனால் காங்கிரஸ் கட்சிக்கு கொள்கை,நிர்வாகம் மற்றும் அமைப்பு ரீதியில் கட்சியாக இருந்து வருகிறது. காங்கிரஸ் கட்சி 128 ஆண்டுகளாக இருந்து வரும் கட்சியாகும். அவர்களுக்கு போராட்டம் மட்டுமே தாரக மந்திரமாக கொண்டது. ஆர்ப்பாட்டம் அராஜகம் அவற்றை மட்டுமே கெண்டு



மேடையில் பேச முடியாது. டில்லியில் கொடியை நாட்டிய ஆம் ஆத்மி, லோக்சபா தேர்தலில் அதன் தாக்கம் எவ்வாறு இருக்கும் எனப் பத்திரிகையாளர்கள் கேட்டதற்கு இது ஆரம்பம் தானே. தேசிய அளவில் அதன் தாக்கம் எவ்வாறு இருக்கும் என்பதை இப்போதை கூற இயலாது என்றார் ஜெய்ராம் ரமேஷ்

# புதிய கிரகம் கண்டுபிடிப்பு

(வோஷிங்டன்)

சூரிய மண்டலத்தில் பூமியைப் போன்ற, புதிய கிரகத்தை அமெரிக்க வானியல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஹார்வர்டு - ஸ்மித்சோனியன் வான் இயற்பியல் மையத்தைச் சேர்ந்த டேவிட் கிபிங் கூறியதாவது: மற்றொரு சூரிய மண்டலத்தில், 200 ஒளி ஆண்டு, தூரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள, இந்த புதிய கிரகம், பூமியை விட, 60 மடங்கு பெரிதானது இதில் அடர்ந்த வாயுக்கள் அதிகளவில் காணப்படுகின்றன. அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான, "நாசா"வின், கெப்ளர் விண்கலம் அனுப்பிய தகவல்களின் அடிப்படையில், இந்தக் கிரகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. "கே.ஓ.ஐ.-314" எனப் பெயரிடப்பட்ட இந்தக் கிரகத்தின் வெப்பநிலை, 104 டிகிரி செல்சியசாக பதிவாகியுள்ளது.

உலகச் செய்திகள்

# தீயில் கருகியது சீனாவில் பண்டைய நகரம்



சீனாவின் யுன்னானிலுள்ள மிகப் பழமையான நகரங்களில் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்தது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவில் தென்மேற்கு மாகாணமான யுன்னானிலுள்ள பழமையான நகரம் டியூக்ஜாங், இந்நகரம் நேற்று முன்தினம் தீப்பற்றி எரிந்தது. இதுகுறித்து அந்நகர அரசின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், மர வேலைப்பாடுகளுக்குப் பெயர் பெற்ற டியூக்ஜாங் தீப்பற்றி எரிந்தது.

கடந்த வெள்ளி நள்ளிரவு 1.30 மணியளவில் பற்றிய தீ, நேற்று முன்தினம் காலை 10.30 மணி வரையில் நீடித்தது, 240இற்கும் அதிகமான வீடுகள் தீயில் எரிந்து நாசமாகின.

வீடுகள், கடைகளோடு கலாசாரத்தை பிரதிபலிக்கக் கூடிய சின்னங்களும் தீயில் எரிந்து நாசமாகின. அங்கிருந்த பெருவாரியான வீடுகள் மரத்தால் கட்டப்பட்டிருந்ததாலும், பலமான காற்று வீசியதாலும் தீயை அணைக்கும் முயற்சி மிகவும் கடினமானதாக இருந்தது. சுமார் 1000இற்கும் அதிகமான மக்கள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டதாக தெரிவித்துள்ளார். மேலும் தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

# தேவ்யானி மேன்முறையீடு அமெரிக்க நீதிமன்றில்
## முற்றுகிறது முறுகல்

(வோஷிங்டன்)

தாயகம் திரும்பியுள்ள, இந்திய தூதரக அதிகாரி தேவ்யானி, தன் மீதான, "விசா" மோசடி வழக்கை தள்ளுபடி செய்யக்கோரி, அமெரிக்க நீதி மன்றத்தில் மனு செய்துள்ளார்.

அமெரிக்காவின், நியூயோர்க்கில் உள்ள இந்திய தூதரகத்தில், துணைத் தூதராக பணியாற்றியவர் தேவ்யானி, 39. இவர் வீட்டு பணிப்பெண், சங்கீதாவுக்கு, ஒப்பந்த அடிப்படையில், உரிய சம்பளம் தராமல் இருந்ததாகவும் அவரைப் பணிய மர்த்துவதற்காக, "வீசா" முறைகேட்டில் ஈடுபட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது. இந்தக்குற்றசசாட்டு தொடர்பாக, கடந்த மாதம், 12ஆம் திகதி, தேவ்யானி, அமெரிக்க பொலிசாரால், கைவிலங்கிடப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டார் சிறையில அடைக்கப்படுவதற்கு முன்,



ஆடைகளைக் களைந்து சோதனை இடப்பட்டார் 1.5 கோடி ரூபாய் ரொக்க ஜாமினில், அவர் விடுவிக்கப்பட்டார்.

தேவ்யானி மீது, நீதிமன்ற நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள அமெரிக்கா, அவருக்குரிய, தூதர் அந்தஸ்து பாதுகாப்பை விலக்கிக் கொள்ளுமாறு, இந்தியாவிடம் கேட்டது. இதற்கு இந்தியா மறுத்ததைத்தொடர்ந்து, "தேவ்யானி, அமெரிக்காவில் இருந்து வெளியேற வேண்டும்" என, அமெரிக்க நிர்வாகம் உத்தரவிட்டது. இதையடுத்து, தேவ்யானி, தாயகம் திரும்பினார். தேவ்யானி மீது குற்றச்சாட்டை பதிவு செய்வதற்கான கால அவகாசத்தை நீட்டிக்க, நியூயோர்க் நீதிமன்றம் மறுத்து விட்டது. இந்நிலையில், "அவர் மீதான வீசா மோசடி வழக்கை, தள்ளுபடி செய்ய வேண்டும்" என, தேவ்யானி சார்பில், அவரது வழக்கறிஞர், டனியல் அர்ஷாக், அமெரிக்க பெடரல் நீதிமனறத்தில் மனு செய்துள்ளார்.

# முல்லைத்தீவு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் தந்தை அல்லது தாய் இல்லாத மாணவர்கள் பட்டியலில் தேர்ந்தெடுத்த 1300 மாணவர்களுக்கு 500 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் இன்று தொடக்கம் வழங்கப்படவுள்ளது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் காலை 11.00 மணிக்கு அதிபர் எஸ்.சுப்பிரமணியேஸ்வரன் தலைமையில் இவ்வைபவம் நடைபெறும். முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளரும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலரும் பிரதம விருந்தினர்களாக கலந்து இவ்வைபவத்தை சிறப்பிக்கின்றனர்.

'ஸ்ரீலங்கா ஆதரிக்கும் கரங்கள்' நிறுவன பணிப்பாளர்கள் எஸ்.இராஜேஸ்வரன் (முன்னாள் உதவி வலயக் கல்விப் பணிப்பாளர்), கே.இராஜேந்திரம் (முன்னாள் அதிபர் கிளி.பாரதி வித்தியாலயம்), ஸ்ரீலங்கா ஆதரிக்கும் கரங்கள் நிறுவன யாழ்., கிளி., முல்லை பிராந்திய நிர்வாகி கமலசேகரம் ஆகியோர் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு வைபவத்தை ஆரம்பித்து சிறப்புரை ஆற்றுவார்கள்.

புதுக்குடியிருப்பு கோட்டக் கல்வி அதிகாரி, மருதம்பற்று கோட்டக் கல்வி அதிகாரி, அதிபர்கள் சிறப்புரைகளும் பயனாளி மாணவர்களின் சிறப்பு பேச்சுக்கள் என்பன இடம்பெறும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தொடர்ந்து 16 ஆம் திகதி வியாழக்கிழமையும், 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், 18 ஆம் திகதி சனிக்கிழமையும் ஆதரிக்கும் கரங்கள் பணிப்பாளர்களும், நிர்வாகிகளும் அந்தந்த பாடசாலைகளில் நேரடியாக அப்பாடசாலைகளின் பயனாளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை சிறு வைபவத்துடன் அன்பளிப்பு செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

# கரைதுறைப்பற்று விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள்

(முல்லைத்தீவு)

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் கீழ் இயங்குகின்ற சமுர்த்தி வங்கிச் சங்கங்களினால் பத்து விவசாயக் குடும்ப பங்களுக்கு நீர் இறைக்கும் மோட்டார் இயந்திரங்கள் கடந்த வெள்ளிக்கிழமை கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

முள்ளியவளை, சிலாவத்தை, செம்மலை ஆகிய சமுர்த்தி வங்கிச்சங்கங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே இவ்வாறு நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் சிவநேசராஜா, நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.பராசக்தி, கரைதுறைப்பற்று மகா சங்க முகாமையாளர் கே. தேவகுமார் உள்ளிட்ட முள்ளியவளை, சிலாவத்தை, செம்மலை ஆகிய சமுர்த்தி வங்கிச் சங்கங்களின் முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்க புதிய நிர்வாகம் தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்க நிர்வாக சபைத் தெரிவு நேற்று இடம்பெற்றது.

இரண்டு வருடங்களாக நிர்வாகத் தெரிவில் இழுபறிகள், முரண்பாடுகள் காணப்பட்டு வந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் தலையீட்டையடுத்து புதிய நிர்வாகத் தெரிவு நேற்று சிறப்புற இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவராக தம்பிராசா நவநீதன் (ரமேஸ்), செயலாளராக சண்முகரத்தினம் இந்திரகுமார், பொருளாளராக நடராசா சுதாகரன் ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்கள் 7 பேரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி நகர போக்குவரத்து பொலிஸ் அதிகாரி, கிளிநொச்சி மக்கள் தொடர்பு பொலிஸ் அதிகாரி, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் இணைப்புச் செயலாளர் அன்ரன் அன்பழகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிர்வாகத் தெரிவு குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாருக்கு முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினர் பாராட்டுக்களைத் தெரிவித்தனர். (29)

## சென்னையில்...

அமைச்சர் சேனாரத்ன உறுதிப்படுத்தினார்.

தலைநகர் டில்லியில் எதிர்வரும் 15 ஆம் திகதி மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகச் செல்லவுள்ள இலங்கை அமைச்சர் ராஜித, அங்கு தமிழக மீனவர் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

டில்லியில் நடக்கவுள்ள பேச்சுவார்த்தையில் நாங்கள் பேசப் போகின்ற விடயங்கள் பற்றிய ஆவணங்களை இந்தியப் பிரதமருக்கும் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதிக்கும் அனுப்பி வைத்திருக்கிறோம்.

இந்த மீனவர்களின் பிரச்சினைக்கான தீர்வுக்கு முக்கிய தடையாக இருப்பவர்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர்.

சென்னையில் 20 ஆம் திகதி இருதரப்பு மீனவர் சந்திப்பு குறித்து இன்னும் அதிகாரபூர்வமாக இலங்கைக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் பத்திரிகைகள் மூலமாகவே அந்தச் செய்தியை தெரிந்துகொண்டிருப்பதாகவும் அமைச்சர் சேனாரத்ன தெரிவித்தார்.

அந்தச் சந்திப்பில் கலந்துகொள்வதற்கான எங்கள் தரப்பு பிரதிநிதிகள் இன்னும் தயார்ப்படுத்தப்படவில்லை. எதிர்வரும் 15ஆம் திகதி டில்லி உயர்மட்ட சந்திப்பின் பின்னரே அதுபற்றி தீர்மானிக்க முடியும்

எங்களுக்கு அறிவித்துவிட்டுத் தான் இலங்கைப் பிரதிநிதிகள் சென்னைப் பேச்சுவார்த்தையில் பங்குகொள்ள முடியும் என்று எமது வெளியுறவு அமைச்சும் எங்களுக்கு அறிவித்துள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

## புலிகள்...

மாநகரசபை காணியில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டன.

நேற்று முன்தினம் காலை 10 மணி தொடக்கம் தடயப்பொருட்களை மக்கள் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டு நேற்று மாலை 3.30 மணியுடன் நிறைவடைந்தது.

இக்காட்சிப்படுத்தலின் மூலம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பாலசுந்தரம் மனோரஞ்சிதம் (வயது - 42), பாலசுந்தரம் செந்தில்வேல் (வயது - 24) மகன், இளயவி ரகுநாதன் (வயது - 24) சகோதரன், ஐயாகுட்டி கிருபாகரன் (வயது - 36), ஐயாகுட்டி பகீரதன் (வயது - 23) சகோதரர்கள், வ.சரஸ்வதி ஆகிய 6 பேர் அவர்களின் உடமைகளைக் கொண்டு உறவினர்கள் அடையாளப்படுத்தியுள்ளனர்.

இதுவரை விமானத்தில் பயணித்தவர்களில் 21 உடமைகளைக் கொண்டு 11 பேரை அவர்களது உறவினர்கள் அடையாளம் கண்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

## தெரிவுக்குழுவின்...

பின்னரான காலப்பகுதியில் இப்பகுதிகளுக்கான அபிவிருத்திக்கு அரசு பாரிய நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டுள்ளது.

அந்த வகையில் வீதிகள், வைத்தியசாலைகள், மின்சார வசதிகள், வீடுகள் என்பன அபிவிருத்தி கண்டுள்ளன. எனது அமைச்சிலிருந்து 193 கோவில்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புத்திஜீவிகளான மக்கள் பிரச்சினைக்கு தீர்வுகாண சண்டையை நாடமாட்டார்கள். தமது பிரச்சினைகள் குறித்து கருத்துக்களை வெளியிட்டு கலந்துரையாடி அதற்கான தீர்வைத்தான் காண்பார்கள். அந்த வகையில்தான் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும் உருவாக்கப்பட்டு கட்சித்தலைவர்கள் உள்ளடங்கலாக கலந்து கருத்துக்களையும் பிரச்சினைகளையும் கலந்துரையாடுவதன் மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்றார்.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, வடமாகாண பிரதம செய லாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், நல்லூர் பிரதேச செயலர், அரச அதிகாரிகள், நல்லை ஆதீன குருமுதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், தபால்மா அதிபர் மற்றும் திணைக்கள ஊழியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (இ)

## யுத்தம்...

குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாமும் இறந்தோம், எல்லோரும் இறந்தார்கள். நாங்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் கொன்றொழித்துக் கொண்டோம்.

முப்பது ஆண்டுகளாக இந்தப் போர் நடைபெற்றது. அந்தக் காலத்தில் ஜெனிவாவில் ஒரு யோசனைத் திட்டம் கூட முன்வைக்கப்படவில்லை.

உயிரிழப்புக்கள் நின்றவுடன் தான் இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன. இதுவரையில் மூன்று தீர்மானங்கள் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நாளும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் அதைப் பார்க்க வேண்டும் இதைப் பார்க்க வேண்டுமென இலங்கைக்கு விஜயம் செய்கின்றனர்.

இரண்டு தரப்பினரும் மீண்டும் மோதிக் கொண்டால் இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட மாட்டாது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சிறுவர்களின்...

மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளுக்குரியவர்கள் எத்தனை வயதுக்குரியவர்கள் என்பதை தீர்மானிக்கவே பல பரிசோதனைகள் நடத்தப்படவேண்டும். அத்துடன் இந்த எலும்புக்கூடுகள் எந்தக் காலப்பகுதிக்குரியவை என ஆய்வுசெய்யப்படவேண்டும்.

மன்னார் மாவட்ட நீதவான் ஆனந்தி கனகரட்ணம் மேற்பார்வையில் அநுராதபுர பொது வைத்தியசாலை மருத்துவ அதிகாரி மற்றும் பேராதனை பல்கலைக்கழக மண் ஆய்வாளர் முன்னிலையில் மனிதப்புதைகுழி தோண்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளில் பத்து பொலிஸாரும் ஈடுபட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உழவர்...

நேற்றைய தினம் முத்திரை மற்றும் கடிதவுறையினை பிரதமர் டி.எம்.ஜயரட்ன வெளியிட்டு வைத்தார்.

இந்நிகழ்வு வடமாகாண அஞ்சல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் நடைபெற்றது.

வடமாகாண அஞ்சல் திணைக்களத்தின் பிரதி அஞ்சல் மா அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக பிரதமர் டி.எம்.ஜயரட்ன கலந்துகொண்டு உழவர்களின் பெருமைகளை வெளிப்படுத்துவதாக அமைந்த 5, 25 ரூபா பெறுமதியுடைய முத்திரைகளையும் கடிதவுறையினையும் வெளியிட்டு வைத்தார்.

இந்நிகழ்வில் நல்லை ஆதீன குருமுதல்வர், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, இலங்கை தபால் மா அதிபர் ரோஹான அபேயரத்ன, யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## மூன்று...

பகுதியில் உள்ள மூன்று தேவாலயங்கள் மீதே இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

குறைந்தபட்சம் 200 பேர் கொண்ட கும்பல் 20 இற்கும் அதிகமான பௌத்த மதகுருமார் தலைமையில் தமது வழிபாட்டின் போது வந்து, இரு தேவாலயங்களை அடுத்தடுத்து தாக்கியதாக அந்த தேவாலயங்களின் போதகர்கள் பி.பி.சி.யிடம் கூறியுள்ளனர்.

ஜன்னல்கள், இசை உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருட்களை அவர்கள் அடித்து நொருக்கியதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். ஒரு பௌத்த மதகுரு தன்னை இழிவான வார்த்தைகளால் திட்டி, கொன்றுவிடப்போவதாக மிரட்டியதாக அஸம்பிளி ஒப் கோட் திருச்சபையைச் சேர்ந்த மதபோதகரான பாஸ்டர் சிந்தக பிரசன்ன பி.பி.சி.யிடம் கூறினார்.

தம்மீது சனிக்கிழமை இரவே தாக்குதல் நடக்கலாம் என்று பொலிஸார் எச்சரித்திருந்ததாகவும், சம்பவம் நடந்தபோது பொலிஸார் ஸ்தலத்தில் இருந்தாலும், அவர்கள் பௌத்தகுருமாரைத் தடுக்க எதுவும் செய்ததாகத் தெரியவில்லை என்றும் அவர் கூறினார்.

பொலிஸாரின் செயற்படாமையை ஒப்புக்கொண்ட பொலிஸ் பேச்சாளரான அஜித் றோகண பொலிஸ்குழு மிகவும் சிறியதாக இருந்ததாகவும் கூறினார்.

சம்பவம் குறித்த வீடியோக்கள் ஆராயப்பட்டு சட்டத்தை மீறியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

## சமூகவிரோத...

பார்வையிட சிறைச்சாலை அனுமதித்து இருக்கிறது.

அவர்கள் சிலரிடம் முதலமைச்சர் கேட்டாராம். நீங்கள் என்ன குற்றம் செய்தீர்கள் என, ஒருவர் சொன்னாராம் கஞ்சா கடத்தியதாக மற்றவர் சொன்னாராம் தூள் கடத்தியதாக, இன்னும் ஒருவர் பாலியல் பலாத்காரம் கொலை போன்ற குற்றச்சாட்டுக்களை சொன்னாராம்.

தாம் கொண்டு போன 40 பொதிகளில் தம்மைச் சந்தித்த இந்தக் கைதிகளுக்கு கொடுத்தது போக மிகுதியை அரசியல் கைதிகளிடம் கொடுக்கும்படி கூறிவிட்டு முதலமைச்சர் குழு திரும்பியிருக்கிறது. அவற்றை அரசியல் கைதிகளிடம் கொண்டுபோய் சேர்த்த சிறை அதிகாரிகளிடமே அவற்றை திருப்பி அனுப்பி இருக்கிறார்கள் தமிழ் அரசியல் கைதிகள். கொடுத்த பொதிக்குள் ஒரு லட்டு, ஒரு வடை, ஒரு சாரம் என்பன இருந்ததாக தெரிய வருகிறது.

இந்த நிலையில் தம்மோடு தொடர்பு கொண்ட முதலமைச்சர் அலுவலகத்திற்கு தம்மை சந்திப்பது குறித்தும், அதற்கு எவ்வாறு அனுமதி கோர வேண்டும் என்பது குறித்தும், தெளிவாக விளங்கப்படுத்தி இருந்ததாகவும், அவற்றிற்கு எல்லாம் தலையாட்டிய முதலமைச்சர் அலுவலகம் கடைசியில் தம்மைச் சந்திப்பதை கோட்டை விட்டு, சமூக விரோத குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகி தடுத்து வைக்கப்பட்டு இருக்கும் 40 கைதிகளில் தெரிவு செய்யப்பட்ட சிலரை சந்தித்து தமக்கு லட்டும் வடையும் சாரமும் அனுப்பி விட்டு முதலமைச்சர் குழு திரும்பி விட்டதாக மகசீன் சிறையில் தடுத்து வைக்கப்பட்டு இருக்கும் 125 தமிழ் அரசியல் கைதிகள் கவலை வெளியிட்டு உள்ளனர் என அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது.

# தூதுவரை அழைத்து எதிர்ப்பை வெளியிடோம்

## என்கிறது வெளிவிவகார அமைச்சு

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சல் ஜே.சிஸனை அழைத்து எதிர்ப்பை வெளியிடப் போவதில்லை என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. அண்மையில் அமெரிக்க இராஜதந்திரிகள் யுத்த வலயத்திற்கு சென்றிருந்த போது வெளியிடப்பட்ட டுவிட்டர் தகவல்கள் குறித்து அரசாங்கம் அதிருப்தி வெளியிட்டிருந்தது.

இராணுவத்தினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உயிரிழந்த இடம் என குறித்த டுவிட்டர் புகைப்படத்தில் அமெரிக்கத் தூதரகம் தெரிவித்திருந்தது. எனினும், இந்தச் சம்பவம் தொடர்பில் அமெரிக்கத் தூதுவரை அழைத்து எதிர்ப்பை வெளியிடப் போவதில்லை என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த டுவிட்டர் தகவல்கள் குறித்து விளக்கம் கோரப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். முன்னதாக அமெரிக்கத் தூதுவரை அழைத்து அரசாங்கம் எதிர்ப்பை வெளியிடும் என ஊடகங்களில் தகவல் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யானை சின்னத்தை கைவிட நிபந்தனை விதிக்கிறார் ரணில்

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபை தேர்தலில், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கின்ற பிரபல கட்சிகளான சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி, ஜே.வி.பி., ஜனநாயக மக்கள் முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய கட்சிகள் ஒன்று சேர்ந்து போட்டியிடலாம். இதற்காக யானை சின்னத்தைக் கைவிட்டு பொதுச் சின்னத்தை ஏற்றுக்கொள்ள நாம் தயார். ஆனால், சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் இந்த யோசனைக்கு இதுவரையில் உடன்படுவதாகத் தெரியவில்லை. இந்தக் கட்சிகளும் நம்முடன் கூட்டிணைவார்களாயின், நாம் ஒன்று சேர்ந்து இந்த அரசாங்கத்தை விரட்டியடிக்கலாம். நீங்கள் இந்தக் கட்சிகளுடன் இதுபற்றி உரையாட வேண்டும்.

இது நடக்குமானால் 2010 ஆம் வருட ஜனாதிபதி தேர்தல் காலத்தையொட்டிய எதிரணி கூட்டணியை ஏற்படுத்தலாம் என ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கரமசிங்க, ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசனிடம் தெரிவித்துள்ளார்.

மனோ கணேசனும், ரணில் விக்கிரமசிங்கவும் நேற்று முன்தினம் முற்பகல் சந்தித்து எதிர்வரும் மாகாணசபை தேர்தல் தொடர்பாக கலந்துரையாடினர். கொழும்பு எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பு, இரு கட்சித் தலைவர்களுக்கும் இடையில் மாத்திரமே இடம்பெற்றது.

இதன்போது, தமது கட்சி இத்தேர்தலில் மேல்மாகாணத்தில் தனித்து ஏணி சின்னத்தில் போட்டியிட எடுத்துள்ள முடிவு தொடர்பாக மனோ கணேசன், ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேரடியாக விளக்கி கூறினார். தமது கட்சிக்கும், ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையில் இருக்கின்ற பாரம்பரிய உறவு தொடர்ந்து இருக்கும் என்றும், ஆனால், எதிர்வரும் தேர்தலில் பொது எதிரணி உருவாகாதபட்சத்தில்,



தனித்து போட்டியிடுவதைத் தவிர தமக்கு வேறு வழியில்லை எனவும் மனோ கணேசன், ரணில் விக்கிரமசிங்கவுக்கு எடுத்து கூறினார்.

ஜனநாயக மக்கள் முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் தொடர்ந்து இணைந்து செயற்படுவதையே தாம் விரும்புவதாகவும், இந்த தேர்தலிலும் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதை தான் பெரிதும் விரும்புவதாகவும், அதன் மூலமாகவே இந்த அரசாங்கத்தை வி[illegible] முடியும் என்றும் ரணில், மனோவிடம் கூறினார். அத்துடன்

பொது எதிரணிக்கு தாம் தயார் என்றும், ஜனநாயகக் கட்சி, ஜே.வி.பி., ஜனநாயக மக்கள் முன்னணி உட்பட ஏனைய கட்சிகளுடன் இணைந்து பொதுச்சின்னத்தில் போட்டியிட முடியும் என்றும், அதற்கான அரசியல் சூழல் உருவாக்கப்பட எதிர்வரும் தினங்களில் உழைக்குமாறும் ரணில் மனோவிடம் கேட்டுக்கொண்டார்.

## வெட்டுக்காயத்துடன் மீட்பு

(வடமராட்சி)

நெல்லியடி மாலுசந்தி முத்துமாரியம்மன் கோயில் வீதியில் வெட்டுக்காயங்களுடன் ஆண் ஒருவர் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த இரத்தினசிங்கம் இரதீஸ் (வயது - 24) என்பவரே நேற்று இரவு 8.30 மணியளவில் வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (12)

# வவுனியா சங்க கிளையொன்றில் காலாவதியான சீனி முடை

(வவுனியா)

பொங்கல் கால விற்பனைக்காக சுந்தரபுரம் கிளையினால் சீனி தேவை என சங்கத்தின் தலைமையகத்திற்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டதையடுத்து, பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் களஞ்சியசாலையில் இருந்து கடந்த 7 ஆம் திகதி சுந்தரபுரம் கிளைக்கு 5 மூடை சீனி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் சங்கத்தின் முகாமையாளர் இரவு 7 மணிக்கு சீனி மூடைகள் வந்தமையால் அதனை இறக்கி விட்டு மறுநாள் ஏற்கனவே இருந்த சீனியை விற்பனை செய்துள்ளார்.

இந்தநிலையில் சீனி இறக்கப்பட்டு இரண்டு நாட்களின் பின்னர் சுந்தரபுரம் சங்கக் கிளைக்கு பரிசோதனைக்காக சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், அங்கு உடைக்கப்படாமல் இருந்த 5 மூடை சீனியும் காலாவதியாகியுள்ளதை கண்டுபிடித்துள்ளனர்.

இதனையடுத்து சுந்தரபுரம் கிளையின் முகாமையாளருக்கு எதிராக வவுனியா நீதிமன்றத்தில் இன்றையதினம் பிரசன்னமாகுமாறும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து அறிவித்தல் வழங்கியுள்ளனர்.

# வெள்ளைவான் கடத்திய பெண் 5 மணிநேரத்திற்குப் பின் விடுவிப்பு

பினான்ஸ் நிறுவனமொன்றில் கடமையாற்றிய இளம் பெண்ணொருவர் வெள்ளை வானொன்றில் கடத்தப்பட்டு சுமார் ஐந்து மணித்தியாலங்களுக்குப் பின் சன நடமாட்டமில்லாத இடமொன்றில் கைவிட்டுச் சென்ற சம்பவமொன்று பண்டாரவளைப் பகுதியில் தோவை என்ற இடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

கடத்தப்பட்ட பெண் வெலிமடைப் பகுதியில் பினான்ஸ் நிறுவனமொன்றில் உத்தியோகத்தராக கடமையாற்றி வருபவராவார். இப்பெண் வெள்ளை வானொன்றில் கடத்தப்பட்டு மயக்கமுறச் செய்யப்பட்டார். அதன் பின் அப் பெண் மயக்க நிலையிலேயே தோவை என்ற இடத்தில் கைவிடப்பட்டுள்ளார்.

அவ்வழியாக வந்த சிலர் பாதை ஓரத்தில் கிடந்த பெண்ணை பண்டாரவளை அரசினர் மருத்துவ மனையில் அனுமதித்தனர்.

அங்கு அளிக்கப்பட்ட சிகிச்சையின் பின்னர் அப் பெண் சுகம் பெற்று தமது கணவருக்கு அறிவித்துள்ளார். கணவர் வந்ததும் இருவருமாக பண்டாரவளை பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துவிட்டு வீடு திரும்பினர்.

தம்மைக் கடத்தியவர்கள் யார் என்பது பற்றி தமக்குத் தெரியாதென்றும் ஆனால், தாம் மூன்று பேரினால் வெள்ளை வானொனறில் கடத்தப்பட்டேன் என்பது தனக்கு நினைவிருப்பதாக பொலிஸ நிலையத்தில் செய்யப்பட்ட புகாரில் தெரிவித்துள்ளார்.

# உத்தியோகப்பற்றற்ற பொலிஸாக இயங்கவுள்ள சிங்கள ராவய

(கொழும்பு)

நாட்டின் உத்தியோகப் பற்றற்ற பொலிஸாக இயங்கப் போவதாக சிங்கள ராவய அமைப்பு அறிவித்துள்ளது. ஊழல் மோசடிகளில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

அரசாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் மேற்கொள்ளப்படும் ஊழல் மோசடிகளுக்கு எதிராக பேரணி ஒன்றை நடாத்த உள்ளதாக சிங்கள ராவய அமைப்பின் தேசிய அமைப்பாளர் அக்மீமன தயாரட்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகையிலிருந்து கொழும்பு வரையில் விசேட பேரணியொன்று நடத்தப்படும். அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் பாரியளவிலான குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசாங்க நிறுவனங்கள் பாரியளவில் நட்டமடைவதற்கு வீண் விரயம் மற்றும் ஊழல் மோசடிகளே காரணம் என கோப் ஆணைக்குழு அறிவித்துள்ளது. ஊழல் மோசடிகளுக்கு எதிராக குரல் கொடுக்க நாட்டில் எந்தவொரு அமைப்[illegible] கிடையாது எனவே அந்தப் பொறுப்பினை சிங்கள ராவய அமைப்பு ஏற்றுக்கொள்ள உள்ளது.

மிருகவதை, சட்டவிரோத மதமாற்றம், தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அழிக்கப்பட்டமை, முஸ்லிம் பெண்கள் ஹபாயா அணிதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு எதிர்ப்பை வெளியிட்டு பேரணி நடத்தப்பட உள்ளது. அரசியல்வாதிகள் சிங்கள மக்களுக்காக குரல் கொடுப்பதில்லை எனவும், அரசியலில் ஈடுபடும் திட்டம் தமது அமைப்பிற்கு கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# போதைப்பொருள் பாவனை; ஒன்றரை இலட்சம் பேர் கைது

போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனையுடன் தொடர்புடைய ஒரு இலட்சத்து 48 ஆயிரத்து 966 பேர் கடந்த மூன்று வருடங்களில் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து ஒரு இலட்சத்து 77 ஆயிரத்து 133 கிலோ நிறையுடைய போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப்பிரிவினர் தெரிவித்தனர்.

2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இறுதி வரையிலான காலப்பகுதியில் நாட்டின் சகல பாகங்களிலும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போதே இவ்வாறு பெருந்தொகையான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் போதைப பொருள் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த மூன்று வருடங்களில் 358 கிலோ நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டதுடன் சம்பவம் தொடர்பில் 51334 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அதே போல 176718 கிலோ நிறையுடைய கஞ்சா போதைப்பொருள மீட்கப்பட்டுள்ளதுடன் அச்சம்பவத்துடன் தொடர்புடைய 97 601 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

மேலும் கொக்கெயின், ஹேஸ் உள்ளிட்ட வெவ்வேறு வகையான 30 கிலோ நிறையுடைய போதைப் பொருட்கள் மீட்கப்பட்டதுடன் அவற்றை விற்பனை செய்த மற்றும் பாவனைக்குட்படுத்திய 31 பேரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட ஒன்றரை இலட்சத்து 48 ஆயிரத்து 966 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதுடன் போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனையை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்

# கொழும்பு மத்தி அமைப்பாளராக ஹிருனிகா நேற்று நியமனம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மத்தி அமைப்பாளராக முன்னாள் அமைச்சர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் மகள் ஹிருனிகா பிரேமச்சந்திர நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை முன்னாள் அமைச்சர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மகளான ஹிருனிகா பிரேமச்சந்திர சந்தித்து கலந்துரையாடியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கொழும்பு மத்தி அமைப்பாளராக தன்னை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டதாக அவர் மேலும் தெரிவித்தார். இந்த நியமனத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இடம்பெறவுள்ள மாகாணசபை தேர்தல்களிலும் ஹிருனிகா பிரேமச்சந்திர போட்டியிடவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஜனவரி 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.